# வைகறை வெளிச்சம்

மே-2025 ■ ஷவ்வால்-துல்கஃதா 1446


வரலாற்றுத் தடத்தில் ...
இஸ்லாமியப் பார்வையில்...
நிகழ்வுகளின் உண்மையான மறுபக்கம்...
படியுங்கள்... பரப்புங்கள்...
பாதுகாத்து வையுங்கள்...


- ■ தனிஇதழ் - ரூ. 40
- ■ ஆண்டுச் சந்தா - உள்நாடு - ரூ. 480
- ■ வெளிநாடு - ரூ. 5000

**வைகறை வெளிச்சம்**
சந்தா செலுத்துங்கள்

VAIGARAI VELICHAM
62889509

Collect payments from any of these apps


மனிதர்களே!
நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்தே படைத்தோம்; நீங்கள் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளும் பொருட்டு. பின்னர், உங்களைக் கிளைகளாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கினோம்; (ஆகவே) உங்களில் எவர் மிகவும் பயபக்தியுடையவராக இருக்கின்றாரோ, அவர்தாம் அல்லாஹ்விடத்தில், நிச்சயமாக மிக்க கண்ணியமானவர். நிச்சயமாக அல்லாஹ் நன்கறிபவன், (யாவற்றையும் சூழந்து) தெரிந்தவன்.

அல்குர்ஆன்-49:13.

## உள்ளே...!





பெஹல்காம் தாக்குதல்...!
யாரால்...? யாரால்...? - 7

**40 CRPF** வீரர்கள் புல்வாமா தாக்குதல் - 12

சமூக ஊடகங்கள்
வெறுப்புரைகளுக்கான ஒரு வாகனம் - 24

சிறுகதை - 36

வடகாடு சாதி வெறியாட்டம்:
விடுதலைச் சிறுத்தைகள் கட்சி அறிக்கை! - 42

பிராமிணிஸ்ட்டுகள் குண்டு வைத்தார்கள்
முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள் - 44

நான் மதீனாவில் கண்டதும் கேட்டதும் - 49

சிலுவைப் போர் 2.0 - 53

சமூக வலைதளங்களின் பொய்யும் நமது
தகவலறியும் உரிமைச் சட்டத்தின் போரும்... - 56

மகளிர் மன்றம் - 59

மருத்துவம் - 62

பெருநாள் சந்திப்பு - 64

தலையங்கம் - 66



All disputes arising out of any publications in this monthly will come under the jurisdiction of chennai courts only

vaigarai velicham official



# புல்வாமாவும் பெஹல்காமும் யாரால்...? யாரால்...?

**வைகறை வெளிச்சம், அக்டோபர் 2018 இதழில் ஒரு செய்தியை வெளியிட்டோம்.**

அதன் தலைப்பு. 2019 தேர்தல் என்ன சார் உங்கள் திட்டம். அந்தத் திட்டத்தின் ஒரு பகுதிதான், கஷ்மீரை மையமாகக் கொண்டு ஒரு தாக்குதல், பாகிஸ்தான் மீது ஒரு தாக்குதல், பாகிஸ்தானில் பெருத்தச் சேதம் ஏற்பட்டதாக ஒரு பயங்கரப் பிரச்சாரம், வெற்றி முழக்கம் இறுதியில் - தேர்தல் - வெற்றி என்பதாகும்.

நாம் குறிப்பிட்டதை ஏராளமானோர் தங்கள் முகநூல் பதிவுகளில் வெளியிட்டார்கள்.

முடிவில் நாம் குறிப்பிட்டதே நடந்தது. ஆனால், சில மாற்றங்களுடன். ஒரு தாக்குதல், அதில் நமது இந்திய நாட்டின் தன்மானத்தையே கேள்விக்குறியாக்கும் சிலபல நிகழ்வுகள்.

அவற்றுள் ஒன்று, இந்திய எல்லைக்குள் புகுந்து நமது இராணுவப் பரிவாரத்தைத் தாக்கிவிட்டார்கள். எந்த அளவுக்கு நாம், நமது பாதுகாப்பு ஏற்பாடுகள், இவையெல்லாம், பலவீனமாக இருந்தால் இப்படி எல்லை தாண்டி வந்து நமது இராணுவப் பரிவாரத்தை தாக்க முடியும்.

எல்லையில் ஊடுருவலைத் தடுத்து விட்டோம், என்ற பா.ஜ.க.வின் பிரச்சாரம் எவ்வளவு பொய்யானது.

அடுத்து நமது இராணுவத்திற்கே சவால் விடும் ஒரு கேள்வி. இப்படி எல்லைத் தாண்டிவந்து இராணுவத்தையே தாக்கிடும் அளவிற்கு நமது இராணுவத்தினர், இழித்தவாயர்களாக இருந்தார்களா? - நிச்சயமாக இல்லை.

பின்னர் நடந்த விரிவான ஆய்வில் என்ன தெரியவந்தது. அது 2019 தேர்தலை மையமாகக் கொண்டது என்பது நிரூபனமானது.

ஆனால், இந்த உண்மைகள் வெளியே வரும்போது இவர்கள் ஆட்சியைப் பிடித்து அனைத்து அடாவடித்தனங்களையும் கட்டவிழ்த்து விட்டுவிட்டார்கள்.

> பெஹல்காமில் உயிரிழந்த 26 அப்பாவிகளுக்கும் வைகறை வெளிச்சம் சார்பில், ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துகொள்கிறோம். உங்களுக்கு உண்மையான நீதி கிடைக்க வேண்டும். அதுவரைக்கும் எங்கள் நீதிக்கான எழுத்துப் போர் தொடரும். எத்தகையதொரு நீதி வேண்டும் என்பதை உள்ளே சுட்டிக் காட்டி இருக்கின்றோம். **- ஆசிரியர் குழு**

தாக்குதல் நடந்தது 14.02.2019. நான்கு வருடங்களாகிவிட்டன. உண்மைகள் வெளியே வரும்போது, அன்று கொலை செய்யப்பட்ட நமது இராணுவ வீரர்களுக்கு (40 பேருக்கு) நீதி கிடைக்கவில்லை.

**இங்கே நீதி என்றால்,**

உண்மையிலேயே தாக்குதல் நடத்தியவர்களை கண்டுடெடுத்து கைது செய்து, கையில் வைத்துக்கொண்டு அவர்கள் சேர்ந்த நாடு, அல்லது அமைப்பு ஆகியவற்றைத் தெளிவாக அடையாளப்படுத்திட வேண்டும். அதன்பின் இந்தக் குடும்பங்களுக்கான இழப்பீட்டுத் தொகையை “Blood Money”-ஐ வசூலித்து இந்தக் குடும்பங்களுக்குக் கொடுக்க வேண்டும். இந்தக் குடும்பங்கள் விரும்பும் தண்டனையை அந்தக் கொலைகளைச் செய்தவருக்கு கொடுக்க வேண்டும்.

இதற்கு நம்முடைய உளவுத்துறைகளைப் பயன்படுத்திட வேண்டும். உள்நாட்டு, வெளிநாட்டு உளவுத்துறைகள், இதற்காக முழு வீச்சில் பயன்படுத்தப்பட வேண்டும்.


vaigarai velicham official

பெஹல்காம் தாக்குதலை நடத்திய உண்மையான குற்றவாளிகளை அடையாளங் கண்டு அவர்களைக் கைது செய்யாமல், வெறுமனே சில தடைகளையும், சில தண்ட னைகளையும் அறிவித்துக் கொண்டிருப்பது கோழைத்தனம்.

முதன் முதலில் இப்படியொரு தாக்குதல் நடக்கப் போகின்றது என்ற தகவலைத் தரத் தவறிய உளவுத்துறையை, இனம் கண்டு தண்டிக்க வேண்டும்.

தி ஹிந்து நாளிதழில், *24.04.2025* இதழில் அப்படியொரு உளவு நாட்டிற்குத் தரப்பட்டி ருந்தது எனக்கூறுகின்றது. அப்படியிருந்தும் தடுக்கத் தவறியது உள்துறை அமைச்சர், பாதுகாப்புத்துறை அமைச்சர் பதவி விலகியிருக்க வேண்டும். ஆனால் அவர்கள், தங்களை எதிர்ப்பவர்கள் மீது நடவடிக்கை, உண்மையைச் சொல்பவர்கள் மீது பொய் வழக்கு எனத் தங்களைக் காப்பாற்றிக் கொண்டிருக்கின்றார்கள்.

**இதற்கு முன்னால் நடந்த தாக்குதல்களில் உண்மையான குற்றவாளிகளைக் கண்டிபிடுப்பு!**

இதற்கு முன்னால் நடந்த தாக்குதலில் குறிப்பிடத்தக்கது. புல்வாமா தாக்குதல். அதில், உண்மையான குற்றவாளிகளை கண்டுபிடிக்க மேற்கொண்ட முயற்சியில் அது உள்ளிருப்பு வேலை என்பது கண்டுபிடிக்கப்பட்டது. பின்னர் தேசிய நலன் கருதி மொத்த விசாரணையும் மூடப்பட்டது.

முன்னாள் கஷ்மீர் ஆளுநர், சத்தியபால் மாலிக் அவர்கள் BJP வாக்குகளுக்காக ஏற்பாடு செய்தது என்பதைத் தெளிவாகவே குறிப் பிட்டார். உண்மையைச் சொன்னார் என்பதற் காகவே அவர்மீது அத்தனை கெடுபிடிகளையும் கட்டவீழ்த்துவிட்டார்கள்.

அதுகுறித்து, இன்னும்பல தகவல்களை வழக்கறிஞர்கள், நந்தினி, B.A.B.L., நிரஞ்சனா B.A.,B.L., ஆகியோர் NIA என்ற தேசியப் புலனாய்வு முகைமையிடம் தந்த மனுவை இங்கே தந்துள்ளோம். படியுங்கள். உண்மையை ஊறறியச் செய்யுங்கள்.

யார் புல்வாமா தாக்குதலை ஏற்பாடு செய்தவர்களோ அவர்கள் மீது இப்போதும் சந்தேகம் எழுகின்றன என பல சமூக ஆர்வலர்கள் குறிப்பிட்டார்கள்.

ஆட்சியிலிருப்பவர்கள் - குண்டு வெடிப்பு களையே நடத்தி ஆட்சிக்கு வந்தவர்கள் என்பதை நாமறிவோம். இதில் பலநூறு பக்கங்களை நாம் வெளியிட்டுள்ளோம். அவற்றைப் படியுங்கள்.




பெஹல்காம் தாக்குதலின் முழு உண்மையும் வெளியே வரச்சில காலங்களாகும். பொறுத்திருப்போம்.

**அரசியல் ஆதாயத்திற்காக பெஹல்காம் தாக்குதல்**

இப்படியொரு கேள்வியைக் கேட்டால், ஆம்! நிச்சயமாக என்பதே பதில்

அதற்கான ஆதாரம் - சவூதியில் தன் பயணத்தை முடித்துக்கொண்டு இந்தியா வந்த பிரதமர் மோடி பிஹாருக்குச் சென்று ஓட்டுக் கேட்டார்.

தேர்தல் பிரச்சார மேடையில் அங்கே நின்று கொண்டு சர்வதேசத்திற்கும் பெஹல்காம் பற்றி செய்தி சொன்னார். வீர வசனம் பேசினார்.


தீவிரவாதிகளைக் கண்டுபிடித்துத் தண்டிப் போம் என்பது புல்வாமாவில் என்ன நடந்தது என்பதை ஆராய்ந்தால் தெளிவாகி விடும். யாரும் தண்டிக்கப்படமாட்டார்கள். உண்மையானக் குற்றவாளிகள், கண்டுபிடிக்கவே மாட்டார்கள்.

**பாதுகாப்பு ஏன்? இல்லை**

பெஹல்காம், ஒரு முக்கியமான சுற்றுலாத் தலம். அதில் அதிகமான மக்கள் கூடுகின்றார்கள் எனத் தெரிந்தும், ஏன் பாதுகாப்பு ஏற்பாடுகள் இல்லை. இந்தக் கேள்விக்கு அனைவரும் அரசின் பொடுபோக்குத்தனம் என்றே கூறுகின்றார்கள்.

இதை இன்னொரு கோணத்திலும் பார்க்க வேண்டும். இவர்கள் இந்தியாவில் பல குண்டு வெடிப்புகளை நடத்திவிட்டு அப்பாவி முஸ்லிம்கள் மீது பழியைப் போடுவதில் கைத் தேர்ந்தவர்கள்.
















இதற்கும் படியுங்கள்

**– கர்கரேயைக் கொலை செய்தது யார்? இந்திய தீவிரவாதத்தின் உண்மை முகம்.**

**– பிராமிணிஸ்ட்டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள்.**

இதனால் பெஹல்காமில் ஏன் ஒருவர்கூட பாதுகாப்பிற்கு இல்லை என்றால், காரணம் பாதுகாப்பு பலமாக இருந்தால் அவர்கள் உண்மையான குற்றவாளிகளை அங்கேயே கொன்றிருப்பார்கள். அல்லது சுற்றி வளைத்துப் பிடித்திருப்பார்கள். அல்லது உண்மையினை உலகுக்குத் தெரிவித்திருப்பார்கள். கள்வன் கையும் களவுமாகப் பிடிபட்டிருப்பான்.

அங்கே பாதுகாப்பு இல்லை என்பது எதைக் காட்டுகின்றது. அவர்களைத் தப்பிக்க விட்டுத் தேட வேண்டும் என்ற திட்டத்தைத்தான்.

இதில் இன்னொரு கேள்வியும் எழுகின்றது. அது நமது பாதுகாப்பும், உளவுத்துறையும் அத்துணை பலஹீனமானவைகளா? இல்லை நிச்சயமாக இல்லை. இருந்தும் ஏன் அவர்களைப் பிடித்திருக்கவில்லை. அவர்களைத் தப்பிக்க விட்டு, பின் தேடிட வேண்டும் என்பதனால்தான் என்ற பதிலையேக் காட்டுகின்றது.

ஆக இதிலுள்ள முழு சூட்சியமும் வெளியே வரும்போது பல மாநிலங்களில் தேர்தல் முடிந்து, முடி சூட்டிக்கொள்வார்கள் இவர்கள்.

என்றும் உண்மை வெளிப்பட்டே தீரும் - காத்திருப்போம்.

**வைகறையின் அளவுகோல்...**

நாட்டில் மட்டுமல்ல, உலகில், எந்தப் பகுதியிலும் சரி, அப்பாவிகள் கொலை செய்யப்படுகின்றார்கள் என்றால், அதில் நிச்சயமாக முஸ்லிம்களின் கை இருக்காது.

அல்லாஹ்வையும் - மறுமை நாளையும் எள் மூக்கின் அளவு நம்புகின்றவர்கள் நிச்சயமாக எந்த அப்பாவியையும் கொலை செய்யமாட்டார்கள். இதே அளவுகோலில் நாம் பல ஆய்வுகளை மேற்கொண்டுள்ளோம். அனைத்தும் இன்றளவும் உண்மை என்றே நிரூபிக்கப்பட்டுள்ளது.

நமது அளவுகோலும், ஆய்வுகளும் நாடாளுமன்ற தாக்குதலிலிருந்தே தொடக்கம்.

அத்தனையும் இலக்கியங்களாகவே தந்திருக்கின்றோம்.

**Email -** இதுபோன்ற உள்ளிருப்பு வேலைகளின்போது ஒரு Email-ஐ அனுப்பி விடுவது. ஒரு முஸ்லிம் பெயர் கொண்ட ஒரு அமைப்பு உடனேயே பொறுப்பேற்றுக் கொண்டது என்பது இந்த உள்ளிருப்பு வேலைகளை ஏற்பாடு செய்பவர்களின் கைவந்த கலை.

அப்படி மும்பைத் தாக்குதலின்போது Email- அனுப்பியவர்தான் Keithkeywood ஆவர். Email அனுப்பினார் என்பது கண்டுபிடிக்கப் பட்டது. ஆனால், அவர்மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மாறாக, அவர் அமெரிக்கர் என்பதை அறிந்தும், அவர் மிகவும் பத்திரமாக அமெரிக்கா அனுப்பப்பட்டார்.

இப்போதும் இந்த Email எங்கிருந்து வந்தது. எந்த அளவுக்கு உண்மையானது என்பதை எந்த ஆய்வுக்கும் உட்படுத்தமாட்டார்கள்.


vaigarai velicham official

# பெஹல்காம் தாக்குதல்...! யாரால்...? யாரால்...?



**கா**ஷ்மீர் பெஹல்காமில் நடந்த தாக்குதல் கோழைகள் செய்யக்கூடிய செயல். அப்பாவி பொதுமக்களை சுட்டுக்கொல்வோர் யாராக இருந்தாலும், கடுமையான நடவடிக்கைக்குரிய குற்றமாகத்தான் அதனை அணுக வேண்டும். சாதாரண மக்களுக்கும் காஷ்மீரில் நடக்கிற பிரச்சனைகளுக்கும் என்ன சம்பந்தம்? சுற்றுலா பயணிகளை கொல்வதால் இந்த நாட்டில் என்ன மாற்றம் நிகழப்போகிறது?

இப்போது வெறுமனே தாக்குதலுக்கு காரணம் பயங்கரவாத லஸ்கர்-இ- தொய்பா என்கிறார்கள். ஆனால் அது உண்மையல்ல. அதனைத்தாண்டி தாக்குதலில் ஈடுபட்டவர் களுக்கு வேறு சில நோக்கங்கள் இருக்கின்றன இவர்கள் பணம் வாங்கிக் கொண்டு செயல்படும், பயங்கரவாத கூலிப்படை என்றுதான் கூற வேண்டும்.

இவர்கள் காஷ்மீர் மக்கள் நலனுக்காகவும் செயல்படவில்லை, இஸ்லாமிய மக்கள் நலனுக் காகவும் செயல்படவில்லை, பயங்கரவாத கூலிப்படையாக இவர்கள் பலருக்கு செயல் பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத்தான் நடந்த சம்பவங்கள் காண்பிக்கின்றன.

இந்த கூலிப்படைக்கு பின்னணியில் செயல்படுவது யார் என்பதுதான் இப்போது கண்டுபிடிக்கப்பட வேண்டிய விஷயம்.

முதலில் இந்த சம்பவத்துக்கு தொடர்புடைய யாராக இருந்தாலும் தண்டிக்கப்பட வேண்டும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் கிடையாது. ஆனால் இந்த சம்பவத்துக்கு யார் பொறுப்பு என்ற கேள்வி எழுகிறது.

ஆகஸ்ட் 5, 2019இல் காஷ்மீர் மாநிலத்தின் சரத்து 370 (Article 370) நீக்கப்பட்டது. காஷ்மீரை இரண்டாகப் பிரித்தார்கள்.

பிரித்துவிட்டு காஷ்மீர் மாநிலத்தின் பாதுகாப்பை நேரடியாக ஒன்றிய அரசு கையில் அதாவது மோடி அரசின் கட்டுப்பாட்டில் கொண்டுவந்தார்கள்.

இன்றைக்கு வரை காஷ்மீரில் தேர்தல் நடந்திருந்தாலும் அங்கு ஒரு முதலமைச்சர், தேர்ந்தெடுக்கப்பட்ட முதலமைச்சர் இருந்தாலும் நேரடியாக காஷ்மீரின் பாதுகாப்பு, உள்துறை அமைச்சகத்தின் கட்டுப்பாட்டில் தான் இருக்கிறது.

1. அமித்ஷாதான் அதன் நேரடி பொறுப்பாளர். அடுத்து,

2. இராஜ்நாத் சிங் தான் நேரடி பொறுப்பான நபர். மற்றும்

3. மோடியும் அதற்கு நேரடி பொறுப்பான நபர்.

இவர்கள் மூன்று பேர் பொறுப்பில் தான் இன்றைக்கு காஷ்மீரின் பாதுகாப்பு இருக்கிறது, அப்படியான நிலையில் காஷ்மீரில் சுற்றலா பயணிகள் சுமார் 2000 பேர் கூடும் இடத்தில், உலகம் முழுவதும் சுற்றலா பயணிகள் வந்து செல்லக்கூடிய இடத்தில் இவ்வளவு பெரிய தாக்குதல் நடந்திருக்கிறது.

கிட்டத்தட்ட 28, 29 பேர் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

தாக்குதல் தொடங்கி முடிந்து அந்த பயங்கரவாதிகள் திரும்பச் செல்லும் வரையிலும், அந்த இடத்தில் பாதுகாப்பிற்கு ஒரு ராணுவ வீரர் கூட இல்லை.

சம்பவம் நடந்தபோதும் யாரும் வரவில்லை, சம்பவம் முடிந்த பிறகும் யாரும் வரவில்லை.

சுற்றுலா பயணிகளை காப்பாற்றியது பொதுமக்கள் என்றால் இது எதார்த்தமாக நடந்தது தானா என்பது நமக்கு சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

மதுரை, சுற்றுலா பயணிகள் வந்து செல்லும் இடம், ஆனால் மதுரையில் இப்படி ஒரு சம்பவம் நடந்தாலும்கூட அருகில் காவல் துறையினர் இருந்திருப்பார்கள், சத்தம் கேட்ட உடனேயே சம்பவ இடத்திற்கு வந்திருப்பார்கள். ஆனால் காஷ்மீர் சிக்கலுக்குள்ளான ஒரு பகுதி,

பதட்டமான சூழ்நிலை நிலவும் பகுதி, எந்த நேரம் வேண்டுமானாலும் பயங்கரவாத தாக்குதல் நடக்கும் என்கிற அளவிற்கு காஷ்மிர் முழுவதும் ராணுவத்தின் கட்டுப்பாட்டில் தான் இருக்கிறது. ஆனால் அங்கு ஒரு ராணுவ வீரர் கூட கிடையாது.

பயங்கரவாதிகள் பொதுமக்களை கொலை செய்யும்போது எந்த ராணுவ வீரரும் அவர்களை காப்பாற்ற அங்கே இல்லை. குருவியை சுடுவது போல் அப்பாவி மக்களை சுட்டுக் கொன்றிருக்கிறார்கள்.

அங்கு பாதுகாப்பு இல்லாததற்கு காரணம் யார்? அதற்கு யார்பொறுப்பு?

காஷ்மீர் மாநிலத்தின் நேரடி பாதுகாப்பை கையில் வைத்திருக்கக்கூடிய அமித்ஷாவும், மோடியும், இராஜ்நாத் சிங்-கும் பொறுப்பா? இல்லையா?

காஷ்மீரில் ராணுவத்தில் பணியாற்றிய முன்னாள் அதிகாரிகள் இன்றைக்கு பேட்டி கொடுக்கிறார்கள், முன்னர் 22 இடங்களில் பாதுகாப்பு இருக்கும். ஆனால் இப்போது இரண்டு இடத்தில்தான் பாதுகாப்பை பலப்படுத்தியுள்ளார்கள்.

கிட்டத்தட்ட ஒரு லட்சத்து எண்பத்து மூன்றாயிரம் (1,83,000) ராணுவ பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றன. அக்னிபாத் ஒரு பெரிய பிரச்சனை ராணுவத்திற்கு என இப்படி பல்வேறு குற்றச்சாட்டுகளை அரசின் மீதும், பாதுகாப்புத் துறை அமைச்சகத்தின் மீதும், உள்துறை அமைச்சகத்தின் மீதும் வைக்கிறார்கள். இப்போது இதற்கு அவர்கள் பதில் கூற வேண்டுமா? இல்லையா?

ஏற்கனவே புல்வாமா தாக்குதல் பற்றி நமக்கு தெரிந்ததே. புல்வாமா தாக்குதலில் அன்று காஷ்மீரில் ஆளுநராக இருந்தவர் சத்தியபால் மாலிக். அவர் கூறினார்,

அன்றைக்கு சிஆர்பிஎப் (CRPF) வீரர்கள் செல்வதற்குநான் விமானம் (Flight), ஹெலிகாப்டர் (Helicopter) கேட்டேன் ஆனால் உள்துறை அமைச்சகம் கொடுக்கவில்லை, இராணுவ அமைச்சகமும் கொடுக்கவில்லை. தரை வழியே செல்லச் சொன்னார்கள். அதன் காரணமாகத் தான் அந்த தாக்குதலே நடந்தது.

இந்தப் படுகொலை சம்பவத்திற்கு அரசு தான் காரணம். இதை நான் மோடியிடம் கூறியபோது வாயை மூடிக்கொண்டு அமைதியாக இருக்கச் சொன்னார், அமித்ஷாவும் இதையே கூறினார். ஆனால் எனக்கு மனசாட்சி இடம் கொடுக்கவில்லை அதனால்தான் வெளியே வந்து உண்மையை கூறுகிறேன் என்றார்.

எனில் அந்த தாக்குதலுக்கு மோடியும், அமித்ஷாவும்தான் நேரடிபொறுப்பு. இதனையும் வேண்டுமென்றே விட்டு விட்டார்களா என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

பீகாரில் அடுத்த தேர்தல் வருகிறது, வஃக்பு போராட்டம் தீவிரமாக சென்று கொண்டிருக்கிறது, உச்ச நீதிமன்றம் ஒரு பக்கம் இவர்களுக்கு நெருக்கடியை கொடுத்துக் கொண்டிருக்கிறது, எனவே இப்படி தாக்குதல் போன்ற சம்பவம் நடந்தால் தான் பிரச்சனை வேறு பக்கம் திசை திரும்பும்,

மெழுகுவர்த்தியை வைத்துக்கொண்டு தேச பாதுகாப்புக்காக இவர்கள் இறங்குவார்கள் அதனைச் சொல்லி ஊர் ஊராக கண்ணீர் அஞ்சலி,

பிணத்தை வைத்து ஒரு அரசியல் என காலம் முழுவதும், இன்றைக்கு நேற்று அல்ல தொடர்ச்சியாக பிஜேபி ஆட்சியில் இருக்கும்

போதுதான் எல்லா பிரச்சனைகளும் நடக்கின்றது.

கார்கில் தாக்குதல் நடந்தது, புல்வாமா தாக்குதல் நடந்தது,

அமர்நாத் தாக்குதல் நடந்தது, பதன்கோட் தாக்குதல் நடந்தது, பார்லிமெண்ட் தாக்குதல் நடந்தது. இவை அனைத்துமே பிஜேபி ஆட்சியில் மட்டும் எப்படி நடக்கிறது?

நமக்கு இப்போது சந்தேகம் வர ஆரம்பித்து விட்டது, இந்த சந்தேகம் வருவதற்கு முக்கிய மான காரணம் சத்யபால் மாலிக், அப்போதைய காஷ்மீர் ஆளுனர் கூறியவையே. இப்படி ஆளுனரே கூறியதற்கு ஏதாவது ஒரு இன்வெஸ்டி கேஷன் நடந்ததா? இல்லை. இந்த சம்பவங்கள் தொடர்பாக பிஜேபி, ஆர்எஸ்எஸ் (RSS) தரப்பில் இருந்து ஒரு செய்தியைக் கூட காணவில்லை.

ஆனால் இப்பொழுது மெயின்ஸ்ட்ரீம் மீடியா விலும், சமூக வலைதளங்களிலும், சில செய்திகள் வருகிறது, என்னவென்றால் ஆடைகளை கழற்றிப் பார்த்துத்தான் சுட்டார்கள் என்று ஒரு செய்தியை பரப்பிவிடுகிறார்கள். இன்றைக்கு அண்ணாமலை கூறுகிறார் முஸ்லிமா என கேட்டுத்தான் சுட்டார்கள் என்று. ஆனால் கர்நாடகத்தை சேர்ந்த மஞ்சுநாத் என்கிற நபர் பெஹல்காம் தாக்குதலில் இறந்திருக்கிறார், அவரது மனைவி பல்லவி கர்நாடக ஊடகங்களுக்கு கொடுத்த பேட்டியில் தாக்குதல் நடக்கும்போது ராணுவம் வரவில்லை,

எங்களை என் கார் ஓட்டுனர்கள் மூன்று பேர், காஷ்மீர் முஸ்லிம் இளைஞர்கள்தான் பாதுகாத் தார்கள். எங்களை காப்பாற்றும்போது பிஸ்மில்லா என்று சொல்லி இஸ்லாமியர்கள் கோஷம் போட்டுக்கொண்டு எங்களை பாதுகாத்தனர்.

இந்த காஷ்மீர் தாக்குதலில் சையது அதில் உசேன் என்கிற உள்ளூர் குதிரை ஓட்டும் ஒரு இஸ்லாமிய இளைஞர் பயங்கரவாதிகளோடு சண்டையிட்டு இறந்தும் போயிருக்கிறார். அதேபோல் கொல்லப்பட்டவர்கள் பட்டியலில் காஷ்மீர் மாநிலம் அனந்தவ மாவட்டத்தை சேர்ந்த ஹுசைன் ஷா என்ற ஒருவரையும் பயங்கரவாதிகள் கொன்றிருக்கிறார்கள். எனில் இந்த தாக்குதல் மதம் சார்ந்தது இல்லை. மொத்தத்தில் கொலை நடந்திருக்கிறதே ஒழிய, மதத்தை பார்த்து சுட்டார்கள், ஆடையை கழட்டச் சொல்லி சுட்டார்கள் என இப்படி எல்லாம் ஏன் வதந்தியைப் பரப்ப வேண்டும்? அடுத்து ராணுவ உடை அணிந்து இருந்ததாக

**“ 22-4-2025 அன்று நடந்த பெஹல்காம் தாக்குதலில் களத்திலேயே காப்பாற்றிய முஸ்லிம்கள் ”**

சொல்கிறார்கள், பைஜாமா அணிந்து ஒரு பயங்கரவாதி நிற்பதுபோல் ஒரு படம் வருகிறது, ஏன் இந்த வதந்திகள்? பொய்யை பரப்ப வேண்டும். அதனை இங்கே உள்ள இஸ்லாமியர் களுக்கு எதிராக மாற்றுவதற்கான வேலையை பிஜேபி, ஆர்எஸ்எஸ் செய்து வருகிறது, உண்மையில் இதுதான் பயங்கரவாத தாக்குதல். மிக மோசமான ஒரு அரசியல் நடவடிக்கை.

வாஹித் என்ற ஒரு இஸ்லாமிய இளைஞர் 10 பேரை தாக்குதலில் இருந்து காப்பாற்றி இருக்கிறார், காயம் பட்டவர்கள் பக்கத்தில் உள்ள பள்ளிவாசலுக்கு அழைத்துச் செல்லப்பட்டு இஸ்லாமியர்கள் உணவும், தண்ணீரும் கொடுத்து பாதுகாப்பாக வைத்து காப்பாற்றியிருக்கிறார்கள்.

நடந்த பயங்கரவாத தாக்குதலில் மேலும் இஸ்லாமியர்களுக்கு மிகப்பெரிய பேரிடி என்னவென்றால் 2024இல் மட்டும் 2 கோடியே 35 லட்சம் பேர் சுற்றலா பயணிகள் காஷ்மீருக்கு வந்திருக்கிறார்கள். அதில் 65,000 பேர் வெளிநாட்டைச் சேர்ந்தவர்கள். காஷ்மீர் மாநிலமே சுற்றுலாவை முதன்மையாக நம்பி இருக்கிற மாநிலம் 2 கோடியே 35 லட்சம் பேர் வந்தால், எவ்வளவு பெரிய வியாபாரம் அங்க நடந்திருக்கும்.

இஸ்லாமியர்கள்தான் அங்கு வியாபாரம் செய்பவர்கள். காஷ்மீர் முக்கியமான ஒரு சுற்றுலா தளம். 2000ஆம் வருடத்திற்கு பிறகு இப்போது 2025 வரை இப்படி சுற்றலா பயணிகள் மீது பெரிய தாக்குதல் ஏதும் நடக்கவில்லை.

காஷ்மீர் மக்கள் மீண்டு வந்த இந்த பொருளாதாரத்திற்கு மிகப்பெரிய அடி!

இனி 5 வருடத்திற்கு காஷ்மீர் மக்கள் எழ முடியாத அளவிற்கு நடந்திருப்பது இஸ்லாமியர் களின் பொருளாதாரத்தின் மீது தீவிரமான தாக்குதல். அவர்கள் வாழவே முடியாது, இனி பட்டினிதான் கிடக்கவேண்டும்.

அதனால்தான் அங்கு இருக்கக்கூடிய எல்லா அமைப்புகளும் சேர்ந்து எம்எம்யூ (MMU) என்ற ஒரு அமைப்பு

"முதஹிஜா மஜ்ஜில் உலமா" 40 உள்ளூர் அமைப்புகள், இஸ்லாமிய அமைப்புகள்

எல்லாரும் சேர்ந்து கடையடைப்பு போராட்டத்தை அறிவித்து காஷ்மீர் முழுவதும் கடையடைத்து, இந்த படுகொலைக்கு கண்டனம் தெரிவிக்கும் விதமாக செயல்பட்டதோடு, முக்கியமாக இந்த படுகொலை என்பது இஸ்லாத்திற்கு எதிரானது என அறிக்கை கொடுத்துள்ளார்கள்.

ஒன்றிய அரசு பாதுகாப்பை அதன் கட்டுப்பாட்டில் வைத்துள்ளது. கடந்த ஏப்ரல் எட்டாம் தேதி அமித்ஷா காஷ்மீரில் ஒரு பாதுகாப்பு தொடர்பான கூட்டம் நடத்துகிறார், பாதுகாப்பு படைகள் எந்த அளவுக்கு பயங்கரவாத தாக்குதலை எதிர்கொள்ள தயார் நிலையில் இருக்கிறார்கள், உளவுத்ததுறை எந்தளவிற்கு தயார் நிலையில் இருக்கிறது என்பதற்காக. ஆனால் அந்த கூட்டத்தில் காஷ்மீர் முதல்வர் உமர் அப்துல்லாஹ் அனுமதிக்கப்படவில்லை.

காஷ்மீர் முதல்வரை வெளியேற்றிவிட்டு கூட்டம் நடந்துள்ளது.

தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசு இருக்கிறது, ஆனால் அந்த அரசுக்கு எந்த அதிகாரமும் கிடையாது, பாதுகாப்புக்கு அவர்கள் பொறுப்பும் கிடையாது. மாநில முதல்வரையே ஒதுக்கிவிட்டு கூட்டம் நடத்துவது மேலும் சந்தேகத்தை வலுப்படுத்துகிறது.

தமிழ்நாட்டில் பாதுகாப்பு தொடர்பாக ஒரு கூட்டம் நடந்தால் உள்துறை அமைச்சர் மட்டுமா இருப்பார்? முதல்வர் இருக்க மாட்டாரா? சந்தேகம் வலுக்கிறது.

உள்ளூர் மனித உரிமை ஆர்வலர்கள், அமைப்புகள் எல்லாம் சேர்ந்து மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசு இருக்கிறது அவர்களிடம் ஆலோசனை பெற்று, பாதுகாப்பு திட்டங்களை வகுத்து செயல்பட வேண்டும் என்று சொல்லி, கையழுத்து போட்டிருக்கிறார்கள்.

வெளியில் இருந்து கூட பழைய ஒன்றிய அரசுடைய உள்துறை செக்ரட்டரியாக இருந்த கோபால் பிள்ளை,வெளியுறவு செக்ரட்டரியாக இருந்த நிர்வமா ராவ்,

ஓய்வுபற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி என அனைவரும் கையெழுத்திட்டு உள்ளூர் அரசிடம் ஆலோசனை பெற்று பாதுகாப்பை உறுதி செய்யுங்கள் எனக் கூறியுள்ளார்கள்.

அதைவிட இன்னொரு முக்கியமான அதிர்ச்சிகரமான சம்பவம் என்னவென்றால் இவர்கள் இங்குள்ள இஸ்லாமியர்களை இந்த பிரச்சனையை ஒட்டிய எதிரியாக கட்டமைக்கிறார்கள்.

அண்ணாமலையில் இருந்து பல பேர் இவ்வாறு பேசுகிறார்கள்.

இன்றைக்கு தந்தி டிவியில், மோடி கண் சிவந்தார், அமித்ஷா கோவப்பட்டார் என்ன நடக்க போகிறது எனத் தெரியவில்லை, இப்படி எல்லாம் இந்த சம்பவத்துக்கு பொறுப்பானவர்களை, யார் குற்றவாளிகளோ அவர்களையே ஹீரோ ஆக்குகிற வேலையை தந்தி டிவி போன்ற ஊடகங்கள் செய்து கொண்டிருக்கின்றன. இது பச்சை அயோக்கியத்தனம். காசு வாங்கிக் கொண்டு செய்கிறார்களோ என்ற சந்தேகத்தைத் தான் உருவாக்குகிறது.

அர்ணாப் கோஸ்வாமி, பிஜேபியை சார்ந்தவர்கள் போன்றோர் காங்கிரஸ் ஆட்சியில் இப்படி ஒரு சம்பவம் நடந்திருந்தால்,காங்கிரஸ் தேச பாதுகாப்பில் கோட்டை விட்டுவிட்டது. இவர்கள் தேச விரோதிகள், அதனால் இவர்கள் அனைவரும் இராஜினாமா செய்ய வேண்டும் எனக் கூறிக்கொண்டு இருந்திருப்பார்கள்.

பிஜேபி தான் நாட்டை பாதுகாக்கும், நாட்டின் பாதுகாவலன் என்றெல்லாம் சொல்லிவிட்டு இன்றைக்கு இவ்வளவு பெரிய சம்பவம் நடந்திருக்கிறது. பாதுகாப்பில் கோட்டை விட்டுவிட்டு இருக்கிறார்கள்.

காஷ்மீரில் நடக்கிற நிகழ்வுகள், பத்திரிகையில், செய்திகளில், டிவி-யில் வரும்போது அதை நாம் ஒரு ஆய்வு கண்ணோட்டத்தில்தான் பார்க்க வேண்டும்.

ஏனென்றால் ஏற்கனவே அப்படி ஒரு சம்பவம் நடந்திருக்கிறது.

அதாவது லஸ்கர்-இ-தொய்பாவின் அமைப்புதான் இன்றைக்கு இந்த சம்பவத்திற்கு காரணம் என்கிறார்கள், அதன் பெயர் தி ரெசிஸ்டன்ட் பிரண்ட் (TRF) எனவும் கூறுகிறார்கள்.

2019இல் காஷ்மீருக்கான சிறப்பு அந்தஸ்து ரத்து செய்யப்பட்ட பின் அந்த அமைப்பு உருவானது.

அதே லஸ்கர்-இ-தொய்பா அமைப்பை சேர்ந்தவர் பிஜேபியில் பொறுப்பில் இருந்திருக்கிறார். பொதுமக்கள்தான் காவல் துறையில் அவரை பிடித்துக் கொடுத்துள்ளனர்.

பிஜேபியுடைய மைனாரிட்டி மோர்சா, சிறுபான்மை பிரிவு ஐ.டி சோசியல் விங் இன்சார்ஜ் தலித் ஹுசைன் ஷா. இவர் லஸ்கர்-இ


vaigarai velicham official

-தொய்பா அமைப்பைச் சேர்ந்தவர்.

கடந்த வருடம் மே 9ஆம் தேதி பிஜேபியின் சோசியல் மீடியா இன்சார்ஜாக அவரை காஷ்மீர் மாநிலத்திற்கு நியமிக்கிறார்கள்.

பிஜேபி கட்சியில் அதிகாரப்பூர்வமாக நியமிக்கப்படுகிறார்.

அவர் அமித்ஷாவுடன் ஒரு கூட்டத்தில் மிகவும் நெருக்கமாக இருக்கிறார்.

காஷ்மீர் மாநில பிஜேபி தலைவர் ரவீந்திர ராணாவுடனும் இருந்திருக்கிறார். காஷ்மீர் ரைசி மாவட்டம், டக்சன் கிராமத்து மக்கள், இவரை ஒரு ஏகே47,ஒரு பிஸ்டல்,கிரானைட் குண்டுகள் இவற்றுடன் பிடித்து போலீஸில்

ஒப்படைத்துள்ளனர் எனில் இவர்களே லஸ்கர்-இ-தொய்பாவில் ஆள் வைத்திருப் பார்களா? இவர்கள் நினைத்தால் தேர்தலுக்காக எதை வேண்டுமானாலும் செய்வார்களா? பீகார் தேர்தலுக்காக செய்வார்களா?

புல்வாமா தாக்குதல் 2019 தேர்தலுக்கு முன்பாக நடந்தது. அதை வைத்து நாடு முழுவதும் ஒரு பீதி உருவாக்கப்பட்டது. அப்போது நடந்த சம்பவங்கள், இப்போது நடப்பவை என நடக்கிற விஷயங்கள அனைத் தையும் தொகுத்துப் பார்க்கிற போது அனைத் திலும் அரசு சொல்வது முழு உண்மையா? இல்லையா? என்கிற சந்தேகம் எல்லோரிடமும் வந்துவிட்டது. இது ஒரு அரசுக்கு நல்லதில்லை.

காஷ்மீரின் செய்திகளில் பாதிபொய்களையே பரப்புகிறார்கள். உண்மையில் என்ன நடக்கிறது என்பது தெரியவில்லை. அங்கிருந்து செய்திகள் வரவில்லை அதைத்தாண்டிசெய்திகள் வந்தாலும் வதந்திகளே வருகிறது.

பிஜேபியை சேர்ந்த ஒருவர் லஸ்கர்-இ-தொய் பாவில் இருந்து ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டு அவரை கைது செய்திருக்கிறார்கள், அமித்ஷா வுடன் நெருக்கமாக இருந்திருக்கிறார், இந்த செய்திகள் ஏன் நாடு முழுவதும் விவாதம் ஆகவில்லை? அதேசமயம் காங்கிரஸ், தி. மு. க, கம்யூனிஸ்ட் போன்ற கட்சிகளில், முஸ்லிம் அமைப்புகளில் இவ்வாறு நடந்திருந்தால் ரணகளமாகியிருக்கும்.

இன்றைக்குள்ள என்.டி. டிவியிலிருந்து அர்ணாப் கோஸ்வாமி வரை அத்தனை பேரும் இதனை பயங்கரமாக பேசி இருப்பார்கள். அதே சமயம் பிஜேபி செய்கிற தவறை ஊடகங்கள் மறைக்கிற விதமாக எப்படி நடந்து கொள்கின்றன? அனைத்து ஊடகங்களும் பிஜேபி பக்கம் இருக்கிறார்கள். இந்த படுகொலை என்பது மிக மோசமான ஒரு சம்பவம். அதனை யார்செய்தாலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

இது ஓர் பயங்கரவாத கூலிப்படை தாக்குதல் அதற்கு கடும் நடவடிக்கை வேண்டும்.

அதேசமயம் இதற்கு அமித்ஷா, மோடி, இராஜ்நாத் சிங் மீது என்ன நடவடிக்கை என்பதை நாட்டின் மக்கள், காங்கிரசும், இந்தியா கூட்டணிகட்சியும் இணைந்து இந்தியா முழுவதும் மிகப்பெரிய போராட்டங்களை பிஜேபி அலுவலகம் முன்பும், பிரதமர் வீட்டு முன்பும், அமித்ஷா வீட்டு முன்பும், உள்துறை அமைச்சரகம் முன்பும் நடத்தி இருக்க வேண்டும்.

2020இல் மட்டும் 415 தாக்குதல்கள் காஷ்மிரில் நடந்திருக்கிறது.

2021இல் 460 தாக்குதல்கள்,

2022இல் 457 தாக்குதல்கள் இதற்கெல்லாம் யார் பொறுப்பு?

ஏற்கனவே மணிப்பூர் பக்கம் இன்றுவரை மோடி அங்கே செல்லவில்லை. அடுத்து காஷ்மீரையும் இப்படி செய்தால் நாட்டில் மக்கள் வாழ்வதா? இல்லையா?

மதுரையில் இருக்கும் இஸ்லாமியர்களுக்கும் இந்த பிரச்சனைக்கும் என்ன தொடர்பு?

இந்த பாய்தான் இந்த பிரச்சனைக்கு காரணம் என்கிற மாதிரி பிஜேபிகாரன் பிரச்சாரம் செய்வது எவ்வளவு பெரிய அயோக்கியதனம்?

மோடி அவரை காப்பாற்றிக் கொள்ள வேண்டுமானால் அமித்ஷாவை விட்டு நீங்க வேண்டும் என சுப்பிரமணியசாமி, பிஜேபியில் உள்ள ஒரு தலைவரே கூறியிருக்கிறார்.

அனைத்துக்கும் முட்டுக் கொடுக்கும் மாரிதாஸே இராணுவத்துக்கு ஏன் இன்னும் ஆள் எடுக்கவில்லை? என கேட்டிருக்கிறார்.

இந்த கேள்விகளுக்கு எல்லாம் இவர்கள் முறையான பதில் கூற வேண்டும். ஏன் ஒரு ராணுவ வீரர் கூட, பல்லாயிரம் சுற்றுலா பயணிகள் குவியும் இடத்தில் இல்லை என்ற ஒரு கேள்விக்கு நேரடியாக பிஜேபி, ஆர். எஸ்.எஸ், ஒன்றிய அரசு ஆகியவை பதில் சொல்லியே தீர வேண்டும், இந்த நாட்டு மக்களுக்கு உண்மை தெரியவேண்டும்.

(நன்றி : வழக்கறிஞர் **வாஞ்சிநாதான்**
Source : ARAKALAGAM TV
YOUTUBE CHANNEL.)



# 40 CRPF வீரர்கள் புல்வாமா தாக்குதலில்

## மோடியின் தொடர்பு குறித்து NIA விசாரணை செய்ய வேண்டும் எனக் கோரி அளிக்கப்படும் புகார் மனு..!

அனுப்புநர்

**ஆ. நந்தினி,** B.A.,B.L.,
**ஆ. நிரஞ்சனா,** B.A.,LLB.,
36, பாண்டியன் நகர்,
காந்திபுரம், மதுரை-625007

பெறுநர்

**தேசிய புலனாய்வு முகமை,**
சென்னை கிளை,
புரசைவாக்கம், சென்னை-600010.

ஐயா,

**பொருள் :** 40 CRPF வீரர்கள் பலியான புல்வாமா தாக்குதலில் மோடியின் தொடர்பு குறித்து, NIA விசாரிக்கக் கோரி அளிக்கப்படும் புகார் மனு

**விசாரணை நடத்தக் கோருவதற்கான காரணங்கள்**

14.02.2019-ல் நடந்த புல்வாமா தீவிரவாத தாக்குதல் தொடர்பாக முன்னாள் ஜம்மு காஷ்மீர் மாநில கவர்னர் சத்யபால் மாலிக் அவர்கள் சமீப காலமாக தொடர்ந்து பல்வேறு கருத்துக்களை பொது வெளியில் பேசி வருகிறார். புல்வாமா சம்பவம் நடந்தபோது சத்யபால் மாலிக் ஜம்மு முக்கியத்துவம் பெறுகின்றன.

சத்யபால் மாலிக் புல்வாமா தாக்குதல் தொடர்பாக தெரிவித்துள்ள கருத்துக்கள் பின்வருமாறு..

1. கடந்த 14.02.2019 அன்று CRPF வீரர்கள் பயணம் செய்வதற்கு ராணுவ விமானங்களை மத்திய உள்துறை அமைச்சகத்திடம் CRPF கேட்டது. ஆனால் மத்திய உள்துறை ராணுவ விமானங்களை தர மறுத்து விட்டது. இதனால் வேறு வழியின்றி CRPF வீரர்கள் சாலை மார்க்கமாக ஜம்முவில் இருந்து ஸ்ரீநகர் செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

உள்துறை விமானங்கள் கொடுத்திருந்தால் 40 CRPF வீரர்கள் படுகொலை செய்யப்படும் நிலை ஏற்பட்டிருக்காது. புல்வாமா படுகொலை சம்பவத்துக்கு மத்திய அரசே காரணம்.

2. CRPF வீரர்கள் பயணம் செய்த அன்று ஜம்மு - ஸ்ரீநகர் தேசிய நெடுஞ்சாலையில் வந்து சேரக்கூடிய இணைப்பு சாலைகள் (Link Roads) மூடப்படவில்லை. மேலும் முறையான பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்படவில்லை. இவ்வாறு மூடப்படாமல் இருந்த ஒரு Link Road வழியாகத்தான் தீவிரவாத தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்ட கார் வந்து ஜம்மு-ஸ்ரீநகர் தேசிய நெடுஞ்சாலையில் சென்று கொண்டிருந்த CRPF வாகனம் மீது வெடி மருந்துகளுடன் மோதி 40 CRPF வீரர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

*3.* புல்வாமா தீவிரவாத தாக்குதலுக்கு பயன் படுத்தப்பட்ட Car - ஆனது 300 kg வெடி மருந்து களுடன் *10* நாட்களுக்கும் மேலாக ஜம்மு காஷ்மீரில் சுற்றிக்கொண்டிருந்தும் கூட மத்திய பாதுகாப்பு படையினர், காவல் துறையினர் உட்பட யாருமே இதை பார்க்கவில்லை என்பது மிகுந்த அதிர்ச்சியளிக்கிறது. உச்சகட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள ஜம்மு காஷ்மீரில் இப்படி நடந்திருப்பது ஏற்க முடியாததாகும். இது உளவுத்துறையின் மோச மான தோல்வி (Terrible Intelligence Failure).

*4. 14.02.2019* அன்று புல்வாமா தாக்குதல் நடந்த சமயத்தில் பிரதமர் மோடி உத்தர்கண்டில் உள்ள ஜிம் கார்பட் தேசிய பூங்காவில் டிஸ்கவரி சேனலின் Man vs Wild சூட்டிங்கில் இருந்தார். இதனால் உடனடியாக அவரை தொடர்பு கொண்டு தீவிரவாத தாக்குதல் தொடர்பாக தகவல் தெரிவிக்க இயலவில்லை. சூட்டிங் முடிந்து அவர் வந்த பிறகு 40 CRPF வீரர்கள் படுகொலை செய்யப்பட்ட விபரங்களை தெரிவித்தோம். மத்திய உள்துறையானது CRPF வீரர்கள் பயணம் செய்ய ராணுவ விமானங் களை கொடுத்திருந்தால் தீவிரவாத தாக்குதல் நடந்திருக்காது என்பதையும், பாதுகாப்பு குறை பாடுகளை பற்றியும் அவரிடம் சொன்னேன். அரசின் தவறால் 40 CRPF வீரர்கள் உயிரிழந் துள்ளனர் என்பதையும் மோடியிடம் எடுத்து கூறினேன். அதற்கு அவர் இது பற்றியெல்லாம் வெளியில் எதுவும் பேச வேண்டாம் என்று என் வாயை அடைத்துவிட்டார்.

*5.* தேசிய பாதுகாப்பு ஆலோசகரான (National Security Advisor) அஜித் தோவல் எனது Classmate ஆவார். அந்த உரிமையில் புல்வாமா தாக்குதல் தொடர்பாக மோடியிடம் சொன்ன எல்லா விபரங்களையும் அவரிடம் சொன்னேன். மோடி சொன்னது போலவே அஜித் தோவலும் புல்வாமா தாக்குதல் சம்பவம் குறித்து வெளியில் பேச வேண்டாம் என்று கூறிவிட்டார்.

*6.* 40 CRPF வீரர்களின் உடல்கள் மீதுதான் *2019* பாராளுமன்ற தேர்தல் நடைபெற்றது. பிரதமர் மோடி புல்வாமா படுகொலையை தேர்தல் பிரச்சாரத்துக்கு பயன்படுத்திக் கொண் டார். முதல்முறையாக வாக்களிக்கும் இளை ஞர்கள் புல்வாமா ராணுவ வீரர்களின் உயிர்த்தி யாகத்துக்கு அஞ்சலி செலுத்தும் விதத்தில் தங்களது வாக்கை செலுத்த வேண்டும் என தேர்தல் பிரச்சாரத்தின் போது மோடி பேசினார்.

*7.* புல்வாமா தீவிரவாத தாக்குதலின் மூல காரணங்களை கண்டறிவதற்குப் பதிலாக இந்த சம்பவத்தை எப்படி தேர்தலுக்குப் பயன்படுத் தலாம் என்பதிலேயே மோடி அரசு குறியாக இருந்தது.

*8.* புல்வாமா தாக்குதல் சம்பவம் தொடர்பாக முறையான விசாரணை நடைபெறவில்லை. முறையான விசாரணை நடந்திருந்தால் அப்போதைய மத்திய உள்துறை அமைச்சரான ராஜ்நாத் பதவி விலகியிருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கும். இந்த விவகாரத்தில் தொடர்புடைய பல உயர் அதிகாரிகள் சிறைக்கு செல்ல நேரிட்டு இருக்கும்.

*9.* இது மத்திய உள்துறை மற்றும் CRPF-ன் திறமையின்மை மற்றும் அலட்சியத்தால் நிகழ்ந்துள்ளது.

*10.* புல்வாமா தீவிரவாத தாக்குதல் தொடர் பாக உச்சநீதிமன்றத்தின் மேற்பார்வையில் முறையான விசாரணை நடத்தப்பட வேண்டும்.

*11.* தேர்தல் நெருங்குவதால் புல்வாமா தாக்குதல் போன்ற சம்பவங்கள் மீண்டும் நடக்க வாய்ப்புள்ளது.

*ஆதாரங்கள்:*

https://youtu.be/b8wmHUhLvOI

https://m.thewire.in/article/politics/satya-pal-malik-full-interview-pulwama-modi

https://www.thehindu.com/news/national/pulwama-attack-satya-pal-malik- says-2019-lok-sabha-elections-were-fought-on-bodies-of-our-soldiers/article66879630.ece

https://thewire.in/security/satya-pal-malik-kashmir-governor-pulwama-modi

**புல்வாமா தாக்குதல் தொடர்பாக ஆய்வு செய்த Frontline பத்திரிக்கை எழுப்பியுள்ள கேள்விகள்..**

பாதுகாப்பு படையினரை பழிவாங்கும் விதமாக தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தக்கூடும் என ஜனவரி-*2-2019* முதல் பிப்ரவரி- *13-2019*க்கு இடைப்பட்ட காலத்தில் *11* உளவுத்துறை எச்சரிக்கைகள் வந்துள்ளது. இத்தனை எச்சரிக் கைகளையும் இந்த அரசு கண்டுகொள்ளவில்லை.

இந்த *11* எச்சரிக்கைகளில் இத்தாக்குதலின்



Master Mind ஆக சொல்லப்படும் முடாசிர் கான் பற்றிய எச்சரிக்கையும் இருந்துள்ளது. தாக்குதல் நடந்த பிறகு இந்த முடாசிர் கானை மூன்றே வாரத்துக்குள்ளும், அவனது கூட்டாளி அப்துல் ரஷீத் காஜியை 100 மணி நேரத்துக்குள்ளும் (4 நாளுக்குள்) கண்டுபிடித்து பாதுகாப்பு படையினர் கொன்றுவிட்டனர். தாக்குதல் நடந்து குறுகிய காலத்திலேயே இவர்களை கண்டுபிடித்து கொல்ல முடியும் என்றால் புல்வாமா தாக்குதலுக்கு முன்பு உளவுத்துறை எச்சரிக்கை வந்த போதே ஏன் இவர்களை தடுக்கவில்லை? ஏன் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை?

இரு அணு ஆயுத நாடுகளான இந்தியா - பாகிஸ்தானை போருக்கு தள்ளக்கூடிய இந்த பயங்கரவாத தாக்குதலுக்கு ஜம்மு காஷ்மீரின் பாதுகாப்பு கட்டமைப்பு உடந்தையாக செயல்பட்டதா? என்ற கேள்வி எழுகிறது.

ஆட்சியில் இருக்கும் மோடி தேர்தல் ஆதாயம் அடைவதற்காக இத்தாக்குதல் அனுமதிக்கப்பட்டதா?

IB (Intelligence Bureau)-வின் MAC Platform-லும் இந்த உளவுத்துறை எச்சரிக்கைகள் பகிரப்பட்ட நிலையில் IB இதற்கு என்ன தடுப்பு நடவடிக்கை எடுத்தது?

இந்த 11 உளவுத்துறை எச்சரிக்கைகள் மீது நடவடிக்கை எடுக்கும் பொறுப்பில் இருந்த ஜம்மு காஷ்மீர் போலீசார் பலர் தாக்குதல் நடப்பதற்கு முந்தைய தினம் (பிப்ரவரி-13, 2019) வெவ்வேறு இடங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். முக்கியமாக புல்வாமா பகுதி உள்ள அவந்திபுரா SP முகமது சையத் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

பயங்கரவாத அச்சுறுத்தல் உள்ள இந்த மோசமான சூழலில் ஜம்மு காஷ்மீர் போலீஸ் இடமாற்றத்தை விவேகமுள்ள யாராவது செய்வார்களா?

காவல்துறையினர் இடமாற்றம் செய்யப்பட்ட நிலையில் உளவுத்துறை எச்சரிக்கைகள் மீது நடவடிக்கைகள் எடுப்பதற்கு யார் பொறுப்பு?

ஆதாரம்:

https://frontline.thehindu.com/cover-story/pulwama-attack- intelligence-inputs-ignored-national-security-leak- compromise-balakot-bjp-win-2019/article64755942.ece

## புல்வாமா தாக்குதல் தொடர்பாக முன்னாள் இந்திய ராணுவ தளபதி ஜெனரல் ஷங்கர் ராய் சௌத்ரி, தி டெலகிராப் நாளிதழுக்கு அளித்த பேட்டி

ஜம்மு காஷ்மீர் முன்னாள் கவர்னர் சத்யபால் மாலிக் The Wire இதழுக்கு அளித்த பேட்டியில் "புல்வாமாவில் 40 வீரர்களின் படுகொலைக்கு மோடி அரசாங்கத்தின் திறமையின்மையும் அலட்சியமுமே காரணம்" என கூறினார்.

சத்யபால் மாலிக்கின் இக்கருத்து பற்றி முன்னாள் இந்திய ராணுவ தளபதி ஜெனரல் ஷங்கர் ராய் சௌத்ரி தி டெலகிராப் நாளிதழுக்கு அளித்த பேட்டி : (ஜெனரல் ஷங்கர் ராய் சௌத்ரி ஜம்மு ஜம்மு காஷ்மீரில் 1991-92 ஆண்டுகளில் 16 படைகளுக்கு தலைமை வகித்தவர்)

"பிரதமரும் அவருக்கு ஆலோசனை வழங்கும் தேசிய பாதுகாப்பு ஆலோசகருமே (அஜித் தோவல்) இதற்கு முதன்மை பொறுப்பாளர்கள். இது ஒரு பின்னடைவு. 2500 ராணுவ வீரர்களை ஏற்றிக்கொண்டு சென்ற அந்த 78 வாகனங்கள்

பாகிஸ்தான் எல்லைக்கு மிக அருகில் உள்ள அந்த நெடுஞ்சாலையில் சென்றிருக்க கூடாது. CRPF படையினரை விமானம் மூலம் அழைத்து சென்றிருந்தால் இந்த உயிரிழப்பை தடுத்திருக்க முடியும். இந்த தேசிய நெடுஞ்சாலையில் செல்லும் பெரிய வாகனங்கள் மற்றும் Convoy-கள் தாக்குதலுக்கு உள்ளாகும் வாய்ப்புகள் மிக அதிகம். தாக்குதல் நடந்த புல்வாமா பகுதி 'Vulnerable Sector'. எப்போதுமே ஜம்முவில் உள்ள சம்பா வழியாக செல்லும் சாலை 'சுரங்கப் பாதை மூலம் தீவிரவாதிகள் ஊடுருவி தாக்கு தலுக்கு உள்ளாகக்கூடிய பகுதி' ஆகும்.

பாகிஸ்தான் எல்லைக்கு அருகில் உள்ள இப்படிப்பட்ட நெடுஞ்சாலையில் ஒரே நேரத்தில் இத்தனை வாகனங்களை (78 வாகனங்கள், 2500 வீரர்கள்) அனுப்புவது என்பது அவர்களை தெரிந்தே ஆபத்தில் தள்ளுவதற்கு இணையானது. உளவுத்துறை தோல்வி காரணமாகவே இத்தாக்குதல் நடந்துள்ளது என்ற சத்யபால் மாலிக்கின் கருத்துடன் உடன்படுகிறேன். இத்தாக்குதலுக்கு பொறுப்பேற்காமல் மோடி அரசு நழுவ முயற்சிக்கிறது. Civil Aviation, BSF, Airforce ஆகியவற்றில் இருக்கும் விமானங்களை பயன்படுத்தி வீரர்களை ஜம்முவிற்கு அழைத்து சென்றிருக்க வேண்டும். இதற்கு இன்றுவரை யாரும் பொறுப்பேற்கவில்லை" என கூறியுள்ளார்.

ஆதாரம்:

https://thewire.in/security/modi-doval-responsibility-pulwama-general-roychowdhury

### கொல்லப்பட்ட CRPF வீரர்களின் உறவினர்கள் அளித்த பேட்டிகள்..

கொல்லப்பட்ட CRPF வீரர்களில் ஒருவரான பகீரத்தின் தந்தையான பரசுராம், தி வயர் இணைய இதழிடம் கூறுகையில்..,

"இந்த படுகொலைக்கு காரணம் அதிகாரத்தில் நீடிக்க வேண்டும் என்ற எண்ணம்தான் என 100% நம்புகிறேன், மேலும் மோடி அரசாங்கம் நாற்காலியை கைப்பற்றுவதற்காக (மீண்டும் ஆட்சியை பிடிக்க) இதைச் செய்துள்ளது," என்று பகிரங்கமாக குற்றம் சாட்டுகிறார்.

வெடி மருந்துகள் (300 கிலோ) நிரம்பிய வாகனம் திடீரென்று எங்கிருந்தோ வந்து CRPF ராணுவ வீரர்களின் வாகனத்தை மோதி வெடித்தது என்பது எப்படி சாத்தியமானது? அப்போது பிரதமர் எங்கே போனார்? தூங்கிக் கொண்டிருந்தாரா? என கோபமாக கேட்கிறார் பரசுராம்.

உயிரிழந்த CRPF வீரர்களில் ஒருவரான ஜீத்ராம் அவர்களின் அண்ணன் விக்ரம் "30 வயதி லேயே அகால மரணம் அடைந்த என் சகோ தரரின் மரணத்துக்கு காரணமான இத்தாக்கு தலை முறையான விசாரணைக்கு உட்படுத்த வேண்டும். என் சகோதரரின் மரணத்தால் இன்னும் எங்கள் குடும்பம் சோகத்தில் இருந்து மீளவில்லை. தங்கள் குடும்பத்தில் ஒருவரை இழந்தவருக்கு தான் எங்கள் வலி புரியும்" என கூறுகிறார்.

விக்ரமின் குடும்பத்தினரைப் போலவே உயிரிழந்த மற்றொரு வீரரான ரோஹிதாஸின் குடும்பமும் தாக்குதல் நடந்ததில் இருந்து இப்போது வரை மீளா துயரிலேயே இருக் கிறார்கள். ரோஹிதாஸின் சகோதரர் ஜிதேந்திரா "இந்த கையாலாகாத அரசாங்கத்தால் உயிரிழந்த வீரர்களைப் பார்க்கும்போது மற்ற ராணுவ வீரர்களுக்கு என்ன ஆகுமோ என கவலையாக உள்ளது. இந்த வீரர்களுக்கு நேர்ந்தது வேறு யாருக்கும் நடக்கக் கூடாது. வீரர்களை ஏற்றிச் செல்ல விமானம் தர முடியாது என உள்துறை அமைச்சகம் மறுத்திருக்கக் கூடாது. ராணுவ வீரர்கள் என்ன கேட்கிறார்களோ அதை ஏற்பாடு செய்வது தான் அரசாங்கத்தின் வேலை" என கொந்தளிக்கிறார்.

ஆதாரம்:

https://thewire.in/security/pulwama-attack-kin-probe-satya-pal-malik

### உயிரிழந்த வீரர்களின் உறவினர்கள் நியாயம் கேட்டு டெல்லியில் போராட இருக்கிறார்கள்

மோடி அரசின் பாதுகாப்பு குறைபாடுகள் காரணமாக நடந்த இக்கொடூர தாக்குதலுக்கு யார் காரணம்? யார் பொறுப்பு? என்பதை விளக்கி மத்திய அரசு வெள்ளை அறிக்கை வெளியிடக் கோரி வரும் நவம்பர் 26, 2023 (அரசியலமைப்பு தினம்) அன்று எதிர்ப்பு பேரணி நடத்த திட்டமிட்டிருந்தனர்.

முன்னாள் துணை ராணுவ படையினர் நல சங்கங்களின் கூட்டமைப்பு ஒருங்கிணைக்கும் இந்தப் போராட்டத்தில் இறந்த வீரர்களின் மனைவிகள் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் கலந்துகொண்டு அரசிடம் தங்கள் கோரிக்கை களை முன்வைக்க உள்ளனர். இக்கூட்டமைப்பின்



தேசிய ஒருங்கிணைப்பாளர் ரன்பீர் சிங் "தேசம், தேசபக்தி என தேர்தல் நேரங்களில் வாய்கிழிய பேசும் மோடி அரசாங்கம் 40 CRPF வீரர்களின் படுகொலைக்கான காரணத்தை மூடி மறைத்து வருகிறது" என கூறியுள்ளார்.

ஆதாரம்:

https://thewire.in/rights/pulwama-attack-kin-of-slain- jawans-demand-answers-from-centre-to-hold-protest-march-in-delhi

**புல்வாமாவில் படுகொலை செய்யப்பட்ட 40 CRPF வீரர்களின் குடும்பத்தினருக்கு உரிய நீதி வேண்டும்**

புல்வாமா தாக்குதல் தொடர்பாக ஜம்மு காஷ்மீர் முன்னாள் கவர்னர் சத்யபால் மாலிக், முன்னாள் இந்திய ராணுவ தளபதி சங்கர் ராய் சவுத்ரி, படுகொலை செய்யப்பட்ட CRPF வீரர் களின் உறவினர்கள் ஆகியோர் தெரிவித்துள்ள கருத்துகள் மற்றும் Frontline பத்திரிக்கை எழுப்பி யுள்ள கேள்விகள் ஆகியவை மிக முக்கியமானவை மட்டுமல்ல இக்கேள்விகள் அனைத்துமே நாட்டின் பாதுகாப்பு தொடர்பானவை.

40 CRPF வீரர்களின் படுகொலையை சாதாரணமாக கடந்து சென்றுவிட முடியாது. CRPF வீரர்களுக்கு விமானம் தர மறுத்ததே இப்படுகொலைக்கு முக்கிய காரணம் என மேற் கூறிய அனைவரும் குற்றம் சாட்டுகின்றனர். CRPF வீரர்களுக்கு விமானம் தர மறுத்ததன் மூலம் மோடி அரசு புல்வாமாவில் தாக்குதல் நடத்திய பயங்கரவாதிகளுக்கு உதவியுள்ளது. இது பற்றிய முழு உண்மைகளையும் தெரிந்து கொள்ள நாட்டு மக்களுக்கு முழு உரிமை உண்டு.

எனவே மேற்கண்ட அனைத்தையும் கருத்தில் கொண்டு 14.02.2019 புல்வாமா படுகொலை தொடர்பாக நியாயமான விசாரணை செய்ய வேண்டும்.

பிரதமர் மோடி, அப்போதைய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், தற்போதைய உள்துறை அமைச்சர் அமித்ஷா (அப்போதைய BJP தேசிய தலைவர்- புல்வாமா வீர்களின் படுகொலையை பாஜக தேர்தல் ஆதாயத்துக்காக பயன்படுத்திக் கொண்டது) அப்போதைய மத்திய பாதுகாப்பு அமைச்சர் நிர்மலா சீதாராமன், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல், புல்வாமா தாக்குதல் நடைபெற்ற போது தேசிய பாதுகாப்பு துணை ஆலோசகராக இருந்த R.N. ரவி (தற்போதைய தமிழ்நாடு கவர்னர்) ஜம்மு காஷ்மீர் மாநில முன்னாள் ஆளுநர் சத்யபால் மாலிக் மற்றும் இவ்விவகாரத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அனைவரிடமும் முறையான விசாரணை நடத்தப்பட வேண்டும்.

40 வீரர்களின் படுகொலைக்கு காரணமான உண்மைக் குற்றவாளிகள் அனைவரும் சட்டப்படி கடுமையாக தண்டிக்கப்பட வேண்டும்.

இனிமேல் இதுபோன்ற கொடூரமான படுகொலைகள் நடக்காத வண்ணம் முன்னெச் சரிக்கை நடவடிக்கைகளும் பாதுகாப்பு ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

NIA (தேசிய புலனாய்வு முகமை) முறையான விசாரணை நடத்தி படுகொலை செய்யப்பட்ட 40 CRPF வீரர்களின் குடும்பத்தினருக்கு உரிய நீதி வழங்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**– நந்தினி,** B.A.,B.L., **நிரஞ்சனா,** B.A.,LLB.,

# பாலஸ்தீன மீட்புப் போரில் ஹமாஸ்..!

**முகமன்:**

ஐக்கிய நாடுகள் சபை 1948இல் பாலஸ்தீனை இரண்டாகப் பிளக்கும் தீர்மானம் எண். 801-ஐ 29.11.1948இல் நிறைவேற்றியது.

இந்தத் தீர்மானம் முதலில் 25.11.1948இல் ஐக்கிய நாடுகள் சபையில் கொண்டு வரப் பட்டது. தோற்றது அமெரிக்கா தனது ஆதிக்கத்தையும், அடாவடித்தனங் களையும், கட்ட விழ்த்துவிட்டு தீர்மானத்தை மீண்டும் 29.11.1948இல் கொண்டுவந்தது. பல நாடுகளை முதலில் தீர்மானத்தைத் தோற்கடித்த நாடுகளை மிரட்டி தீர்மானத்தை நிறைவேற்றியது.

இஸ்ரேல் என்ற நாடு பாலஸ்தீனைப் பிளந்து 1949 மே-இல் உருவாக்கப்பட்டது. அன்று முதலே அது தனக்கு ஐக்கிய நாடுகள் சபை தந்திடாத இடங்களை ஆக்கிரமிக்கத் தொடங்கியது. இதற்காகப் படுகொலைகள் பலவற்றை நடத்தியது.

இந்த அநியாயங்களுக்கெதிராகப் பல போராளி குழுக்கள் இஸ்லாமிய இயக் கங்கள் எழுந்தன. அவற்றுள் முக்கிய மானது ஹமாஸ் அதன் குறுகிய வரலாற்றை இங்கே தருகின்றோம். - MGM



**அல் இன்திபாழா அல் முபாறகா (1987 தொடக்கம் இன்று வரை)**

*பாலஸ்தீனப் போராட்டத்தின் மிக முக்கிய மானதொரு காலகட்டமாக இது கருதப்படு கின்றது. 1987ஆம் ஆண்டு அக்டோபர் 06ஆம் தேதி அல் இன்திபாழா அல் முபாறகா ஆரம்பிக்கப்பட்டது. இதனை ஹரகதுல் ஜிஹாதில் இஸ்லாமிய என்ற அமைப்பே முதன் முதலில் மேற்கொண்டது. இவ்வமைப்பினை கலாநிதி பத்ஹி அஷ் ஷகாபீ, அஷ்ஷெய்க் அப்துல் அஸீஸ் அவ்தா ஆகியோர் வழிநடத்தினார்கள். இதனது முதலாவது இன்திபாழா நடவடிக்கை 1987 அக்டோபர் மாதம் 06ஆம் தேதி நடத்தப் பட்டது. இதன்போது இஸ்ரேலியப் படையின ருடன் ஏற்பட்ட மோதலில் 4 வீரர்கள் ஷஹீதாக் கப்பட்டனர். இந்த இன்திபாழா பல கட்டங் களாக இன்று வரை முன்னெடுத்துச் செல்லப் படுகின்றது. முழுக்க முழுக்க ஈமானியப் பலத்தை மாத்திரம் பயன்படுத்தி மிகச் சாதாரணமான ஆயுதங்களால் போராடி வரும் இவர்கள் தமது பிரதானமான ஆயுதமாக கற்களைப் பயன்படுத்தி வருகின்றனர்.*

*கணிசமான அளவு சிறுவர்களும் இப்போராட்டத்தில் பங்கேற்பது பலஸ்தீனப் போராட்டத்தின் கடமைப்பாட்டை மேலும் வலியுறுத்துவதாக அமைகின்றது. உண்மையில் முழு உலகையுமே அதிர்ச்சிக்குள்ளாக்கிய இன்திபாழா போராளிகளின் துணிச்சல், வீரம், தீரம் இஸ்ரேலியப் படையினருக்கு தமது கனரக ஆயுதங்களுக்கு முன்னால் ஒரு பெரும் சவாலாகவே இன்றுவரை இருந்து வருகின்றது.*

**பலஸ்தீன போராட்டமும் - ஹமாஸ் இயக்கமும்**

*பலஸ்தீனப் போராட்ட எழுச்சியான இன்திபாழாவின் மற்றொரு வடிவமாகவே*

ஹமாஸ் இயக்கத்தைக் குறிப்பிட வேண்டும். ஹரகதுல் ஜிஹாதில் இஸ்லாமிய எனும் பெயரைக் கொண்ட இந்த ஜிஹாத் இயக்கம் - ஹமாஸ் எனச் சுருக்கமான அழைக்கப்படுகின்றது. இது அல்இஹ்வானுல் முஸ்லிமுன் இயக்கத்தின் பலஸ்தீன நடவடிக்கைகளுகான பிரதான பிரிவுகளுள் ஒன்றாகும்.

ஆரம்பத்தில் மிக இரகசியமாக இயங்கி வந்ததனால் இது பற்றிய பல தகவல்கள் இன்னும் இரகசியமாகவே இருக்கின்றன. எனினும் ஹமாஸ் 1988ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 18ஆம் தேதி ஓர் அறிக்கையை வெளியிட்டது. இஸ்லாத்தைத் தனது அடிப்படைக் கோட்பாடாகக் கொண்டு இயங்கும் இவ்வமைப்பு பலஸ்தீன விடுதலை, இஸ்லாமிய அரசை ஏற்படுத்தல், இழந்த உரிமைகளை மீளப்பெறல் போன்ற இலக்குகளை நோக்கிதாம் செயற்பட்டு வருவதாக அவ்வறிக் கையில் குறிப்பிட்டிருந்தது. இது முதல் தடவை யாக தன் உறுப்பினர்களுக்கு முழுமையான தர்பியத்தை வழங்குவதில் கூடிய கவனம் செலுத்தி வருகின்றது. பெண்களும் விடுதலைப் போராட்டத்தில் பெரும் பங்கு வகிக்க வேண்டும் என்பதால் அவர்களையும் ஈடுபடுத்தும் பல திட்டங்களையும் வகுத்துச் செயல்படுத்தியும் வருகின்றது.

ஏனைய இயக்கங்கள் தொடர்பான ஹமாஸின் கொள்கை வரவேற்கத்தக்கது. அவற்றைத் தமது சகோதர இயக்கங்களாகக் கருதிக் கண்ணியப்படுத்துவதுடன் இப்போராட் டத்தில் அவை அனைத்தும் பங்கேற்க வேண்டும் என அழைப்பும் விடுத்துள்ளது. மனிதநேயத்தை அவமதிக்கும் வகையிலான கொடூர செயல்கள், சித்திரவதைகள் என்பவற்றைத் தவிர்த்து மனிதநேயத்தை மதிக்கும் மனிதாபிமான இயக்கமாக இருந்து வருகின்றது.

ஹமாஸ் 1988 டிசம்பர் 15ஆம் தேதி இன்திபாழாவுடன் இணைந்து கொண்டது. இன்திபாழாவின் நடவடிக்கைகளை விஸ்தரிக்கும் நோக்குடன் ஆட்சேபனை ஊர்வலங்கள், திடீர் தாக்குதல்கள், இஸ்ரேலிய இராணுவத்தினை இலக்காகக் கொண்ட மனித குண்டுத் தாக்குதல்கள், கற்போராட்டம், ஆக்ரோஷமான கவிதைகள், உணர்ச்சியூட்டும் வாசகங்கள் என ஜிஹாதைப் பின்புலமாகக் கொண்டு பல நடவடிக்கைகளில் இன்றுவரை ஈடுபட்டு வருகின்றது. ஹமாஸின் ஆன்மிகத் தலைவர் அஷ்ஷெய்க் அஹ்மத் யாஸீன், அரசியல் பிரிவுத் தலைவர் காலித் மிஷ்அல் இவர்களெல்லாம் இஸ்ரேலைப் பொறுத்த வரைக்கும் அவர்களது முகவரிக்கே முற்றுப்புள்ளி வைக்கும் விவேகமும், தீட்சண்யமும் உள்ள பயங்கரவாதிகளாவர்.

ஆரம்பத்தில் அரசியல் தலைவராக அஷ்ஷெய்க் அஹ்மது யாஸீனும், இராணுவத் தலைவராக ஸலாஹ் ஷஹாதாவும், பாதுகாப்புப் பிரிவின் தலைவராக முஹம்மது மஜ்தும் ஹமாஸை வழி நடத்தினார்கள். அஷ்ஷெய்க் அஹ்மத் யாஸீன் ஹமாஸ் எனும் பயங்கரவாத இயக்கத்தை தலைமை தாங்கினார்கள் என்ற குற்றத்தின் பேரில் 1989 மே மாதம் சிறைப் பிடிக்கப்பட்டார்கள். இவருக்கு ஆயுட்கால கடூழியச் சிறைத் தண்டனை வழங்கி இஸ்ரேலிய நீதிமன்றம் தீர்ப்பளித்தது. எனினும் 1999ஆம் ஆண்டு ஹமாஸ் இயக்கத்தின் அரசியல் பிரிவுத் தலைவர் காலித் மிஷ்அல் அவர்களை இலக்காக வைத்து மேற்கொள்ளப்பட்ட படுகொலை முயற்சி அல்லாஹ்வின் உதவியால் அம்பலத்திற்கு வந்தபோது அதனை மூடி மறைப்பதற்காக அஷ்ஷெய்க் அஹ்மது யாஸீன் அவர்கள் மிகவும் பலவீனமான நிலையில் விடுதலை செய்யப்பட்டார்கள்.

இவரைப் பற்றிய மருத்துவ அறிக்கைகளின் படி உடலின் பல பாகங்கள் செயலிழந்தவராகவும் கண்கள் பார்வை இழந்ததாகவும் செவிப்புலன்கள் கேள்விப் புலனற்ற நிலையிலும் சில செயற்கைக் கருவிகள் பொருத்தப்பட்ட நிலையில் ஷெய்க் அவர்கள் வாழ்ந்தார்.

1990ஆம் ஆண்டு ஹமாஸ் இயக்கத்தினரை சேர்ந்த பல போராளிகள் இஸ்ரேலிய உளவுப் பிரிவின் உதவியுடன் கைது செய்யப்பட்டார்கள். இக்கைது நடவடிக்கை ஹமாஸ் இயக்கத்தின் போராட்டத்தை மேலும் உக்கிரமடையச் செய்தது. 'கதாஇப் இஸ்ஸுத்தீன் அல் கஸ்ஸாம்' எனும் ஹமாஸின் ஜிஹாத் பிரிவு 1990ஆம் ஆண்டின் கைதுகளைத் தொடர்ந்தே இதுவும் பகிரங்க செயற்பாடுகளில் இறங்கியது. ஹமாஸின் ஜிஹாத் பிரிவான கதாஇப் பிரதானமாக சில செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றது.

- தமது உறுப்பினர்களுக்கு ஆன்மிக ரீதியில் பூரண தர்பியாவை வழங்குதல்.

- இன்திபாழாவைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லல்.

- இதற்கான அனைத்து நடவடிக்கைகளுக்கும் முழு ஆதரவினையும் வழங்கி வருதல்.

- இஸ்ரேலியப் படையினரை உளவியல் ரீதியில் பாதிப்படையச் செய்தல். (இதற்காக மனிதக் குண்டுகளை அடிக்கடி வெடிக்கச் செய்தல், அவர்களுக்குச் சேதங்களை ஏற்படுத் துதல், யூதர்கள் உயிருக்கு மிகவும் அஞ்சுபவர்கள் என்பதனால் 'கதாஇப்' உறுப்பினர்களை தமது உயிர்களை அர்ப்பணித்து மேற்கொள்ளும் இந்த நடவடிக்கையும் மிகவும் வெற்றியளித்து வருகின்றது. யஹ்யா அய்யாஷ், முஹியித்தீன் ஷரீப் போன்ற தலைவர்களைப் படுகொலை செய்வதற்கு இஸ்ரேலிய உளவுப் பிரிவு பல கோடி டாலர்களைச் செலவு செய்து திட்டமிட்டமை இதனைத் தெளிவாகக் காட்டும்.

- இஸ்ரேலியத் தாக்குதல்களுக்கு உடனடியாகப் பதிலளித்தல்.

- போராட்ட உணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடுதல், உணர்ச்சி பிரவாகிக்கும் கவிதைகள், ஆக்ரோஷமான வாசகங்கள், கோஷங்கள், உத்வேகத்தை ஏற்படுத் தும் நூல்கள், பத்திரிகைகள், அறிக்கைகள், இரத்தம் கொதிக்கும் உரைகள், குத்பாக்கள் என்பவற்றினை ஒழுங்கு செய்தல்.

- எதிர்ப்பு ஊர்வலங்கள், கண்டன ஊர்வலங்கள், ஆட்சேபனை ஊர்வலங்களை நடத்துதல்.

- பலஸ்தீனப் போராட்டத்தில் பங்கேற்கும் போராளிகளுக்கு போதிய களப் பயிற்சி, யுத்த தந்திரங்கள், போராட்ட நுணுக்கங்களைக் கற்றுக் கொடுப்பதுடன் இதில் பங்கேற்க விரும்பும் ஏனைய அமைப்பைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கும் பயிற்சிகளை வழங்குதல்.

இவ்வாறு இன்றுவரை மிகக் கவனமாக தமது ஜிஹாதை ஹமாஸ் மேற்கொண்டு வருகின்றது. உலகளாவிய ரீதியில் போராடும் போராட்டக் குழுக்களுள் மிக நுணுக்கமான அமைப்பே இது. இதனை இஸ்ரேலிய இராணுவத் தலைமை அதிகாரி இப்படிச் சொன்னார். "ஹமாஸின் ஆயுத ரீதியான போராட்டத்தில் வெற்றிபெற முடிந்தாலும் அதன் அறிவு ரீதியான போராட்டத்தில் எம்மால் வெற்றிபெற முடியாது" என்றார்.

உண்மையில் இன்றுவரை சற்றும் சளைக்காது மிகக் கடுமையான எதிர்ப்புகளுக்கும், கண் காணிப்புகளுக்கும் மத்தியில் ஹமாஸ் போராடி வருகின்றது. இவ்வாறு இன்று பலஸ்தீனப் போராட்டத்தின் நான்காவது இன்திபாழா உக்கிரநிலைமை அடைந்திருக்கின்றது. சர்வதேச ரீதியில் திட்டங்கள் வகுக்கப்பட்டு அது பலஸ்தீனில் பிரயோகிக்கப்படுகின்றது.

நான்காவது இன்திபாழா தொடங்கப்பட்டது முதல் இன்றுவரையான பலஸ்தீனர்களின் போராட்டத்தில் கடந்த மாதத்தின் கடைசி வாரம் மிகவுமே முக்கியத்துவம் வாய்ந்திருந்தது. இவ்வாரத்தில் முப்பதுக்கும் மேற்பட்ட ஜியோனிஸ்டைப் படையினரை பலஸ்தீனர்கள் தாக்கியழித்துள்ளனர். இஸ்ரேலுக்கு குலை நடுக்கத்தை ஏற்படுத்தி சமாதான மேசைக்கு பலஸ்தீனர்களை நிர்பந்திக்கும் அளவுக்கு ஷெரோன் அரசு மிகப் பயங்கரமான தாக்குதலை எதிர்கொண்ட ஒரு வாரமாக இது கணிக்கப் படுகின்றது. அவ்வாரம் இடம்பெற்ற இரண்டு வீரமரணத் தாக்குதல்கள் பெரும் அழிவுகளை உண்டு பண்ணியுள்ளன. இன்திபாழாவின் தாக்குதல்கள் ஆக்கிரமிக்கப்பட்ட குத்ஸ் பிரதேசத்திலும், ஊப்ரா தடுப்பு முகாமிலும் பலத்த சேதத்தை ஏற்படுத்தியது. ஜியோனிஸ சமூகத்தில் இதன் தாக்கம் குறித்து மஆரிப் எனும் இஸ்ரேலியப் பத்திரிகை கருத்து வெளியிடுகையில்,

கடந்த மார்ச் 19ஆம் தேதி இஸ்ரேலிலிருந்து மில்லியன் கணக்கான யூதர்கள் வெறியேறினார்கள். ஒவ்வொரு வருடமும் இஸ்ரேலில் இருந்து சுமார் 26,000 யூதர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று குடியேறி வருகின்றனர். எனவும் அப்பத்திரிகை மேலும் தெரிவிக்கின்றது.

இதற்கிடையில் ராமல்லா பிரதேசத்தில் ஊப்ரா எனும் யூதக் குடியேற்றப் பகுதியில் பலஸ்தீனப் போராளி ஒருவரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இரையாகி 07 ஜியோனிஸ்ட்டுகள் உயிரிழந்துள்ளனர். மிகச் சாதாரண ஆயுதத் தோடு இப்பிரதேசத்திற்குள் ஊடுருவியப் போராளி எந்தக் காயமுமின்றி தாக்குதலை நடத்திவிட்டு தப்பிவந்தமை ஜியோனிஸ இராணுவ வட்டாரங்களில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இத்தொடரான தாக்குதல் களின் பின்னணியில் இரண்டு கட்டக் காலக்கெடு ஒன்றினை விதித்து ஹமாஸ் போராடி வருவதாக கள ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். இன்னமும் இரண்டு வருடங்களுக்குள் பலஸ்தீனப் பூமியை

சுதந்திரப் பூமியாக மாற்றுவது என்ற உறுதியுடனேயே தற்போது தாக்குதல் திட்டங்களைத் தயாரித்து நடைமுறைப்படுத்தி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதனையே ஹமாஸின் ஆன்மிகத் தலைவர் அஷ்ஷெய்க் அஹ்மது யாஸீன் அவர்கள் இஸ்கந்தரிய்யாப் பல்கலைக் கழகத்தில் பலஸ்தீன மக்களின் இன்திபாழா குறித்து கருத்து வெளியிடுகையில்,

"பலஸ்தீனியர்கள் கொன்றொழிக்கப்படுகின்றார்கள். இனச் சுத்திகரிப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள் எனினும் அவர்கள் மிகப்பலமானவர்கள். அல்லாஹ்வின் நாட்டத்தினால் அவர்கள் தோல்வியடையவே மாட்டார்கள். வெள்ளைக் கொடிகள் ஒருபோதும் உயரப் பறக்காது. பலஸ்தீன மண்ணை மீட்கும் வரை கடைசிப் போராளியும் ஓய்ந்திருக்கப் போவதில்லை" எனக் குறிப்பிட்டுள்ளார்கள். அவர்கள். மேலும் குறிப்பிடுகையில், "இது வரலாற்றுப் போராட்டம், அதில் அசைவின்றி உறங்கி இருப்பவர்களை வரலாறு மன்னித்துவிடாது. இன்று எமது சமூகம் இந்தப் போராட்டத்துக்கு கொடுக்கும் விலை மிக உயர்ந்தது. பலஸ்தீனர்கள் தங்களது உயிர்களை கொடுத்து அல்லாஹ்வின் உரிமையை மீட்பதற்குப் போராடி வருகின்றார்கள். இந்த விடுதலைப் பாதையில் பொறுமையாகவும், சகிப்புத் தன்மையோடும் நிலைத்திருக்கின்றார்கள். இன்று நீங்கள் இஸ்லாமிய சமூகம் ஒன்றுபட்ட சமூகம் என்பதை உறுதிப்படுத்துகின்றீர்கள். எனினும் எந்தப் புயலுக்கு முன்னாலும் இந்த ஒற்றுமையை சிதறடிக்கப்படக் கூடாது எனவும் தனது பேச்சில் குறிப்பிட்டார்கள்.

அதேநேரம் அண்மைக்காலப் போக்குகள் தொடர்பாக ஹமாஸ் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில், "பலஸ்தீனின் நகரங்கள், கிராமங்கள் ஒவ்வொன்றுமே முற்றுகையிடப்பட்டும், ஆயிரக்கணக்கான மக்கள் காயப்படுத்தப்பட்டும், சுட்டுக் கொல்லப்பட்டும் இரத்தம் சிந்திக் கொண்டிருக்கின்றார்கள். எமது சிறுவர்களுக்கு எதிராக சியோனிஸ எதிரிகள் இழைக்கும் கொடுமைகள் அதிகரித்த போதிலும், போராளிகள் ஓய்ந்துவிடவோ, சரணடையவோ இல்லை" இவ்வாறு அண்மையில் ஹமாஸ் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டள்ளது.

இஸ்லாமிய, அரபு உலகை நோக்கி கேள்விக் கணை தொடக்கும் அவ்வறிக்கை "இதுவே பலஸ்தினிலுள்ள உங்களது சகோதரர்களினதும், குடும்பங்களினதும் நிலை. உங்கள் பங்கு எங்கே?, எதிரிகளின் கொடுமைகளுக்கு எதிரான உங்கள் பதிலடியைப் பலஸ்தினர்கள் எப்போது காண்பார்கள்? உங்களுடைய சகோதரர்களுக்கு உதவுவதில் நீங்கள் எப்போது பங்காளிகளாக மாறுவீர்கள்? எனவும் கேள்வி எழுப்பப் பட்டுள்ளது.

அல்லாஹ் குர்ஆனிலே, "நீங்கள் கஷ்டமான நிலையிலும், வசதியான நிலையிலும் உங்களின் செல்வத்தினாலும், உயிர்களினாலும் அல்லாஹ்வின் பாதையிலே போராடுவதற்கு விரைந்து செல்லுங்கள். நீங்கள் அறிந்தவர்களாக இருப்பீர்களாயின் இதுவே உங்களுக்குச் சிறந்தது." என்ற அழைப்புக்கு உங்கள் பதில் என்ன? எனவும் ஹமாஸின் இவ்வறிக்கை கேள்வி எழுப்பியுள்ளது.

இஸ்லாமிய இரத்தம் ஓடுகின்ற ஒவ்வொரு முஸ்லிமைப் பொறுத்தவரையிலும் இந்தக் கேள்விகள் மிக முக்கியமானவையாகும். இது அவனது சொந்தப் பிரச்சினை, புவியியல் ஒழுங்கில் நிலத்தால் நாம் பிரிக்கப்பட்டாலும் கொள்கையால் அனைவரும் சகோதரர்கள், எமது இந்த ஈமானியப் பிணைப்பு எச்சந்தர்ப்பத்திலும் பிரித்து நோக்கப்படுவதில்லை. சுவர்க்கத்தில் பலஸ்தீனப் போராட்டத்தில் ஷஹீதாக்கப்பட்ட ஒரு சகோதரனுடன் அருகில் இருக்க வேண்டும் என்றால், குறைந்தது எம் கண்ணீர் சிந்தி அவர்களுக்காகப் பிரார்த்திப்போம். எம் வியர்வை சிந்தி அவர்களுக்காகப் பொருளாதார உதவி செய்வோம். நிச்சயமாக சுவர்கத்துக்குப் பகரமாக முஃமின்களின் உயிர்களையும், செல்வங்களையும் அல்லாஹ் வாங்கிவிட்டான். அல்லாஹ்வே சுவர்க்கத்தை விலையாகக் கொடுத்து எமது உயிர்களையும், செல்வங்களையும் வாங்கத் தயாராகி விட்டான். விற்பதற்கு யார் தயார்? என்பதே எம் முன்னால் உள்ள கேள்வியாகும்.

நாம் ஒவ்வொருவரும் ஏதோவொரு வகையில் இப்போராட்டத்தில் பங்கேற்போம். பலஸ்தீன் எமது சொந்த பூமி. அங்கு வாழும், இரத்தம் சிந்தும் ஒவ்வொரு முஸ்லிமும் எம் சகோதரர்கள் என்ற உணர்வினை எம் இதயங்களில் இருத்தி செயற்படுவோம். பலஸ்தீனப் பூமி மீட்கப்படும்நாள் அண்மித்து வரும்.

# நேர்மையை பலியிட நிர்பந்திக்கப்படும் நீதித் துறை!

## பா.ஜ.க.வினால் தொடர்ந்து தாக்கப்படும் நீதித்துறை!!



'ஆட்சியாளர்களுக்கு பயந்து சாதகமாக தீர்ப்பு தர வேண்டும் நீதித் துறை..' என நிர்பந்திக்கும் விதமாக பாஜகவினர் அடுத்தடுத்து என நீதித் துறை மீது தொடர் தாக்குதல் நடத்தி வருகின்றனர். ஜெகதீப் தன்கர், நிஷிகாந்த் துபே, தினேஷ் சர்மா, ராகேஷ் குமார்.. எனச் சிலர் அதிகார அச்சுறுத்தல் தருவது எங்கே போய் முடியப் போகிறதோ..?

தன்னாட்சி கொண்ட துறைகளான சி.பி.ஐ, அமலாக்கத் துறை, வருமான வரித் துறை, லஞ்ச ஒழிப்புத் துறை. ஆகியவற்றை சின்னாபின்னப் படுத்தி தன் அரசியல் எதிரிகளை பழி வாங்கும் ஆயுதமாக்கி செயல்பட்டு வருகிறது பாஜக அரசு. இது மட்டுமின்றி கவர்னர், குடியரசுத் தலைவர் போன்றோர்களையும் தங்கள் கைப்பாவையாக்கி, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகள் இயற்றும் சட்ட மசோதாக்களை காலவரம்பின்றி நிறுத்தி வைக்கும் பாசிச பாஜக அரசு.. தற்போது நீதித் துறையையும் தன் ஏவல் நாயாக்க நினைக்கிறது.

பலமுறை பாஜக அரசின் மக்கள் விரோத சட்டங்களை, செயல்பாடுகளை கேள்வி கேட்காமல் கடந்து சென்ற நீதிமன்றங்கள்.. தொடர்ந்து மக்கள் பாதிக்கப்படும் நிலை உணர்ந்து சில சமயங்களில் மத்திய அரசின் செயல்பாடுகளுக்கு கடிவாளம் போடுவதும் நடக்கிறது. அந்த வகையில் பாதிக்கபடுவோரின் நியாயக் குரலுக்கு உச்ச நீதிமன்றம் செவி சாய்க்கும் போது பாஜக ஆட்சியாளர்கள் பதறுகிறார்கள்! அரசின் அதிகார அத்துமீறல்களை சுட்டிக் காட்டும் போது கொந்தளிக்கின்றனர்.

இந்த வகையில் நீதித் துறையின் மீதான பாஜகவின் பகை உணர்வு நாளுக்கு நாள் கொழுந்துவிட்டு எரிந்த வண்ணம் உள்ளது.

நீதித்துறை, மன்னர்களான தங்களுக்கு சாதகமாக செயல்பட வேண்டும் என்பது ஆட்சி யாளர்களின் எதிர்பார்ப்பு. ஆனால், நீதித் துறை மக்களுக்கு ஆதரவாக செயல்பட்டுவிட்டது, - தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி வழக்கில்!

அப்போது முதல் ஆரம்பித்தது இந்த நீதித் துறைக்கு எதிரான வன்மம்!

முதலில் தன்கர் வந்து தாக்குதலை ஆரம்பித்து வைத்தார்!

நாம் எங்கே போகிறோம்..?

என்ன நடந்து கொண்டிருக்கிறது..?

நீதிமன்றங்கள் என்ன சூப்பர் நாடாளுமன்றமா?

ஆளுநர், குடியரசுத் தலைவர்களுக்கெல்லாம் யாருமே உத்தரவிட முடியாது..!

எனவரம்பு மீறிப் பேசி நாட்டின் குடியரசுத் துணைத் தலைவரே ஒரு தாதாவைப் போல உச்ச நீதிமன்றத்தை சாடினார்.! அத்துடன் விடாமல் தீ பிடித்த வீட்டில் பணம் கைப்பற்றப்பட்ட நீதிபதி அலகாபாத் கோர்ட்டுக்கு மாற்றப்பட்ட

விவகாரத்தையும் கிளப்பினார். ஜாக்கிரதை, உங்க பலவீனங்கள் எங்களுக்கு தெரியாதா? என்ற ஸ்டைலில் உக்கிரதாண்டவமாடினார்.

நிஷிகாந்த் துபே (பாஜக எம்.பி)

அடுத்த ஆட்டத்தை நிஷிகாந்த் துபே என்ற எம்.பி ஆடி நீதி துறையை மிரட்டினார்;

நாட்டின் மதரீதியிலான போரை உச்ச நீதிமன்றம் தூண்டி வருகிறது. தனது எல்லை வரம்பை தாண்டி உச்ச நீதிமன்றம் செல்கிறது.

"உச்ச நீதிமன்றம் சட்டங்களை இயற்றினால் நாடாளுமன்றத்தை மூடிவிடலாம்.

நீதிபதிகள் ஒருபோதும் சட்டம் இயற்றும் நாடாளுமன்றமாகிவிட முடியாது. இன்றைய சூழலில் எதிர்ப்பை பதிவு செய்வது அவசியம்.

எல்லாவற்றுக்கும் உச்ச நீதிமன்றத்துக்கு சென்றால் நாடாளுமன்றம், சட்டப்பேரவைகள் எதற்கு? அவற்றை இழுத்து மூடி விடலாம்"

அவரையடுத்து தினேஷ் சர்மா என்ற எம்.பி தினவெடுத்த சிங்கம் போல கர்ஜித்தார்!

இதென்ன நீதித் துறையையே சாடுகிறீர்கள் என எதிர்கட்சிகள் கேட்ட போது,

பாஜக தலைவர் ஜெ.பி. நட்டா "பாஜக எப்போதும் நீதித்துறையை மதித்து வருகிறது, அதன் பரிந்துரைகளையும் உத்தரவுகளையும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டுள்ளது. நீதிமன் றங்கள் நமது ஜனநாயகத்தின் பிரிக்க முடியாத பகுதி " என்று கூறி, நட்டா சமாளித்தார். அதே சமயம் பிரதமர் இதுபோல பாஜக எம்.பிக்கள் நீதித் துறையை நிந்திப்பது குறித்து வாய் திறக்காமல் அமைதி காத்து வருகிறார்.

முன்னாள் தலைமை நீதிபதி சந்திரசூட் அவர்கள் தன் பதவி காலத்தில் எத்தனையோ தீர்ப்புகளை இந்துத்துவர்களுக்கு ஆதரவாக கொடுத்தவர் என்று விமர்சிக்கப்பட்டவர். ஆனால், பல விவகாரங்களில் நியாயத்தின் பக்கமும் உறுதியாக நின்றுள்ளார்!

அப்படி நியாயத்தின் பக்கத்தில் நின்றதற்கான விலையை அவர் தர வேண்டாமா? ஓய்வு பெற்றாலும் சும்மா விடமாட்டோம். இவரை டிஸ்டர்ப் பண்ணுவதன் மூலம் இப்ப பதவியில் இருக்கும் நீபதிகளுக்கும் ஒரு பயம் வர வேண்டும். அது தான் ஒன்றிய பாஜகவின் திட்டம்.

இத்தனைக்கும் பதவியில் இருந்தபோது இவர் வீட்டு விநாயகர் பூஜைக்கு அன்று அழையா விருந்தாளியாகச் சென்று பிரதமர் மோடியே கலந்து கொண்டார்.

'அவருக்கே கூட இன்றைக்கு ஆப்பு வைக்கும் போது நீங்கள்ளாம் எம் மாத்திரம்..?' என இன்றைய நீதிபதிகளுக்கு சொல்ல வருகிறார்கள் சங்கிகள்!

விஷயம் இது தான்:

உச்ச நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி சந்திரசூட்டுக்கு எதிராக குடியரசுத் தலைவரிடம் புகார் மனு அளிக்கப்பட்டு உள்ளது! புகார் அளித்தது வேறு யாருமல்ல, மற்றொரு நீதிபதி ராகேஷ் சர்மா! இந்துத்துவ சக்திகளுக்கு நெருக்க மானவர். அவரது குற்றச்சாட்டு இது தான்;

சமூக செயற்பாட்டாளரும் - குஜராத் கலவரத்தில் மோடியின் அட்டுழியங்களை அம்பலப்படுத்திவருமான டீஸ்டா செடல்வாட்டின் ஜாமீன் மனுவை விசாரிக்க ஜூன் 2023ல்



அடுத்தடுத்து இரண்டு அமர்வுகளை விடுமுறை நாளில் அக்கறை எடுத்து செய்தாராம், அன்றைய தலைமை நீதிபதி சந்திர சூட். ஆகவே, அது குறித்து சந்திர சூட்டை சி.பி.ஐ விசாரிக்க வேண்டுமாம்.!

டீஸ்டா செடல்வாட் ஒரு உண்மையான சமூக செயற்பாட்டாளர். அவர் அரசியல் நோக்கத் திற்காக பழிவாங்கப்படுகிறார். ஆகவே, அவரது ஜாமீன் மனு மிக நியாயமானது. மேலும், நாட்டின் முதல் அட்டர்னி ஜெனரல் எம்.சி. செடல்வாட்டின் பேத்திதான் இந்த டீஸ்டா செடல்வாட்! 'மோடிஜீயையே அம்பலப்படுத்திய இவரது ஜாமீன் வழக்கில் தலைமை நீதிபதி எப்படி அதீத அக்கறை காட்டலாம்?' என்பதே சங்கிகளின் நீண்ட நாள் குமுறலாகும்.

அதை சமயம் பார்த்து தற்போது தூசி தட்டி எடுக்கின்றனர்..!

ஒரு நாட்டில் நீதித் துறை சுயேட்சையாகவும், சுதந்திரமாகவும் செயல்பட முடிந்தால் தான் அங்கே நீதி நிலைக்கும், நியாயங்கள் கிடைக்கும். தர்மங்கள் நிலை நாட்டப்படும். ஆனால், நீதித் துறையையே தனக்கு சாதகமாக வளைத்து போட முரட்டுத்தனம் காட்டுகிறது ஒன்றிய பாஜக அரசு.


மக்களாகிய நாம் தற்போது நீதித் துறையின் மீது ஆட்சியாளர்கள் தொடுக்கும் தாக்குதலை வேடிக்கை பார்க்கக் கூடாது. நீதித் துறையை பாதுகாக்க ஜனநாயக சக்திகள் ஓரணியில் திரள வேண்டும்.

நீதித் துறை சுயேட்சையாக செயல்படு வதற்கும், நேர்மையாக செயல்படுவதற்குமான சூழல்கள் உருவாக்கப்பட வேண்டும்.

சாவித்திரி கண்ணன்
நன்றி - அறம்



17 ஏப்ரல் 2025 அன்று ஓர் மரியாதை நிமித்தமாக அய்யா பாலபிராஜதிபதி அவர்களை சந்தித்தோம் அப்போது அவர்களுக்கு வேர்கள் பதிப்பகம் சார்பாக அவரங்கசீப் வரலாற்று பாடத்தில் இருந்து நீக்கவேண்டியவரா? மற்றும் முஸ்லிம்களும் ஒடுக்கபட்டோரும் என்ற நூல்களை வழங்கினோம்



சகோதரர் பாஸ்கர் அவர்களுக்கு குரான், புக்குகள் கொடுக்கப்பட்டு தாவா செய்யப்பட்டது.நேர்வழி (பஷிராக) கிடைக்க துவா செய்யுங்கள்.
இடம் : -கரிசவயல்,தஞ்சாவூர் (DT)




# சமூக ஊடகங்கள் வெறுப்புரைகளுக்கான ஒரு வாகனம்

**இந்தப்** பகுதி, முஸ்லிம்கள் மீதான வெறுப்புரைகளைப் பரப்ப சமூக ஊடகங்கள் எப்படி பயன்படுத்தப்படுகின்றன என்பதைக் காட்டும் முந்தைய அத்தியாயங்களின் எடுத்துக் காட்டுகளை அடிப்படையாகக் கொண்டது. மேலும், சமூக ஊடகங்கள் வெகுவாக பரவி வரும் நிலையில் அவற்றில் உருவாகும் சவால்கள் பற்றியும் இங்கே பேசப்படுகிறது.

**சமூக ஊடகங்களின் தீங்கான பதிவுகளை (Content) ஒழுங்குபடுத்தல்**

சமூக ஊடகங்கள் தினசரி வாழ்க்கையின் ஓர் அங்கமாகிவிட்டன. Facebook, Twitter, YouTube போன்ற தளங்களில் மில்லியன் கணக்கானோர் பகிர்வதும், லைக் செய்வதும், கருத்துரைப்பதும், புதுப்பிப்பதும் செய்கின்றனர். Facebook மற்றும் Twitter-ல் பயனாளர்களுக்கு இடையேயான மெசேஜ் அனுப்பும் வசதிகளும், Facebook-க்குச் சொந்தமான WhatsApp-ல் முழுமையாக தகவல் பரிமாறும் (மெசேஜிங்) சேவையும் வழங்கப்படுகிறது.

இந்தியா உலகிலேயே மிகவும் அதிகமான முகநூல் (Facebook) மற்றும் WhatsApp பயனாளர்களைக் கொண்ட நாடாகும். Google-க்கு சொந்தமான YouTube மற்றும் TikTok போன்றவை வீடியோக்களைப் பதிவேற்றுவதற்கும், பார்ப்பதற்கும் பயன்படுத்தப்படும் மிகவும் பிரபலமான தளங்களாகும். இவை ஏற்படுத்தும் தாக்கமும், அபாரமானதாகும்.

சமூக ஊடகங்கள், பாரம்பரிய ஊடகங்களைவிட முற்றிலும் மாறுபட்ட, புதுமையான இடத்தைப் பிடித்துள்ளன. சமூக ஊடகம் என்பது பத்திரிகை நிறுவனம் போன்று செய்திகளைத் தயாரிக்கின்ற அமைப்பல்ல; தகவல், யோசனைகள், கடந்த காலத்தில் வெளியான நிகழ்வுகள், தனிப்பட்ட கருத்துகள், வீடியோக்கள் என பலவகையான உள்ளடக்கங்களை தனி நபர்கள் மற்றும் குழுக்கள் உருவாக்கி, பகிர்ந்து கொள்ளும் ஒரு தளமாகும்.

இங்கு யார் வேண்டுமானாலும் ஒரு செய்தியை உருவாக்குபவராகவும், அதேசமயம் பெறுபவராகவும் இருக்க முடியும் - இதுவே அதன் முக்கியத்தன்மை. இதனால் செய்திகளை உருவாக்குவதிலும், பரப்புவதிலும் மக்களுக்கு தனிச்சுதந்திரம் கிடைக்கிறது.

ஆனால் அதே நேரத்தில், தவறான தகவல்கள், வெறுப்புணர்வு அல்லது தீங்கு விளைவிக்கும் தகவல்களை கட்டுக்குள் கொண்டு வரமுடியுமா? என்ற கேள்வியையும் எழுப்புகிறது. இது, இணைய உரிமைகள் (Digital Rights) மற்றும் கருத்து தெரிவிக்கும் சுதந்திரம் (freedom of expression) ஆகியவற்றின் சமநிலையை எப்படி பாத்துகாக்கும் என்பதும் கேள்விக்குறியே.

மேலும், சமூக ஊடகங்களில் செயல்படும் ஆல்கொரிதம்கள் (algorithms) இந்த சிக்கலை மேலும் மோசமாக்குகின்றன. பயனாளர்களின் பழக்க வழக்கங்களைப் பார்த்து அவர்களை அதே போல் ஈர்க்கும் வகையில் உள்ளடக்கங்களைத் திருப்பித்தரும் முறை இதில் நடைமுறையில் உள்ளது. அது அவர்களுக்கு தீங்கு விளைவிக்கும் வகையில் இருந்தாலும் அதனை திரும்பத் திரும்ப அவர்களைப் பார்க்கச் செய்வது, (even if that content is harmful) அதாவது, ஒரு பயனர் ஒரு முறைக்கு மேல் தவறான தகவல் அல்லது வெறுப்பை கக்கும் வீடியோவையோ, தகவலையோ கிளிக் செய்தால், அத்தகைய உள்ளடக்கங்கள் தொடர்ந்து அவருக்கு பரிந்துரைக்கப்படும். இதனால், தவறான செய்திகள், வெறுப்புரைகள் மற்றும் சகிப்புத்தன்மையற்ற கருத்துக்கள் தொடர்ந்து பரவ வாய்ப்புள்ளது.

Facebook, Twitter @ X, YouTube போன்ற தளங்களில் தீங்கான உள்ளடக்கங்களை கட்டுப்படுத்த சில விதிமுறைகள் மற்றும் நடைமுறை செயல்பாடுகள் உள்ளன. இருப்பினும், இவை போதுமானதல்ல என்பது நாளுக்குநாள் தெளிவாகி வருகிறது.

**முகநூலின் (Facebook) வெறுப்பின் பரவல்**

Facebook ஒரு முக்கியமான எடுத்துக்காட்டு. 2021-ல் சில உள்நிலை ஆவணங்களை வெளியிட்ட Facebook ஊழியர்கள், அதன் தளத்தில் வெறுப்புரை, தவறான தகவல் மற்றும் வன்முறையைத் தூண்டும் பேச்சுக்களை ஒழுங்குபடுத்துவதில் கடுமையான குறைபாடுகள் இருப்பதை வெளிக்கொண்டு வந்தனர். இந்தியா Facebook-க்கான மிகப்பெரிய சந்தையாக இருப்பதால், இந்திய பயனாளர்கள் இதன் பாதிப்புக்கு மிகவும் எளிதாக உள்ளாகிவிடுகின்றனர்.

**2019-ல் சமூக ஆர்வலர்களால் வெளியிடப்பட்ட Facebook India-வை பற்றிய ஒரு முக்கிய ஆய்வு அறிக்கை:**

2019-ல் குடிமக்களுக்கான ஒரு அமைப்பால் (independent civil society) Facebook இந்தியா தளத்தில் 6 மாதங்கள் நடந்த வெறுப்புரைகளை கண்காணித்து அதன் அடிப்படையில் வெளியிடப்பட்ட ஆய்வில், அவர்கள் மிக முக்கியமாக கண்டறிந்த விஷயமாகக் கூறுவது :

“எங்கள் முக்கியமான கண்டுபிடிப்பு - எந்த சந்தேகமும் இல்லாமல் கூறக்கூடியது. இந்திய சமூகத்தில் சாதி, மதம் மற்றும் பாலின சிறுபான்மையினரை குறிவைக்கும் வெறுப்புரைகள் Facebook-ல் மிகவும் பரவலாக உள்ளன. நேரடி இழிவுரைகளுக்கு அப்பாற்பட்ட வகையில், தொடர்ந்து தாக்கத்தை ஏற்படுத்தும் வகையிலான பதிவுகள், சிறுபான்மையினருக்கு எதிரான வேறுபாடு காட்டும் கருத்துகள் மற்றும் வன்முறையை தூண்டும் அழைப்புகள் நம் கண்களில் பட்டன.”

இந்த ஆய்வில், வெறுப்புரைகளில் மிகவும் அதிகமாகக் காணப்பட்டவை இஸ்லாமியருக்கு எதிரானவையாகும் அதாவது 37%. குறிப்பாக, 2019 டிசம்பர் மாதத்திற்குப் பிறகு நடைபெற்ற CAA எதிர்ப்பு போராட்டங்கள் நிகழ்ந்த நாட்களில், முஸ்லிம்களை குறிவைக்கும் வகையான தீவிரமான பதிவுகள் Facebook-ல் 300% அளவிற்கு அதிகரித்துள்ளன என்று Facebook-இன் ஆய்வாளர்களே கூறுகின்றனர்.

ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகள் குறித்து Facebook மற்றும் YouTube கூறுவது என்னவெனில்,

“தங்களுடைய செயற்கை நுண்ணறிவு (AI) தொழில்நுட்பம் பெரும்பாலான தீங்கு விளைவிக்கும் பதிவுகளை அந்தந்த தருணத்தில் கண்டறிந்து தானாகவே நீக்கிவிடும் என்பதாகும்.”

ஆனால், 2021-ல் வெளியான Facebook-இன் உள்நிலை ஆவணங்களில், Facebook-இன் சொந்த பொறியியலாளர்களே கூறுவதைப் போல, AI அமைப்புகள் வெறுப்புகளை பரப்பும் தகவல்கள் 3% முதல் 5% மட்டுமே உண்மையில் நீக்குகின்றன. மேலும், வன்முறையையும், வன்முறையை தூண்டும் உள்ளடக்கங்களையும்

1%க்கும் குறைவான பகுதிகள் மட்டுமே நீக்கப்படுகின்றன.

மேலும், Facebook தளம் இந்திய மொழிகளின் தன்மைகளை புரிந்துகொண்டு, சரியான அளவில் செயல்பட முடியவில்லை என்பதை தாங்களே ஒப்புக்கொண்டுள்ளனர். இந்தியாவின் 22 அதிகாரப்பூர்வ மொழிகளில், Facebook தளத்தில் 20 மொழிகளில் மட்டுமே வழங்கப்படுகிறது.

“Wall Street Journal-க்கு ஒரு Facebook பிரதிநிதி தெரிவித்ததாவது, Facebook-இன் AI அமைப்புகள் இந்தி மற்றும் பெங்காலி உள்ளிட்ட 5 இந்திய மொழிகளில் மட்டுமே உள்ளடக்கங்களைத் தேர்ந்தெடுக்கத் திறன் கொண்டவை ஆனால் அவற்றை பயன்படுத்தும் இந்தியர்கள் பல்வேறு மொழிகள் கொண்டவர்களாக உள்ளனர்.”

மேலும், Facebook-இன் உள்நிலை பரிசீலனைகள் சுயாதீனமாக இல்லை என்பதற்கும் பல ஆதாரங்கள் வந்துள்ளன. எடுத்துக்காட்டாக, Facebook-இன் உள்நிலை ஆய்வில், RSS தொடர்புடைய பயனர்கள், குழுக்கள், மற்றும் பக்கங்கள் வெளியிடும் பதிவுகள் பெரும்பாலும் கவனிக்கப்படுவதே இல்லை என்று கூறப்படுகிறது. இதற்கு காரணமாக AI அமைப்புகளின் திறனின்மை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. Facebook இந்தியா தளத்தில் உள்ள 20 இந்திய மொழிகளில், உண்மை கண்டறியும் (fact-checking) சேவைகள் 11 மொழிகளுக்கே செயல்படுத்தப்பட்டுள்ளன.

தீங்கு விளைவிக்கும் பதிவுகளை நீக்கும் Facebook India-வின் நடவடிக்கைகள் நடப்பிலேயே சீராக இருப்பதில்லை என்பதை ஆய்வுகள் காட்டுகின்றன. 2019-ல் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், Facebook இந்தியாவில் 6 மாதங்கள் வெறுப்புரைகள் கண்காணிக்கப்பட்டன. Facebook, தங்களுக்கு தெரிவிக்கப்படும் தீங்கு விளைவிக்கும் உள்ளடக்கங்களை 24 மணி நேரத்துக்குள் பரிசீலித்து பதிலளிக்கும் என கூறினாலும், அடிப்படையில் சராசரியாக 48 மணி நேரம் எடுத்துக்கொள்கிறது. மேலும், ரிப்போர்ட் செய்யப்பட்ட பதிவுகளில் 11% க்கு எந்த பதிலும் வழங்கப்படவில்லை.

மேலும், முதலில் நீக்கப்பட்ட பதிவுகளில் 43% க்கும் மேற்பட்டவை 90 நாட்களுக்கு பிறகு மீண்டும் தளத்தில் ஏற்றப்பட்டன. இதன் காரணமாக, நீக்கப்பட்ட பதிவுகளின் உண்மையான விகிதம் 12% லிருந்து 6.8% ஆக குறைந்து விட்டது என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இவர்கள் ஆராய்ந்த அனைத்து மீண்டும் வெளியிடப்பட்ட பதிவுகளும் இஸ்லாமியர் எதிர்ப்பு உள்ளடக்கங்களே என்பதும் முக்கியக் கண்டுபிடிப்பாகும்.





**வன்முறைக்கு எரிபொருள்: வாட்ஸ்அப்பின் நிலை**

இந்தியாவில் வாட்ஸ்அப்பின் பயன்பாடு, தனிநபர் செய்தி பரிமாற்ற பயன்பாட்டையும் தாண்டி, சமூக பிளவுகளைத் தூண்டி வெறுப்புப் பேச்சை அதிகரிப்பதையும் கண்டறியப் பட்டுள்ளது.

2015 முதல் இந்தியாவில் கும்பல் வன்முறை

மற்றும் அடித்துக் கொலை செய்தல் பரவுவதில் வாட்ஸ்அப் செய்திகளின் பங்கு குறித்து ஆய்வு செய்ய, லண்டன் ஸ்கூல் ஆஃப் எகனாமிக்ஸின் ஊடக மற்றும் தகவல் தொடர்புத் துறை வாட்ஸ்அப் நிறுவனத்தால் நியமிக்கப்பட்டது.

அடித்துக் கொலை செய்யப்பட்டவர்களின் இலக்குகள் வெவ்வேறு காரணங்களுக்காக இருந்தாலும், வாட்ஸ்அப் போன்ற செய்தி பயன்பாடுகள் “பாதிக்கப்பட்டவர்களைப் பற்றி பொய்களைப் பரப்பவும், தவறான தகவல்களை (போலி செய்திகள்) பயன்படுத்தி அணி திரட்டவும், பாதுகாக்கவும், சில சந்தர்ப்பங்களில் அவர்களின் வன்முறையின் படங்களை ஆவணப் படுத்தி பரப்பவும்“ பயன்படுத்தப்பட்டது என்பது ஒரு பொதுவான அம்சமாக ஆய்வில் கண்டறியப்பட்டது.

சில சமூகங்களுக்கு எதிரான பாரபட்சம் வன்முறைக்கு ஒரு அடிப்படை காரணமாக கண்டறியப்பட்டது. இந்த வகையில் ஆய்வின் முக்கிய கண்டுபிடிப்பு பின்வருமாறு:

ஒரு குறிப்பிட்ட குழுவிற்கு (முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், தலித்துகள், ஆதிவாசிகள் போன்றவை) எதிரான வன்முறை வழக்கில், கிராமப்புற மற்றும் நகர்ப்புற உயர் மற்றும் நடுத்தர சாதி இந்து ஆண்கள் மற்றும் பெண்கள் பிரிவினரிடையே பாகிஸ்தானியர்கள், முஸ்லிம்கள், தலித்துகள் மற்றும் விமர்சன அல்லது மாறுபட்ட குடிமக்கள் மீது பரவலான, அவநம்பிக்கை, வெறுப்பு, இழிவு மற்றும் சந்தேகம் நிலவுகிறது என்பது ஒரு முக்கிய கண்டுபிடிப்பு.

வாட்ஸ்அப் பயனர்கள் இந்த மக்களிடையே தவறான தகவல்களை பரப்பவும், மற்றும் வாட்ஸ்அப் நெட்வொர்க்குகளில் பாகுபாடு காட்டப்படும் குழுக்களைப் பற்றிய தவறான தகவல்களைப் பகிரவும் முன்கூட்டியே தயாராக உள்ளனர். இத்தகைய பயனர்களின் பாரபட்சம், ஆதாரங்களின் துல்லியம் அல்லது வாட்ஸ்அப் பதிவுகள் குறித்து சிறிதும் கேள்வி எழுப்பாமல், தவறான தகவல் மற்றும் வெறுப்புப் பேச்சு களைப் பார்ப்பதன் மூலம் வளரும், வழக்கமாக தூண்டப்படும் உணர்ச்சிகள் கோபம், பெருமை, அருவருப்பு, அவமானம், சந்தேகம் மற்றும் வெறுப்புகள் மக்களிடையே சுலபமாக கடத்தப்படுகின்றன.

உள்ளூர், பிராந்திய அல்லது தேசிய அளவில் நடந்ததாகக் கூறப்படும் சம்பவங்கள் வேண்டு மென்றே முஸ்லிம்களுக்கு எதிரான பாரபட்சம் மற்றும் வெறுப்பை ஆழப்படுத்தவும், இந்து சமூகத்தில் பெருமையை தூண்டவும், முஸ்லிம் களுக்கு எதிரான எந்தவொரு வன்முறையையும் நியாயப்படுத்தவும் திரித்து கூறப்படுகின்றன.

### வெளிப்படுத்தப்பட்ட மற்றொரு உள்அறிக்கையில்,

பேஸ்புக் ஆராய்ச்சியாளர்கள் இந்து தேசியவாத குழுவான பஜ்ரங் தளம் வாட்ஸ் அப்பை “வன்முறையை ஒழுங்கமைக்கவும் தூண்டவும்“ பயன்படுத்துவதாகக் கோடிட் டனர். பஜ்ரங் தளத்தை ஒரு ஆபத்தான குழுவாக நியமிக்க வேண்டும் என்று பேஸ்புக் ஊழியர்கள் பரிந்துரைத்தாலும், அவர்கள் தடை செய்யப்படவில்லை மற்றும் தொடர்ந்து செயல்பட்டனர். நிறுவனத்தின் வணிக திறனை இது ஆபத்தில் ஆழ்த்தும் என்றும் இந்தியாவில் உள்ள ஊழியர்கள் அச்சுறுத்தல்களுக்கு ஆளாக நேரிடும் என்ற அச்சம் காரணமாக பேஸ்புக் பஜ்ரங் தளத்தை அகற்றவில்லை என்று கூறப் படுகிறது.

### டெல்லி வன்முறையின் பின்னணியில் வெறுப்பு பதிவுகளை அதிகரித்தல்

இந்த அறிக்கையின் 2 மற்றும் 3 அத்தியாயங் களில் குறிப்பிட்டபடி, CAA நிறைவேற்றத்திற்குப் பிறகு ஏற்கனவே வகுப்புவாத பதற்றம் நிறைந்த சூழலில் ஆன்லைன் நுகர்வோரின் கவனத்தை நிலைநிறுத்த சமூக ஊடகங்கள் ஒரு பயனுள்ள ஊடகத்தை வழங்கின. இந்த பிரிவின் இலக்கு பகுப்பாய்வின் நோக்கம் வெறுப்பைப் பரப்பு வதற்கு சமூக ஊடகங்கள் எவ்வாறு ஒரு வாகனமாகப் பயன்படுத்தப்பட்டன என்பதை வெளிப்படுத்தும் நிகழ்வு ஆய்வுகளை முன்வைப்பதாகும், இது வன்முறைக்கு ஏற்ற சூழ்நிலைகளை உருவாக்கியது.

### யூடியூப் - YOUTUBE

டிசம்பர் 2019 முதல் காசியாபாத்தில் உள்ள தாஸ்னாவில் உள்ள தேவி மந்திர் தலைமை பூசாரியும், இந்து ஸ்வபிமான் என்ற அமைப்பின் தலைவரும், அகில பாரதிய சன்ட் பரிஷத்தின்

தலைவருமான யாதி நரசிங்கானந்தின் சமூக ஊடக பதிவுகள் ஒரு எடுத்துக்காட்டு. பிப்ரவரி 2020இல் அவர் ஆற்றிய சில ஆட்சேபனைக்குரிய உரைகள் யூடியூப் மூலம் பரப்பப்பட்டன, அவற்றில் பின்வருவன அடங்கும்:

உங்கள் மதத்திற்கு தேவைப்படும்போது, நீங்கள் ஒரு போரை நடத்த வேண்டும். மதத்திற்காக ஆயுதம் ஏந்துவது பாவம் அல்ல, புண்ணியம்.

ஷாஹீன் பாக் இந்துக்களின் இனப்படு கொலைக்கு அழைப்பு விடுக்கிறது.

ஷாஹீன் பாக்கிற்கு எதிராக போராடும் தைரியத்தை காட்டிய கபில் மற்றும் கோபால் ஆகியோருடன் அனைத்து இந்துக்களும் நிற்க வேண்டும். இந்த வீரர்களுக்கு ஆதரவு கொடுங்கள் மற்றும் இஸ்லாத்திற்கு எதிராக போராடுங்கள்.

**இஸ்லாம் போன்ற ஒரு தீமையை நாம் சமூகத்திலிருந்து அகற்றாவிட்டால், நாம் எப்படி உயிர் வாழ்வது?**

இஸ்லாத்தை நாம் அழித்தால் மட்டுமே மனிதகுலத்தை காப்பாற்ற முடியும்.

டெல்லியில் ஜிஹாதிகளுக்கு எதிராக கபில் மிஸ்ரா மட்டுமே இந்துக்களுக்காக நின்றார். கபில் மிஸ்ராவுடன் அனைத்து இந்துக்களும் நிற்க வேண்டும்.

மேலே உள்ள கூற்றுகளில் முஸ்லிம்களுக்கு எதிராக பரப்பப்படும் கருத்துக்கள் வெறுப்பு பேச்சாக உள்ளது. அந்த நேரத்தில் பலரால் பரப்பப்பட்ட இந்து-முஸ்லீம் பிரிவினை வாதத்தை அவரது பதிவுகள் அதிகப்படுத்தின. முஸ்லிம்களையும் இஸ்லாத்தையும் இந்துக் களுக்கு எதிரான ஆக்கிரமிப்பாளர்களாக சித்தரித்து, தவறான கூற்றுகளை பரப்பி, முஸ்லீம் சமூகத்திற்கு எதிரான வன்முறைக்கு மற்றவர்களின் அழைப்புகளை மகிமைப்படுத்து கின்றன. ஒருவரின் மதத்தை பாதுகாக்க ஆயுதம் ஏந்துவது புண்ணியம் என்ற நியாயத்திற்குள் மறைந்திருக்கும் இஸ்லாத்திற்கும் முஸ்லிம் களுக்கும் எதிரான நேரடி வன்முறை அழைப்புகள் இன்னும் ஆபத்தானவை.

யூடியூப்பின் சமூக வழிகாட்டுதல்களின்படி, இந்த உள்ளடக்கம், வெறுப்பு பேச்சு மற்றும் வன்முறை உள்ளடக்கமாக தகுதி பெறும். யூடியூப்பின் கொள்கையில், இனம் மற்றும் சாதி போன்ற பிற பண்புகளின் பட்டியலில் ஒன்றாக மதம் சார்ந்த தனிநபர்கள் அல்லது குழுக்களுக்கு எதிரான வன்முறை அல்லது வெறுப்பை ஊக்குவிக்கும் உள்ளடக்கம் அடங்கும். தனி நபர்கள் அல்லது "வரையறுக்கப்பட்ட மக்கள் குழு" ஆகியோருக்கு எதிராக வன்முறை செயல்களைச் செய்ய யாரையும் தூண்டும் எந்தவொரு உள்ளடக்கத்தையும் இந்த தளம் அனுமதிக்காது.

வெறுப்பு பேச்சை தடை செய்யும் யூடியூப்பின் கொள்கையை "பல அல்லது கடுமையான மீறல்களை" காரணம் காட்டி நரசிங்கானந்தின் கணக்கை யூடியூப் சமீபத்தில் நிறுத்தினாலும், வன்முறைக்கு முந்தைய மாதங்களில் அவர் மில்லியன் கணக்கான பின்தொடர்பவர்களை யூடியூப்பில் கொண்டிருந்தார். யூடியூப்பின் வழிமுறைகளால் தூண்டப்பட்டு, நரசிங்கானந்தின் பதிவுகள் அவரது பின்தொடர்பவர்களிடையே மற்றும் அதற்கு அப்பால், அதே வழியில் உள்ள பதிவுகளை அணுகிய எவருக்கும் பல மடங்கு பரவியிருக்கும்.

**பேஸ்புக் மற்றும் ட்விட்டர்**

முந்தைய அத்தியாயங்களில் விவரிக்கப்பட் டுள்ளபடி, பாஜக தலைவர்களான பர்வேஷ் சாஹிப் சிங், அனுராக் தாக்கூர் மற்றும் கபில் மிஸ்ரா ஆகியோர் CAA எதிர்ப்பு போராட்டங் களுக்கு எதிரான தங்கள் நிலைப்பாடுகளில் உரக்க குரல் எழுப்பினர். அவர்கள் ட்விட்டர் மற்றும் பேஸ்புக்கில் தங்கள் உரைகள் மற்றும் பேரணிகளை பதிவேற்ற சமூக ஊடக தளங்களை விரிவாக பயன்படுத்தினர். சமூக ஊடக பயன் பாட்டின் ஒரு வெளிப்பாடாக, அவர்களின் ஆதரவாளர்கள் மற்றும் பின்தொடர்பவர் களிடையே முழக்கங்கள் பரவியது.

கபில் மிஸ்ரா பிரபலப்படுத்திய முழக்கம் ஒரு எடுத்துக்காட்டு, "தேசத்தின் துரோகிகளை என்ன செய்ய வேண்டும்? அவர்களை சுட்டுத் தள்ளுங்கள்", இது புது டெல்லியில் CAA ஆதரவு பேரணியில் பயன்படுத்தப்பட்டது. அவர் இந்த வீடியோவை டிசம்பர் 20, 2019 அன்று, CAA ஆதரவு பேரணிக்கு ஆதரவான தலைப்புடன் ட்வீட் செய்தார்.


vaigarai velicham official

இரண்டு நாட்களுக்குப் பிறகு, டிசம்பர் 22 அன்று, வடகிழக்கு டெல்லியில் உள்ள சோனியா விஹார் வார்டின் பாஜக தலைவர் அனுபம் பாண்டே, பேஸ்புக்கில் நேரலையில் சென்று அதே முழக்கத்தை எழுப்பியபடி ஒரு ஊர்வலத்தை நடத்தினார். சில நாட்களுக்குப் பிறகு, ஜனவரி 27, 2020 அன்று அனுராக் தாக்கூர் "தேசத்தின் துரோகிகளை" என்ற முழக்கத்தின் முதல் பாதியை குரல் எழுப்பி, "அவர்களை சுட்டுத் தள்ளுங்கள்" என்று கூட்டத்தை முழக்கத்தை முடிக்க வலியுறுத் தினார். இந்த முழக்கம் விரும்பிய வெறுப்பின் அடையாளமாக மாறியது.

வன்முறைக்கு முந்தைய காலகட்டத்தில் கபில் மிஸ்ரா தொடர்ந்து ட்விட்டரைப் பயன்படுத்தி இந்து-முஸ்லீம் பிரிவினைவாதத்தை பரப்பினார். ஜனவரி 23, 2020 அன்று, அவர் இப்படி ட்வீட் செய்தார்:

"பாக்கிஸ்தான் கி என்ட்ரி ஷாஹீன் பாக் மெயின் ஹோ சுக்கி ஹைன். டெல்லி மெயின் சோட்டே சோட்டே பாக்கிஸ்தான் பனாயே ஜா ரஹே ஹைன். ஷாஹீன் பாக், சந்த் பாக், இந்த்ர லோக் மெயின் தேஷ் கா கானூன் நஹி மானா ஜா ரஹா ஹைன். பாக்கிஸ்தானி டங்காயியோ கா டெல்லி கி சத்கோ பே கப்சா."

(பாக்கிஸ்தான், ஷாஹீன் பாக் உள்ளே நுழைந் துள்ளது. டெல்லியில் பல சிறிய பாக்கிஸ்தான்கள் கட்டப்படுகின்றன. ஷாஹீன் பாக், சந்த் பாக் மற்றும் இந்த்ரலோக் போன்ற இடங்களில் இந்தியாவின் சட்டம் பின்பற்றப்படவில்லை. பாக்கிஸ்தானிய கலவரக்காரர்கள் டெல்லி தெருக்களை கைப்பற்றியுள்ளனர்).

"நாட்டின் துரோகிகளை" சுட்டுத் தள்ள வேண்டும் என்ற முழக்கத்துடன் டிசம்பர் 2019 முதல் கபில் மிஸ்ராவின் உரைகள், பிப்ரவரி 23 அன்று மௌஜ்பூரில் கொடுக்கப்பட்ட இறுதி எச்சரிக்கை வரை, சமூக ஊடகங்கள் மூலம் பரவலாக பயணித்தன.

பிப்ரவரி 23, 2020 முதல் பிப்ரவரி 24 வரை முக்கியமான நேரம், அத்தியாயம் 3 இல் விவரிக்கப்பட்டுள்ளபடி, சமூக ஊடகங்களின் வெறித்தனமான மற்றும் பரவலான பயன் பாட்டைக் கண்டது.

பாஜக மற்றும் இந்து வலதுசாரி தீவிரவாதக் குழுக்களுடன் தொடர்புடைய அரசியல் தலைவர்களால் இந்த இரண்டு நாட்களில் ஒளிபரப்பப்பட்ட பேஸ்புக் நேரலை வீடியோக்களின் உள்ளடக்கம், வெறுப்பு பேச்சு மற்றும் வன்முறை உள்ளடக்கமாக இருக்கும் பல பதிவுகளுடன், பிரிவினைவாத இந்து-முஸ்லீம் கதைகளை வெளிப்படுத்துகிறது.

இந்த வீடியோக்களில் பரவும் மொழி மற்றும் வெறுப்பு செய்திகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட விளக்கங்கள் கீழே மறுஉருவாக்கம் செய்யப் பட்டுள்ளன. இந்த வீடியோக்கள் பேஸ்புக்கில் ஆயிரக்கணக்கான பார்வைகளை குவித்தன என்பது குறிப்பிடத்தக்கது.

பிப்ரவரி 23 ஆம் தேதி காலையில், பாஜகவின் ரோஹினி மண்டலத்தின் மாநில நிர்வாகியான சஞ்சீவ் சர்மா, பேஸ்புக் நேரலை நிகழ்வில் உரையாற்றினார், அதில் அவர் தனது பார்வையாளர்களை தெருக்களில் இறங்கும்படி கேட்டார்:

"நாங்கள் இதுவரை அமைதியாக இருந்தோம். ஆனால் இப்போது நாங்கள் எங்கள் வீடுகளி லிருந்து வெளியே வந்து அவர்களை நிறுத்த வேண்டும். இல்லையெனில், அவர்கள் எங்கள் வீடுகளுக்குள் நுழைவார்கள். ஜெய் ஸ்ரீ ராம். பாரத் மாதா கி ஜெய்!"

அஞ்சலி வர்மா, பாஜக டெல்லியுடன் தொடர்புடையவர், பிப்ரவரி 23ஆம் தேதி காலையில் பேஸ்புக்கில் பின்வரும் செய்தியை வெளியிட்டார்,

"கிரஹாயுத் கி கரோ தய்யாரி, தப் சுத்ரேங்கே முல்லே டோபி தாரி."

(உள்நாட்டுப் போருக்கு தயாராகுங்கள், அப்போதுதான் மண்டை ஓடு தொப்பி அணிந்த முல்லாக்கள் பாடம் கற்பார்கள்).

பிப்ரவரி 23 அன்று மௌஜ்பூர் சௌக்கில் இருந்து ஒரு பேஸ்புக் நேரலை வீடியோவில், ராகினி திவாரி கூறினார்:

"பஹுத் ஹுவா சனாதன் பர் வார், அப் நஹி சஹேங்கே வார். சனாதனியோ பாஹர் ஆவோ. மாரோ யா மார் டாலோ. பாத் மெயின் தேகி ஜாயேகி. பஹுத் ஹுவா. அப் ஜிஸ்கா கூன் நா கௌலா, கூன் நஹி வோ பானி ஹை."

(இந்து மதத்தின் மீது போதுமான தாக்குதல்கள் நடத்தப்பட்டுவிட்டன. இனிமேல் இதுபோன்ற தாக்குதல்களை நாங்கள் பொறுத்துக்கொள்ள மாட்டோம். இந்துக்களே, வெளியே வாருங்கள். சாகுங்கள் அல்லது கொல்லுங்கள். மீதியை பிறகு பார்க்கலாம். போதும். இப்போது உங்கள் இரத்தம் கொதிக்கவில்லை என்றால், அது இரத்தம் அல்ல, அது தண்ணீர்.)

பிப்ரவரி 23 ஆம் தேதி மதியம் பேஸ்புக்கில் நேரலை ஒளிபரப்பில், பாஜகவின் இளைஞர் பிரிவின் உறுப்பினரான ஆகாஷ் வர்மா, மௌஜ்பூர் சௌக்கில் இந்து கும்பல்களின் முழக்கங்களுடன் முணுமுணுப்பதை கேட்கலாம்:

“மோடிஜி, தும் லத் பஜாவோ, ஹம் துமாரே சாத் ஹைன்; லம்பே-லம்பே லத் பஜாவோ, ஹம் துமாரே சாத் ஹைன்”

(மோடிஜி, நீங்கள் அவர்களை கட்டைகளால் அடியுங்கள், நாங்கள் உங்களுடன் இருக்கிறோம். பெரிய கட்டைகளால் அடியுங்கள், நாங்கள் உங்களுடன் இருக்கிறோம்.) அவரது வீடியோ சுமார் 40,000 பார்வைகளைப் பெற்றது.

இந்த நேரலை ஒளிபரப்பின் போது, வர்மா கற்கள் ஏற்றப்பட்ட ஒரு வண்டியை இறக்குவதைக் காட்டினார், இது CAA ஆதரவு குழுக்களால் கற்கள் சேகரிக்கப்பட்டதைக் குறிக்கிறது. அவர் கூறுகிறார்,

“இதைப் பாருங்கள், கற்கள் சாலைகளை அடைந்துவிட்டன”. கூட்டத்திலிருந்து ஒரு குரல், “விஜய் பார்க் கே முல்லோ கே லியே யஹின் கிராவோ” (விஜய் பார்க் முஸ்லிம்களுக்காக இங்கே அவற்றை இறக்குங்கள்) என்று கூச்சலிடுவதைக் கேட்கலாம். விஜய் பார்க் ஒரு முஸ்லீம் ஆதிக்கம் நிறைந்த பகுதி. வண்டி அனைத்து கற்களையும் தரையில் இறக்கியபோது, வெர்மா உட்பட கூட்டம் ஜெய் ஸ்ரீ ராம் என்று ஆரவாரம் செய்தது. வெர்மா தனது பார்வையாளர்களை அடுத்த நாள், பிப்ரவரி 24 அன்று அதிக வலிமையுடன் அணிதிரட்டும்படி வேண்டுகோள் விடுத்தார், “நண்பர்களே, காலைக்குள், நாம் அதிக எண்ணிக்கையில் கூட வேண்டும். நாம் நமது பலத்தை, நமக்கு இருக்கும் பலத்தை காட்ட வேண்டும்.” அவர் தனது கேமராவை ஒரு சங்கு ஊதும் மனிதரிடம் மாற்றினார், “சங்கு ஊதப்படுகிறது. இது நமது இந்து ஒற்றுமை” என்றார்.

அஞ்சலி வர்மா பிப்ரவரி 24 ஆம் தேதி அதிகாலை மௌஜ்பூர் சௌக்கில் பேஸ்புக்கில் நேரலையில் வந்தார், அங்கு அவர் இரவைக் கழித்தார். வீடியோ காட்சிகளில் ராகினி திவாரி சுமார் ஒரு டஜன் ஆண்களை,

“மோடிஜி, லம்பே லம்பே லத் பஜாவோ, ஹம் துமாரே சாத் ஹை; ஜரூரத் படி தோ ஹம்மே புலா லோ, ஹம் துமாரே சாத் ஹை”

(மோடிஜி, குச்சிகளால் அவர்களை அடியுங்கள், நாங்கள் உங்களுடன் இருக்கிறோம்; தேவைப்பட்டால் எங்களை அழையுங்கள், நாங்கள் உங்களுடன் இருக்கிறோம்) என்று கூச்சலிட வலியுறுத்துகிறார்.

**திவாரி தொடர்ந்து,**

“பாரத் மெயின் யதி ரேஹ்னா ஹோகா, ஜெய் ஸ்ரீ ராம் கேஹ்னா ஹோகா” (நீங்கள் இந்தியாவில் வாழ விரும்பினால், நீங்கள் ஜெய் ஸ்ரீ ராம் என்று சொல்ல வேண்டும்) என்றார். இதைத் தொடர்ந்து, வர்மா தனது பார்வையாளர்களைப் பார்த்து, “நாங்கள் இரவு முழுவதும் மௌஜ்பூரில் இருந்தோம். நாங்கள் போகவில்லை. இங்கு வருமாறு அனைத்து இந்து சகோதரர்களையும் அழைக்கிறேன். ஆஜ் பஹுத் படா தாண்டவ் கர்னா ஹை” (இன்று நாம் இங்கு ஒரு பெரிய களேபரம் செய்ய வேண்டும்) என்றார். “இப்போது இந்து விழித்துவிட்டதால், நாம் பின்வாங்க மாட்டோம். அது பாகிஸ்தானாக மாற வேண்டாம்“ என்று கூறி வர்மா தனது பேஸ்புக் நேரலையை முடித்தார். இந்த வீடியோ 49,000க்கும் மேற்பட்ட பார்வைகளைப் பெற்றது.

பேஸ்புக்கின் சமூக வழிகாட்டுதல்களின் கீழ், மேலே அடையாளம் காணப்பட்ட வீடியோக்கள் மற்றும் பதிவுகளின் உள்ளடக்கம் வன்முறைக்கு தூண்டுதலுடன் கூடிய வெறுப்பு பேச்சாகக் கருதப்படும். “இனம், தேசிய தோற்றம், இயலாமை, மத இணைப்பு” போன்ற பாதுகாக்கப்பட்ட பண்புகள் அடிப்படையில் கருத்துக்கள் அல்லது மக்களுக்கு எதிரான நேரடி தாக்குதலாக வெறுப்பு பேச்சு வழிகாட்டுதல்களாக வரையறுக்கின்றன. 29 தளத்தில் உள்ள

உள்ளடக்கத்திலிருந்து ஆஃப்லைன் தீங்கு ஏற்பட வாய்ப்பிருப்பதை உணர்ந்து, "கடுமையான வன்முறையைத் தூண்டும் அல்லது எளிதாக்கும்" எந்த மொழியையும் அகற்றுவதாக பேஸ்புக் கூறுகிறது.

**வாட்ஸ்அப்**

டெல்லி வன்முறையின் போது, வாட்ஸ்அப் கூட தூண்டுதல் மற்றும் வெறுப்பு பேச்சின் கடத்தியாக இருந்தது. "கட்டார் இந்து ஏக்தா" (பெயர் மாறிக்கொண்டே இருந்தது) என்ற வாட்ஸ்அப் குழு உருவாக்கம் ஒரு அறியப்பட்ட எடுத்துக்காட்டு.

இந்த குழு பிப்ரவரி 25, 2020 அன்று நள்ளிரவுக்குப் பிறகு (அத்தியாயம் 3இல் விவரிக்கப்பட்டுள்ளது) வன்முறை நடந்து கொண்டிருந்தபோது உருவாக்கப்பட்டது. குழு அரட்டைகள் வன்முறை செயல்களின் திட்ட மிடப்பட்ட தன்மையை வெளிப்படுத்தினாலும், முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறை செயல்களை நியாயப்படுத்தும் சில உருவகங்கள் மற்றும் கதைகளின் சுழற்சியையும் அவை சுட்டிக்காட்டுகின்றன.

பத்திரிகையாளர்களால் பெறப்பட்ட குழு அரட்டைகளிலிருந்து சில எடுத்துக்காட்டுகள், அனுப்பப்பட்ட செய்திகள் உட்பட:

கபில் மிஸ்ரா கி இஸ் வீடியோ கோ சுனேன், சம்ஜேன், அவுர் பஹூத் மெஹ்னத் கர் கே பூரே ஹிந்துஸ்தான் மெயின் பேஜேன் க்யூங்கி யே பஹூத் சஹி ஹை ஹண்ட்ரட் பெர்செண்ட் தேஷ் ஹித் மெயின் ஹை, இத்னா தோ கர் ஹி சக்தே ஹைன் மேரே தோஸ்த்.

(இந்த வீடியோவில் கபில் மிஸ்ராவைக் கேளுங்கள், புரிந்து கொள்ளுங்கள், மேலும் இதை இந்தியா முழுவதும் அனுப்ப முயற்சி செய்யுங்கள், ஏனென்றால் இது நூறு சதவீதம் நாட்டின் நலனுக்கு சாதகமானது. நண்பர்களே, நீங்கள் இதைச் செய்ய முடியும்)

வோ அப்னே சேத்ரா மெயின் லேடீஸ் டெய்லர் கி துகான் கோலங்கே யா சூடி பேசெங்கே, ஐசே காம் கர்னேங்கே ஜிஸ்ஸே மஹிலாவோன் சே உன்கா சம்பர்க் பத் சகே அவுர் லவ் ஜிஹாத் கோ படாயா ஜா சகே.

(அவர்கள் எங்கள் பகுதிகளில் பெண்கள் டெய்லர் கடைகளைத் திறப்பார்கள் அல்லது வளையல்கள் விற்பார்கள், இந்து பெண்களுடன் தொடர்பு கொள்ளவும், காதல் ஜிஹாத்தை அதிகரிக்கவும் அவர்கள் இதுபோன்ற வேலைகளைச் செய்வார்கள்)

கணிதக் கூட்டுத்தொகை, உங்களுக்கு கணிதம் தெரிந்தால் சொல்லுங்கள்! 1947-2017 க்கு இடையில், இந்தியாவில் தங்கியிருக்கும் முஸ்லிம்களின் மக்கள் தொகை (சுதந்திரத்திற்குப் பிறகு பாகிஸ்தானுக்குச் செல்வதற்குப் பதிலாக) பத்து மடங்கு அதிகமாகிவிட்டால், அடுத்த 70 ஆண்டுகளில் நமது மகன்களின் வாழ்நாளில் அவர்களின் மக்கள் தொகை என்னவாக இருக்கும்? பதில், 'மீண்டும் பத்து மடங்கு, அதாவது 300 கோடி... பிறகு என்ன நடக்கும் என்று யோசியுங்கள். நமது சேமிப்பு, நமது தொழில்கள், நமது வேலை, நமது கோவில்கள், பள்ளிக்குச் செல்லும் நமது மகள், நமது அரசியலமைப்பு, நமது சாதி பெருமை, நமது இட ஒதுக்கீடு, நமது தலைவர்கள் மற்றும் நமது சாதி மக்கள் ஆகியோருக்கு என்ன நடக்கும்? அப்போதுதான் நமது சுயநல மனங்கள் ஒரு தீர்வைக் கொண்டு வர முடியுமா?.

இந்த செய்திகள் முஸ்லிம்களிடமிருந்து சாத்தியமான "அச்சுறுத்தல்கள்" குறித்த சரிபார்க் கப்படாத மற்றும் தவறான கூற்றுகளைப் பகிர் வதை வெளிப்படுத்துகின்றன, இது இந்துக் களுக்கு அடிபணிந்து ஓட வேண்டிய பயத்தை ஏற்படுத்துகிறது. உட்கொள்ளும் தகவலின் துல்லியம் அல்லது நம்பகத்தன்மையை சரி பார்க்காமல், இந்த உருவாக்கப்பட்ட அச்சுறுத் தல்கள் இதுபோன்ற விளைவுகளைத் தவிர்க்க வன்முறையை நாட வேண்டிய கடமையை விதிக்க தெளிவாகப் பயன்படுத்தப்படுகின்றன. இந்த வாட்ஸ்அப் குழுவின் உறுப்பினர்கள் கடுமையான வன்முறையில் ஈடுபட்டிருக்க வாய்ப்புள்ளது.

தீங்கு விளைவிக்கும் உள்ளடக்கம் சமூக ஊடகங்களில் எவ்வளவு காலம் இருக்கிறதோ, அவ்வளவு அதன் சுழற்சி அதிகமாகும். வடகிழக்கு டெல்லி வன்முறைக்கு முந்தைய காலகட்டத்தில் யாதி நரசிங்கானந்தின் உரைகள் மற்றும் சொல்லாட்சிகளின் விளைவு மற்றும் பரவல் குறித்த ஒரு பத்திரிகையாளர் விசாரணை, அவரது உரைகளின் வீடியோக்கள் அவரது

சொந்த யூடியூப் சேனல் மூலம் மட்டுமல்லாமல், பிற இந்துத்துவா நெட்வொர்க்குகளாலும் பரப்பப்பட்டன என்பதை சுட்டிக்காட்டியது.

கபில் மிஸ்ரா போன்ற சமூக ஊடகங்களில் அதிக பின்தொடர்பவர்களைக் கொண்ட மற்ற நபர்களுக்கும் இது உண்மை என்று கருதலாம். இந்த வெளிச்சத்தில், தீங்கு விளைவிக்கும் உள்ளடக்கத்தின் டிஜிட்டல் தடமானது சம்பந்தப்பட்ட நபரால் மட்டுமல்லாமல், அதே சமூக ஊடக தளங்களைப் பயன்படுத்தும் தொடர்புடைய குழுக்கள் மற்றும் நெட்வொர்க்குகளால் பெருக்கப்படுவதால் மட்டுமே பெரிதாக்கப்படுகிறது.

டெல்லி வன்முறை நடந்த நேரத்தில் நரசிங்கானந்தின் வெறுப்புப் பேச்சுகளை சமூக ஊடக தளங்கள் அல்லது சட்ட அமலாக்க நிறுவனங்கள் கவனிக்காத நிலையில், அவர் தொடர்ந்து முஸ்லிம் விரோத உணர்வுகளை வெளிப்படுத்தினார்.

ஜனவரி *2022* இல், நரசிங்கானந்த் ஒரு FIR இல் பெயரிடப்பட்டு, டிசம்பர் *17-19, 2021* க்கு இடையில் ஹரித்வாரில் நடந்த இந்து மாநாட்டில் முஸ்லிம்களுக்கு எதிராக இனப்படுகொலை செய்ய அழைப்பு விடுத்ததற்காக உத்தரகண்ட் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டார்.

இது சமூக ஊடக சேனல்களில் நேரலையில் ஒளிபரப்பப்பட்டது. சுருக்கமாக, முஸ்லிம்களுக்கு எதிரான பொருளாதார புறக்கணிப்பு போதாது என்றும், இந்துக்கள் முஸ்லிம்களுக்கு எதிராக ஆயுதங்களுடன் அணிதிரள வேண்டும் என்றும், இந்த ஆயுதங்கள் வாள்களை விட சிறந்ததாக இருக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

டிசம்பர் *2021* மாநாட்டில் பேச்சாளர்கள் இனப்படுகொலைக்கான அழைப்புகளுக்கு சமமான எந்த வார்த்தைகளையும் பயன்படுத்தவில்லை என்று டெல்லி காவல்துறை உச்ச நீதிமன்றத்தில் பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்த பிறகு, ஏப்ரல் *2022* இல், நீதிமன்றம் காவல்துறையை கண்டித்து, "ஒழுங்கான" பிரமாணப் பத்திரத்தை சமர்ப்பிக்கும்படி கேட்டது.

நீதிமன்றத்தின் கண்டனத்திற்குப் பிறகு, மே *2022*இல், டெல்லி காவல்துறை தனது போக்கை மாற்றியது, அதில் உரைகளை ஆய்வு செய்து வெறுப்புப் பேச்சு குற்றங்களுக்காக பேச்சாளர்களுக்கு எதிராக FIR பதிவு செய்துள்ளதாக நீதிமன்றத்திற்குத் தெரிவித்தது.

சமூக ஊடகங்களின் பயன்பாடு குறித்த இந்த கவனம் செலுத்திய பகுப்பாய்வு, வடகிழக்கு டெல்லியில் நடந்த வகுப்புவாத வன்முறைக்கு முன்பும், அதன் போதும் வெறுப்புப் பேச்சு, மதப் பிரிவு, முஸ்லீம் வெறுப்பு மற்றும் பிற தீவிரவாத சொல்லாட்சிகளை பரப்புவதில் இது ஒரு முக்கிய வாகனமாக கருதப்பட வேண்டும் என்று முடிவு செய்கிறது.

**யார் பொறுப்பு?**

மார்ச் *2020* இல், வடகிழக்கு டெல்லியில் வகுப்புவாத வன்முறைக்குப் பிறகு, டெல்லி சட்டமன்றம் ஆம் ஆத்மி கட்சி தலைவர் ராகவ் சத்தா தலைமையில் ஒன்பது பேர் கொண்ட அமைதி மற்றும் நல்லிணக்கக் குழுவை அமைத்தது. குழுவின் கூறப்பட்ட செயல்பாடுகளில் முதன்மையானது "வகுப்புவாத அமைதி மற்றும் நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் திறன் கொண்ட சூழ்நிலைகளை" கையாள்வது மற்றும் வகுப்புவாத வன்முறைக்கு "பொறுப்பான காரணிகளை விரிவாக ஆராய்ந்து அடையாளம் காண்பது" ஆகும்.

தகவல் தொழில்நுட்பத்திற்கான நாடாளுமன்ற நிலைக்குழு மற்றும் அமைதி மற்றும் நல்லிணக்கக் குழு ஆகியவை பேஸ்புக் இந்தியாவின் துணைத் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநரான திரு. அஜித் மோகனை தனித்தனி அழைப்பாணைகளில் தங்களுக்கு முன் ஆஜராகும்படி கோரின.

திரு. மோகன் நாடாளுமன்றக் குழுவின் முன் ஆஜரானார், ஆனால் பேஸ்புக் போன்ற இடைத்தரகர்களின் ஒழுங்குமுறை மற்றும் டெல்லி தேசிய தலைநகர் பிரதேசத்தில் சட்டம் ஒழுங்கு ஆகியவை இந்திய ஒன்றியத்தின் பிரத்யேக அதிகாரத்திற்குள் வருவதால், அமைதி மற்றும் நல்லிணக்கக் குழுவின் முன் ஆஜராக மறுத்துவிட்டார்.

அமைதி மற்றும் நல்லிணக்கக் குழுவால் பின்னர் வழங்கப்பட்ட அழைப்பாணையை பேஸ்புக் இந்தியா எதிர்த்தது மற்றும் அழைப்

பாணையை திரும்பப் பெறக் கோரி இந்திய அரசியலமைப்பின் 32 வது பிரிவின் கீழ் உச்ச நீதிமன்றத்தை அணுகியது.

அஜித் மோகன் எதிர் தேசிய தலைநகர் பிரதேசம், டெல்லி சட்டமன்றம் (அஜித் மோகன்) வழக்கில் உச்ச நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு சர்ச்சைக்கு தீர்வு கண்டது. உச்ச நீதிமன்றம், பேஸ்புக் பொது உரையில் செலுத்தும் செல்வாக்கின் தன்மை மற்றும் அதன் விளைவாக ஏற்படும் பொறுப்பிலிருந்து விலகும் தளத்தின் முயற்சிகள் குறித்து தீர்க்கமான கருத்துக்களைத் தெரிவித்தது. இந்த வகையில் உச்ச நீதிமன்றம் பின்வருமாறு கூறியது:

பேஸ்புக் போன்ற ஒரு இடைத்தரகரின் பரந்த மற்றும் செல்வாக்கு மிக்க பங்கை தொடக் கத்திலேயே கவனிப்பதன் மூலம் எங்கள் கருத்தை தொடங்க வேண்டும். இந்த நவீன தொழில்நுட்ப யுகத்தில், மனுதாரர்கள் தாங்களே எந்தவொரு குறிப்பிடத்தக்க பங்கையும் செய்யாமல் வெறும் கருத்து பரிமாற்றத்திற்கான ஒரு தளம் என்று







வாதிடுவது மிகவும் எளிமையானது - குறிப்பாக அவர்களின் செயல்பாட்டின் விதம் மற்றும் வணிக மாதிரியைப் பொறுத்தவரை மில்லியன் கணக்கான மக்கள் மீது செல்வாக்கு செலுத்தும் பெரிய வணிக நிறுவனங்களாக மாறியுள்ள இந்த இடைத்தரகர்களால் அதிக பொறுப்புக் கூறலின் அவசியம் மற்றும் பல அரசாங்கங்களால் வெளிப்படுத்தப்பட்ட கவலைகளை சுதந்திர உலகில் விவாதம் காட்டியுள்ளது.

இன்று பேஸ்புக் இந்த கிரகத்தின் 1/3 மக்கள் தொகையின் மீது செல்வாக்கு செலுத்துகிறது! இந்தியாவில், பேஸ்புக் 270 மில்லியன் பதிவு செய்யப்பட்ட பயனர்களுடன் மிகவும் பிரபலமான சமூக ஊடகமாக உரிமை கோருகிறது. இத்தகைய அணுகல் பொறுப்பு இல்லாமல் இருக்க முடியாது, ஏனெனில் இந்த தளங்கள் கருத்துக்களின் பரந்த பிரிவுகளை பாதிக்கும் திறனைக் கொண்ட சக்தி மையங் களாக மாறிவிட்டன.

உலகம் முழுவதும் உள்ள பல்வேறு பிரிவினருக்கு குரல் கொடுப்பதில் பேஸ்புக் வகிக்கும் பங்கை குறைத்து மதிப்பிடாமல், அவர்களின் தளம் தவறான தகவல்களால் நிரம்பிய சீர்குலைக்கும் குரல்களையும் வழங்கி யுள்ளது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். இவை மாநிலங்களின் நிர்வாகத்தை இறுதியில் பாதிக்கும் விஷயங்களில் நேரடி தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

இந்த ஊடகங்கள், சக்தியான கட்டமைப்பு களின் கருவிகளாக மாறாமல் இருப்பதை உறுதி செய்ய சுதந்திரமான ஜனநாயகங்களை வற்புறுத்தும் பங்கு இதுதான். இந்த தளங்கள் எந்த வகையிலும் தன்னலமற்றவை அல்ல, மாறாக மிகவும் தனியுரிமையான, ஊடுருவக் கூடிய மற்றும் பொது விவாதங்களை துருவப் படுத்தும் திறன் கொண்ட வணிக மாதிரிகளைப் பயன்படுத்துகின்றன. இந்த விமர்சனத்தை அவர்கள் தவிர்க்க முடியும் என்று சொல்வது ஒரு தவறான கருத்தாகும், ஏனெனில் அவர்கள் இந்த விவாதங்களின் மையத்தில் உள்ளனர்.

மேலும், பேஸ்புக் இந்தியா ஒரு சமூக ஊடக தளம் மட்டுமே என்றும், எனவே வெளியிடப் பட்ட உள்ளடக்கத்தை ஒழுங்குபடுத்துவதற்கு எந்தப் பொறுப்பும் இல்லை என்றும் பேஸ்புக்

இந்தியா எடுத்த நிலைப்பாட்டை உச்ச நீதிமன்றம் மறுத்தது. அவ்வாறு செய்வதன் மூலம், பேஸ்புக் இந்தியாவை "பாரிய சுழற்சி ஊடகத்தின்" தன்மையில் நீதிமன்றம் கருதி, அதன் விளைவாக எடிட்டோரியல் பொறுப்பை அதன் மீது சுமத்தியது.

பேஸ்புக் இந்தியா "அதன் தளத்தில் பரப்ப அனுமதிக்கப்படும் உள்ளடக்கத்தின் மீது கணிசமான அளவிலான கட்டுப்பாட்டை செலுத்துகிறது" என்று உச்ச நீதிமன்றம் நிறுவியுள்ளது. இந்த வகையில் உச்ச நீதிமன்றம் பின்வருமாறு கூறியது:

சமூக ஊடகத் தளமான ஃபேஸ்புக், பரவலான செய்தி ஊடகத்தின் தன்மையைக் கொண்டுள்ளது. இதன் மூலம் பரப்பப்படும் உள்ளடக்கத்தின் தலையங்கப் பொறுப்பு குறித்த கவலைகளை இது எழுப்புகிறது. வெளியிடப்படும் உள்ளடக்கத்தின் Reachஐ குறைத்து மதிப்பிடவோ அல்லது மிகைப்படுத்தவோ முடியாது. 2020ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் மட்டும் 22.5 மில்லியன் வெறுப்புப் பேச்சு உள்ளடக்கத்தை நீக்கியதாக ஃபேஸ்புக் தனது பதிலில் ஒப்புக் கொண்டுள்ளது. இது அதன் தளத்தில் பரப்ப அனுமதிக்கப்படும் உள்ளடக்கத்தின் மீது கணிசமான கட்டுப்பாட்டைக் கொண்டுள்ளது என்பதைக் காட்டுகிறது. அந்த வகையில், மற்ற பரவலான செய்தி ஊடகங்களுக்கு விதிக்கப்படும் தலையங்கப் பொறுப்புடன் இதற்கு ஒப்புமை காண முடியும்.

மனுதாரரைப் போன்ற இடைத்தரகர்களின் வணிக மாதிரி பல நாடுகளிலும் பரவியிருப்பதால், வெவ்வேறு அதிகார வரம்புகளில் அவர்கள் முரண்பாடான நிலைப்பாடுகளை எடுக்க அனுமதிக்க முடியாது. உதாரணமாக, அமெரிக்காவில், ஃபேஸ்புக் தன்னை ஒரு வெளியீட்டாளராகக் காட்டிக்கொண்டது, அதன் தளத்தில் பரப்பப்படும் பதிவுகள் மீது தனக்குள்ள கட்டுப்பாட்டின் முதல் திருத்தத்தின் வரம்பிற்குள் பாதுகாப்பைப் பெற்றது. இந்த அடையாளமானது பதிவுகளை மிதப்படுத்தவும் அகற்றவும் நியாயப்படுத்த அனுமதித்துள்ளது. இருப்பினும், இரண்டு நாடுகளிலும் ஒரே மாதிரியான செயல்பாடுகள் மற்றும் சேவைகளை கொண்டிருந்தாலும், இந்தியாவில் அது தன்னை ஒரு சமூக ஊடக தளமாக மட்டுமே அடையாளப்படுத்தியுள்ளது என்பது வெளிப்படையானது. இவ்வாறு, சர்ச்சையின் தன்மையைப் பொறுத்து, வெவ்வேறு நாடுகளின் மக்கள்தொகையில் ஏறக்குறைய ஒரே மாதிரியான Reachஐக் கொண்ட ஃபேஸ்புக், தனது வசதி மற்றும் விருப்பத்திற்கு ஏற்ப தனது நிலைப்பாட்டை மாற்ற முயற்சிக்கிறது.

திரு. சால்வே ஃபேஸ்புக்கின் பங்கு குறித்து முன்வைத்த அணுகுமுறையை நாங்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. அது வலுவானதாக இருந்தாலும், எங்களை அது நம்பவைக்கவில்லை. மேலே நாம் குறிப்பிட்டது போல, உலகெங்கிலும் உள்ள முன்னேற்றங்கள் எல்லை தாண்டி வளர்ந்து வரும் கவலைகளை பிரதிபலிக்கின்றன. இந்த தளங்கள் ஊக்குவிக்க விரும்புவதாகக் கூறும் தாராளவாத விவாதம் வணிகத்திற்கு பலியாகிவிட்டதா என்பதுதான் கவலை. வணிக மாதிரியின் ஒரு பகுதியாக பதிவுகளை தனிப்பயனாக்கவும் கருத்துக்களை பாதிக்கவும் மனித தலையீடுகளைக் கொண்ட வழிமுறைகளை (algorithms), நாங்கள் ஆரம்பத்தில் கவனித்தோம்.

அவ்வாறு, அவற்றின் முதன்மை நோக்கம் அவற்றின் வணிக நலன்களுக்கு சேவை செய்வதாகும். இது முதலில் ஒரு வணிகம், பின்னர்தான் மற்ற அனைத்தும். அவர்கள் பாராளுமன்றக் குழுவின் முன் ஆஜரானபோது செய்தது போல, அவர்களின் வணிக மற்றும் செயல்பாட்டு நலன்களுக்கு சேவை செய்தால் மட்டுமே அவர்கள் எந்தவொரு குழுவின் முன்பும் ஆஜராவார்கள் என்று அவர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர். ஆனால் அவர்களின் வணிக நலன்கள் பாதிக்கப்படாவிட்டால், அவர்கள் விலகி இருக்க உரிமை கோருகிறார்கள். இத்தகைய நிலைப்பாடு எங்களுக்கு முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாதது. ஃபேஸ்புக் வெறுமனே ஒரு கையை மட்டுமல்ல, கையுறை அணிந்த ஒரு முஷ்டியையும் கொண்டுள்ளது."

இறுதியாக, உச்ச நீதிமன்றம் Facebook India நிறுவனத்துக்கு சமாதானம் மற்றும் ஒற்றுமை குழுவின் முன் ஆஜராகி, டெல்லி வன்முறை சம்பவத்தில் அதன் பெரிதான பங்கு குறித்து எழுப்பப்படும் கேள்விகளுக்கு பதிலளிக்க உத்தரவிட்டது. நீதிமன்றம் இப்படிக் குறிப்பிட்டது:

இப்போது நாங்கள் இந்த வருத்தகரமான வன்முறை சம்பவத்தை ஆராயப் போகிறோம். இந்தச் சம்பவத்தை சட்டரீதியாகவும் சமூக ரீதியாகவும் ஆராய வேண்டிய தேவை சிறிதும் குறைத்து மதிக்கப்பட முடியாது. நாட்டின் தலைநகரமான டெல்லியில் இப்படியொரு நிகழ்வு மீண்டும் நடைபெறக்கூடாது என்பதற் காகவே, இந்நிலையில் Facebook-இன் பங்கு என்னவென்பதை சாத்தியமான அதிகாரங்கள் ஆராய வேண்டியது அவசியம். இதனைத் தழுவியபடி, சட்டசபை ஒரு சமாதானம் மற்றும் ஒற்றுமை குழுவை அமைக்க முயன்றது. அதற்கு சட்டப்பூர்வ அதிகாரம் உள்ளதா என்பது பிறகு தொடர்புடைய பிரிவின் கீழ் எடுத்துக் கொள்ளப்படும். ஒரு உள்ளூர் சட்டமன்ற மற்றும் நிர்வாக அமைப்பாக இருக்கின்ற சட்ட சபையின் கவலை தவறானது என்றும், சட்ட விரோதமானது என்றும் கூற முடியாது. அமைதியும் ஒற்றுமையும் நிலவ வேண்டும் என்பதற்கான பன்முகப் பொறுப்பு அவர்களுக்கு உள்ளது.

**உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்பில் மேலும் கூறியது:**

சமாதானம் மற்றும் ஒற்றுமை குழு, கேள்விகள் எழுப்பும் போது, இந்திய அரசியல் அமைப்பின் ஏழாவது அட்டவணையில் உள்ள பட்டியல் II-இல் வரும் நுழைவுகள் 1 மற்றும் 2 - அதாவது சட்டம் மற்றும் ஒழுங்கு, போலீஸ் ஆகியவை - சார்ந்த பிரிவுகளைத் தொடக்கூடாது, ஏனெனில் அவை குறித்து டெல்லி சட்டசபைக்கு சட்டம் இயற்றும் அதிகாரம் இல்லை. இதன்மூலம், நீதிமன்றம் “மிக நுணுக்கமான சமநிலையை” ஏற்கும் பொருட்டு, மனுதாரர்களுக்கு விசாரணைக்காக ஆஜராகாமலிருக்க விலக்குச் சாசனம் அளிக்கவில்லை என்றும், அந்த விசாரணையை தடை செய்யும் நோக்கத்துடன் செயல்படக் கூடாது என்றும் தெளிவுபடுத்தியது.

**முடிவாக**

சமூக ஊடகத் தளங்களின் தாய் நிறுவனங்கள், அந்தத் தளங்களின் பரவலான பயன்பாட்டினால் உருவாகும் பன்மடங்கு தீங்கிலிருந்து பாதுகாப் பதற்கு முன்னுரிமை அளிப்பது மிக முக்கியம்.

இந்தியச் சூழலில், வெறுப்புப் பேச்சு, பாரபட்சமான கருத்துருவாக்கங்கள் மற்றும் வெறுப்புக் குற்றங்கள் தனிப்பட்ட பயனர்கள் மட்டத்திலும், சமூக மட்டத்திலும் நெருக்க மாகப் பிணைந்துள்ளன என்பது தெளிவாகிறது.

இந்திய முஸ்லிம் பெண்களை இணையத்தில் ஏலம் விடுவதற்காக உருவாக்கப்பட்ட வெறுப்பு செயலிகளின் அண்மைய அம்பலப்படுத்தல்கள், தொழில்நுட்பத்தால் தூண்டப்பட்டு, மத வெறியும், வெறுப்பும் இணையத்தில் பல்வேறு வடிவங்களில் எவ்வளவு தூரம் வெளிப்பட முடியும் என்பதற்கான ஒரு தீவிரமான அறிகுறியாகும்.

மேலே உள்ள உதாரணங்களும், வாட்ஸ்அப் மூலம் தொடர்ந்து வெளிவரும் தகவல்களும், சமூக ஊடகத் தளங்களின் பயன்பாடு பெரும்பாலும் வன்முறைச் சம்பவங்களின் ஒரு அங்கமாகவும் தவிர்க்க முடியாத பகுதியாகவும் இருக்கிறது என்பதைத் தெளிவாக நினைவூட்டுகின்றன - அது தவறான வதந்திகளைப் பரப்புவதாகட்டும், புண்படுத்தும் தூண்டுதல் கருத்துருக்களைப் பரப்புவதாகட்டும் அல்லது வன்முறைச் செயல் களை நடத்துவதற்கு உதவுவதாகட்டும். சமூக ஊடகத்திற்கு தொழில்நுட்ப அம்சங்களில் ஒரு தீவிரமான மாற்றமும், சமூக-அரசியல் தீங்கு விளைவுகளைக் குறைப்பதற்காக ஒழுங்கு முறையை அதிகரிப்பதும் அவசரத் தேவையாக உள்ளது.

இணையம் மற்றும் சமூக ஊடகங்கள் மூலம் பரப்பப்படும் வெறுப்புப் பேச்சை போதுமான அளவு கையாள்வதற்கு இந்தியச் சட்டங்களில் உள்ள தண்டனை விதிகள் புதுப்பிக்கப்பட வில்லை. சந்தேகமின்றி, அதிகரிக்கப்பட்ட ஒழுங்குமுறையின் எந்தவொரு திட்டமிடலும் டிஜிட்டல் மற்றும் கருத்துச் சுதந்திர உரிமை களைப் பாதுகாக்க வேண்டும். மேலும், அரசாங்கம் அதிக கட்டுப்பாடுகள் மூலம் ஒழுங்குமுறையை மீறாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும், அது தணிக்கை அல்லது பேச்சு சுதந்திரத்தை முடக்குதல் அல்லது தனியுரிமை உரிமையை மீறுதல் போன்ற செயல்களுக்கு வழிவகுக்கக்கூடாது.

இன்ஷா அல்லாஹ் தொடரும்.!

Source: UNCERTAIN JUSTICE a Citizens Committee Report on the North East Delhi Violence 2020

தமிழில்: Adv. Jasmine Fathima.

அவன் தன்னைப் பற்றியே அதிகமாகக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தான். சின்ன வயதில் பல சிரமங்கள். வீட்டில் வறுமை.

உலகில் எப்படியாவது வாழ்ந்திட வேண்டும், என வேலை தேடி அலையும் பெற்றோர்கள். அவர்கள் அவனைப் படிக்க வைத்திட வேண்டும் என எத்தனையோ முயற்சிகள் மேற்கொண் டார்கள். இயலவில்லை. காரணம், அவர்களால் போதிய பணத்தை சேமித்திட இயலவில்லை, மட்டுமல்ல, கிடைக்கும் இலவசக் கல்வியைக் கூட அவர்களால் பயன்படுத்திக்கொள்ள இயல வில்லை. காரணம்,

காய்ந்த அவன் வயிற்றுக்குக் கஞ்சி வார்த்திட இயலவில்லை. ஆதலால், அவனை இளம் வயதிலிலேயே வேலைக்கு அனுப்பிவிட்டார்கள், அவனைப் பெற்றவர்கள். அவர்களும் சேர்ந்தே உழைத்தார்கள்.

கையில் கிடைக்கும் வேலை எதுவாக இருந்தாலும் செய்தார்கள்.

இதுதான் இந்தியாவில் வாழும் கோடிக்கணக் கான ஏழைகளின் நிலை. இந்த அவல நிலை. இந்திய நில பரப்பைப்போல் பெரியது.

ஒவ்வொரு வகுப்புக் கலவரங்களிலும் பாதிக் கப்படும் முஸ்லிம்களும் இதே நிலைக்குத்தான் தள்ளப்பட்டார்கள்.

அவன், இந்தியப் பிரதிநிதிகளில் ஒருவன்.

அவன் பருவ வயதை அடைந்ததும், தனக்குள் ஒரு சங்கல்பம் செய்து கொண்டான். ஆமாம் எத்தனை எத்தனை நாளைக்குத்தான் இப்படிக் குடும்பம் முழுவதும் காலையிலிருந்து நடுவு இரவு வரை உழைத்துக் கொண்டே இருப்பது. எந்த மிச்சமுமில்லாமல், அன்வரும் அவனது பெற்றோரும் வாடகை வீட்டில்தான் வாழ்ந்து வந்தார்கள். ஆகவே இனி கொஞ்சம், கொஞ்ச மாகவே பணத்தைச் சேர்ப்பது, ஓர் முதலாளி ஆகிவிடுவது என முடிவு செய்தான்.

இந்த முடிவை செயல்படுத்திட, அவன் சில நேரங்களில் தான் உண்ணும் உணவில் அளவைக் குறைத்துக் கொள்ள வேண்டியிருந்தது, குறைத் துக் கொண்டான். மெல்ல மெல்ல காசும் சேர்ந்தது.

மகனின் முடிவு, முயற்சி, இவையெல்லாம், அவன் தாய் தாகிராவுக்கு மிகவும் மகிழ்ச்சியைத் தந்தது. மகன் மிச்சம் எனத் தந்தவற்றைக் கச்சிதமாகச் சேர்த்து வைத்தாள்.

தன்னை என்னதான் பணத் தொல்லைகள் துளைத்து எடுத்தாலும் மகன் மிச்சம் எனத் தந்தவற்றை அவள் தொடவேமாட்டாள்.

தன்னையும் விஞ்விவரும் வறுமை, அதைத் தொடு, எடு என வலியுறுத்தினாலும் அவள்

# அவன்?

சிறுகதை



அதைத் தொடமாட்டாள்.

அப்படித் தொட்டால், அந்தச் சேமிப்புச் சிதறும், அது சிதறினால், மகனின் சங்கல்பமும் எதிர்காலக் கனவும் சின்னாபின்ன மாக்கும்.

மகன் அன்வரின் எதிர்காலக் கனவை அவன் தாயாரே கலைத்தாள், என்ற அவப்பெயரை அவள் சுமந்திட வேண்டியது வரும். காலமெல் லாம் அவளுக்கு அது சுமையாகவே இருக்கும். அப்படியொரு அவப்பெயரை சுமக்க அவள் தயாராக இல்லை. அவளுடைய எதிர்காலம் ஏன்? அவளைப் போன்ற ஆயிரமாயிரம் பெண்களின் எதிர்காலம் சிதைந்து போனதற்குக் காரணம், இந்த அழுத்தம் வறுமைதான்.

அவளுடைய பெற்றோர்களில் யாரும் அப்படியொரு முடிவை எடுத்திடவில்லை.

அவள், இதைத் தன் வாழ்க்கையில் வறுமை, தன் குடும்பத்தை வாட்டிடும்போதெல்லாம் நினைவில் கொண்டு வந்துள்ளாள். கண்ணீர் வடித்திருக்கின்றாள். விதியை பழித்திருக்கின்றாள். இதனால் அன்வரின் சேமிப்புகள் தாயாரின் பாதுகாப்பில் பத்திரமாக இருந்தன.

அன்வர் இப்போது உற்சாகமாக உழைத்துக் கொண்டிருந்தான்.

ஆமாம்! சேமிப்புப் பெருக, பெருக, வாழ்க்கையில் பிடிப்பு ஏற்பட்டது. உழைப்பில் நம்பிக்கை ஏற்பட்டது.

எதிர்காலத்தின் மேல் நல்ல நம்பிக்கை ஏற்பட்டுவிட்டது.

உழைத்தால் வாழலாம் என்ற நம்பிக்கையோடு உழைத்துக் கொண்டிருந்தான்.

கூலி தூக்குவதிலிருந்து, கிடைத்த எந்தவொரு வேலையையும், அவன் விட்டுவைத்திட வில்லை.

எந்த வேலையை வேண்டுமானாலும் செய்யலாம் என அவன் எடுத்த முடிவு, அவனுக்கு நிரம்ப வேலைகளையும், நிரம்ப நண்பர்களையும் பெற்றுத் தந்தது. அவன் கிராமத்தைச் சார்ந்த செல்வராஜ், தங்கராஜ், அப்துல் ஹமீத் எல்லோரும், அவனுக்கு நண்பர்கள் ஆனார்கள். அத்தனை பேரும் அவன் உழைப்பில் காட்டும் ஆர்வத்தால் உந்தப்பட் டார்கள். கிடைக்கும் வேலைகளைப் பகிர்ந்து கொண்டார்கள்.

சுமை தூக்கும் வேலையில் பெரிய பளுவான வேலை வந்தால் அவர்கள், அதைத் தங்களுக்குள் பகிர்ந்து கொண்டார்கள். அதேபோல் கூலியையும் பகிர்ந்து கொண்டார்கள்.

நாள்கள் நகர்ந்தன.

அன்வரின் சேமிப்பும் வளர்ந்தது. அவன் கழிப்பறைகள் கொண்ட ஓர் வீட்டுக்கு வாடகைக்குச் செல்லலாம் என முடிவு செய்தான். முன்பெல்லாம் கழிப்பறை ஒரு வாடகை வீட்டுக்குச் செல்வதை அவனால் நினைத்துக் கூடப் பார்த்திட இயலாது. காரணம் முன்பணம் தந்திடும் அளவுக்கு அவனிடம் சேமிப்பு இல்லை. இப்போது அவனால் முன்பணம் தந்திட இயலும்.

அதனால் தைரியமாக கழிப்பறை உள்ள ஒரு வீட்டை வாடகைக்கு அமர்த்திக் கொண்டான்.

கழிப்பறைக்காக, கானகத்தை நோக்கி ஓடிய காலம் ஓர் முடிவுக்கு வந்தது.

முஸ்லிம்கள் கூடி வாழும் பகுதியில், ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்துக் கொண்டான்.

ஏதோ பெரியதாக சாதித்துவிட்டதாக எண்ணிக்கொண்டான்.

வீட்டில் ஏழைத்தாய், தந்தை இவர்களின் முகத்தில் தென்பட்ட மகிழ்ச்சி, அவனை இரட்டிப்பு மகிழ்ச்சியுடன் வேலைச் செய்யச் செய்தது.

இப்போது ஹமீதும், ஓர் வாடகை வீட்டை எடுத்துக்கொண்டு, வாழ வந்துவிட்டான். உழைப்பிலும் சேமிப்பிலும் இருவரும் இணைந் தார்கள். இதனால் நட்பு பலப்பட்டது. ஹமீதின் தாயும், தந்தையும் ஒரு சகோதரியும் அன்வரின் குடும்பத்தோடு நெருக்கமானார்கள். ஏனெனில் அன்வரின் ஒழுக்கமான உழைப்பு, நேர்மை, இவை ஹமீதின் வாழ்க்கைப் போக்கை நிரம்பவே நெறிப்படுத்தி இருந்தது.

நட்புகள் குடும்ப உறவாக ஆனது. அது மிகவும் நெருக்கமானது. என்றாலும் அன்வர் தன் உழைப்பின் நண்பர்கள் செல்வராஜ், தங்கராஜ் ஆகியோரின் நட்புகளையும் மறந்து விடுவதில்லை. அவர்களைத் தேடிச் சென்று அவர்களுடன் சென்று டீ குடித்து மகிழ்வான். தனக்குக் கிடைக்கும் வேலை, கூலி இவற்றிலும், அவர்களை இணைத்துக் கொண்டான்.

இப்படி சற்றே தன் வாழ்க்கையை உயர்த்திக் கொண்டபின், அடுத்த இலக்காக, சொந்த வீடு என அமைத்துக் கொண்டான்.

பெரியஅளவில் பணம் தேவைப்படும். அதனால் சொந்தத் தொழில் ஒன்றைத் தொடங்கினால், பணம், பணத்தைச் சம்பாதித்துத் தரும் என திட்டமிட்டு உழைத்தான். அப்போது அவனும் அவன் குடும்பத்தாரும் சற்றும் எதிர்பாராத அந்த நிகழ்வு நடந்தது.

காவல்துறையின், வாகனங்கள் பல அன்வரின் வீட்டுக்கு முன் அணிவகுத்து நின்றன.

சீருடை அணிந்த காவலர்கள் அன்வரின் வீட்டை மட்டுமல்ல, அந்த வீதியை வளைத்து நின்றார்கள்.

அன்வரின் வீட்டுக்குள் புகுந்து வீட்டைக் களபளீகரம் செய்தார்கள்.

ஏன்? ஏன்? எனக் கேட்டான் அன்வர். நீ தானா அவன் எனக் கூறியவாறே அவனை உதைத்தார்கள்.

மிருகத்தனமான அந்தத் தாக்குதல்களைத் தாங்கிட இயலாமல் அன்வர் அயர்ந்து வீழ்ந்தான்.

அவன் தாயார் நிலைகுலைந்தாள், மயங்கி வீழ்ந்தாள்.

தந்தை, தன் மகன் மீது வீழ்ந்த அடிகளில் சிலவற்றைத் தடுத்தார். அவரிடமும் நாங்கள் முரடர்கள்தாம் என்பதைக் காட்டினார்கள்.

அவர்கள் மிதித்த மிதியில் அவர் வாசல் கதவில் மோதி கீழே வீழ்ந்தார், மூர்ச்சையானார். அதற்குள் ஊடகம் வந்து குவிந்தது. எல்லாவற்றையும் படம் எடுத்தார்கள். தான் போற்றி வந்த தாய்-தந்தையர்க்கு நடந்த அவலம் குறித்து அன்வர் அழுது புரண்டான். இத்தனைக்கும் நாம் என்ன செய்தோம் என்ற கேள்வியே மேலோங்கி நின்றது.

அழுது புரண்ட அவனை, ஓர் காவல்துறை வாகனத்தில் வீசி விட்டெறிந்தார்கள். இதனைப் பார்த்த அன்வரின் உற்ற நண்பன் ஹமீத் கதிகலங்கிப் போனான். அவனும் மூர்ச்சையானான்.

ஊரே ஒன்றுகூடி வேடிக்கைப் பார்த்தது. தெருவில் அத்தனை பேரும் பீதி வயப்பட்டு நின்றார்கள்.




"நல்ல பையன் ஆயிற்றே!

அவன் உண்டு, அவன் பிழைப்பு உண்டு என வாழ்ந்தவன் ஆயிற்றே. அவனுக்கேன் இந்த நிலை?" என எல்லோரும் முனு முனுத்த வண்ணம் நின்றார்கள். அவர்களுக்கு எல்லாமே புதிராகத்தான் இருந்தது.

சிலர், அன்வரை அழைத்துச் சென்ற வேனுக்குப் பின்னால் சென்றார்கள். காவல் நிலையத்தில் வேன் நின்றது. காவல் நிலையத்தில், ஒரு சிறு விசாரணை, அதன்பின் அவனை விட்டு விடுவோம் எனச் சொல்லிவிட்டார்கள்.

அதற்குள் தொலைக்காட்சியில் "லக்னோவ் குண்டு வெடிப்பு முக்கியக் குற்றவாளி கைது. சிறப்புப் புலனாய்வுத்துறையினர் சாதனை" - என்ற தலைப்பில் காட்சி ஊடகங்கள், செய்திகளைப் பரப்பின.

இந்தச் செய்தி காவல் நிலையம் நோக்கிச் சென்ற முஸ்லிம்களை எட்டியது. அவர்கள் நாம் அன்வர் மீது அக்கறைக் காட்டினால் நமக்கும் ஆபத்துக் காத்திருக்கின்றது என்று அச்சப்படத் தொடங்கினார்கள். தங்கள் வீடுகளை நோக்கி விரைந்தார்கள்.

தொலைக்காட்சிப் பெட்டி ஒன்றை வைத்துக்கொள்ளும் அளவில் வசதி படைத்தவர்கள். அதனை பார்த்தார்கள். அதில் லக்னோ குண்டு வெடிப்பில் - மூளையாகச் செயல் பட்டவர் கைது. மேலும் ஒருவரைக் காவல்துறை தேடுகின்றது. - என்றார்கள்.

காவல் நிலையம் சென்றிருந்தவர்களில் சிலர், அன்வரின் வீட்டுக்கு வந்தார்கள். அங்கே எல்லாமே சிதறி சின்னா பின்னமாகக் கிடந்தன.


vaigarai velicham official

அவர்களால் எதையும் புரிந்துகொள்ள இயலவில்லை. - ஒருவேளை தொலைக்காட்சி செய்திகள் சொல்பவை உண்மையாக இருக்குமோ என்றெல்லாம் எண்ணினார்கள்.

இன்னொருவர் என யாரைத் தேடுகின்றார்கள் என்பது மக்களிடையே பீதியைப் பரப்பியது. ஒவ்வொருவரும் தங்கள் பிள்ளைகளைப் பாதுகாப்பதில் கவனமாக இருந்தனர். சிலர் தங்கள் ஆண் பிள்ளைகளை, வீட்டை விட்டே வெளியே செல்ல தடை செய்தனர்.

காவல்துறை அன்வரின் வீட்டில் என்னென்ன செய்தார்கள் என்பதை பேசிக்கொண்டார்கள். இதனால் அறிவிக்கப்படாத 144 தடை உத்தரவு அந்தப் பகுதியில் வந்தது. இந்தத் தடையை முஸ்லிம்களே தங்கள் மீது போட்டுக் கொண்டார்கள்.

அன்வரின் உற்ற நண்பன் அப்துல் ஹமீதுக்கு ஒரு சந்தேகம். தான் அன்வரின் தோழனாக இருந்ததாலேயே அவர்கள் நம்மைக் குறி வைப்பார்களோ என்பதே அந்தச் சந்தேகம்.

காவல்துறையினர் தன்னையும் பிடித்து அடித்து உதைப்பதற்குள் தன் வீட்டைக் கபளீ கரப்படுத்துவதற்குள் தப்பித்து விடுவது என முடிவு செய்தான்.

தப்பித்தான், ஓடினான் எங்கே ஓடுவது என்பது தெரியாமல், திக்கற்று ஓடினான்.

உண்மையில் அவன் வாழ்வின் முடிவை நோக்கி ஓடிக்கொண்டிருந்தான்.

உடனேயே, அண்மைச் செய்திகள் எனத் தொலைக்காட்சிகள், "லக்னோவ் குண்டு வெடிப்பில் இன்னொரு குற்றவாளி அப்துல் ஹமீத் தப்பி ஓட்டம்" எனச் செய்திகளைப் பரப்பின.

அவன் அப்பாவி, அவன் அன்வரின் வீட்டில், நடந்த கபளீகரங்களை கண்டு அதிர்ந்து போயிருந்தான். ஏதுமறியாதத் தன்னையும் பிடித்துக்கொண்டு போய்விடுவார்களோ என்ற அச்சத்தில்தான் ஓடிக்கொண்டிருந்தான்.

காவல்துறையினர் தங்கள் அடாவடித் தனங்களைக் காட்டிட இதுதான் சிறந்த வழி எனக் கருதினார்கள்.

உடனே ஒருபத்து வேன்களில் வந்து அப்துல் ஹமீத் வீட்டை முற்றுகையிட்டனர். அவன் கடின உழைப்பைக் கொட்டி வாங்கிச் சேர்த்து வைத்திருந்த சமையல் பாத்திரங்களையும், பண்டங்களையும் வீசி விட்டெறிந்தனர்.

அவனுடைய தாயும், தந்தையையும் எட்டி உதைத்தார்கள். அவன் சகோதரியை மார்பில் கையை வைத்து அழுத்தி தள்ளினர். மானபங்கம் பட்ட அவள், மல்லாந்து வீழ்ந்தாள்.

அவர்களால் முடிந்ததெல்லாம் கூவி அழுவதுதான். அதில்தான் அந்தக் காவல்துறை யினர் தங்கள் வீரத்தைப் பதிவு செய்தார்கள்.

தங்கள் மிருகப் பலத்தை அப்துல் ஹமீத்-இன் வீட்டுக்குள்ளிருந்த அன்றாடம் காய்ச்சிகளிடம் காட்டிய பின் வீட்டைவிட்டு வெளியே வந்தார்கள். சாதித்துவிட்டதாகக் காட்டிக் கொண்டார்கள்.

ஒரு மமதை அவர்களின் முகத்தில் பளிச் சிட்டது.

'அப்துல் ஹமீத்' பதற்றமும் பீதியும் நிறைந்த வனாய், ஒரு வானந்தரத்திற்குள் புகுந்தான். நடந்தான், நடந்தான், நடந்துகொண்டே இருந்தான்.

அங்கு சுமை தாங்கி ஒன்று நின்று கொண்டிருந்தது. அதன் மேற்பரப்பு ஒன்றுதான், தட்டையாகவும், நீளமாகமிருந்தது. மீதம் அந்தப் பகுதி முழுவதும் கரடு முரடாகவே இருந்தது. அதன்மீது ஏறி அமர்ந்தான். பின்னர் அதில் சாய்ந்தான். அப்படியே தன்னையுமறியாமல் கண் அயர்ந்தான்.

நான்றாகத் தூங்கிக் கொண்டிருந்தபோது, சிலர் அவனை எழுப்பினர். கண் விழித்துப்





பார்த்தான், சுமையுடன் இரண்டு பேர் நின்று கொண்டிருந்தனர். ஆமாம், சுமை தாங்கியின் உண்மையான சேவை அங்கே அவர்களுக்குத் தேவைப்பட்டது.

அவன் அவர்களின் சுமைகளுக்குக் கைகொடுத்து அந்த சுமைகளை இறக்கி வைத்தான். பின்னர் அவர்கள் அவனுடன் பேச்சுக் கொடுக்கத் தொடங்கினார்கள். அவனுக்குள் ஒரு பீதி!

எங்கே ஊடகங்களின் பொய்யை நமக்கு காட்டிக் கொடுத்து விடுவார்களோ என்று!

ஆனால், அவர்கள் எதையும் தெரியாதவர்களாகவே இருந்தார்கள். அவர்கள் அவன் தொழிலைப் பற்றிக் கேட்டார்கள். தானும் சுமை தூக்கிப் பிழைப்பவன்தான் என்றும், தாய்-தந்தையர்களுடன் ஏற்பட்ட பிணக்கால் கோபத்தில் வெகுதூரம் வந்துவிட்டதாகவும் கூறினான்.

இப்படிப் பேசிக்கொண்டே அவர்கள் ஒரு சிறு மூட்டையை அவிழ்த்தார்கள். அதில் கோதுமை ரொட்டிகள், அடுக்கடுக்காய் இருந்தன. அவர்கள் அவனுக்கும் சில ரொட்டித் துண்டுகளைத் தந்துவிட்டு, தாங்களும் உண்ணத் தொடங்கினார்கள்.

அவனுக்கிருந்த பெரும் பசியில் ஆறுதலாக அந்த ரொட்டித் துண்டுகளை உண்ணத் தொடங்கினான். காய்ந்த வயிறு சற்றே குளிர்ந்தது.

உண்ணு முடிந்ததும், மூட்டை தூக்கும் தொழிலில் தன்னை சேர்த்திட இயலுமா? என அவர்களிடம் கெஞ்சினான். அவர்கள் அதற்கு ஆம், எங்களோடு வா என அழைத்தார்கள். அவன் அவர்களோடு நடந்தான்.

சில மணிநேரம் எல்லோரும் பேசிக்கொண்டே நடந்தார்கள். அதன்பின் வனாந்தரமாகக் காட்சி தந்த அந்தப் பாதையில் அங்கும் இங்கும் ஆட்கள் நடமாடுவதைக் கண்டான்.

ஒரு பக்கம் பீதி, எங்கே “இவன்தான் அன்சாரியின் நண்பன், தேடப்படுபவன் என யாராவது காட்டிக் கொடுத்துவிடுவார்களோ” என்ற பீதிதான் அது.

இன்னொரு பக்கம் யாசிக்காமல் வாழ்ந்து விடலாம் என்ற நிம்மதி.

சுமை தூக்கி சம்பாதித்தான் சாப்பிட்டான். இரவில் சுமை தூக்கும் தொழிலாளிகள் தூங்கும் பொது இடத்தில் தூங்கினான்.

நல்ல காலம் அவனுடைய புகைப்படம் காவல்துறையிடமில்லை. இருந்திருந்தால் புகைப்படம் கையில் கிடைத்திருந்தால் ஊடகங்களுக்குத் தந்து உலகில் எந்த பகுதியில் அவன் பதுங்கினாலும், அவனைக் கண்டபிடித்திருப்பார்கள். புகைப்படமில்லை. காரணம், அவன் வாழ்க்கையின் எந்தச் சூழ்நிலையிலும், அவன் ஒரு கேமராவுக்கு முன் நின்று புகைப்படம் எடுக்க வேண்டும் என எண்ணியதில்லை. அப்படி ஒரு சூழ்நிலை அவனுக்கு ஏற்படவில்லை.

சுமைத் தூக்குவதும் ஈட்டியதைக் கொண்ட வயிற்றைக் நிரப்புவதுமாக அவன் வாழ்க்கை நகர்ந்தது. ஆனாலும், அவனுடைய உயிரும் நினைப்பும், தனது வயதான தாயாரைச் சுற்றியும், தனது வாழ்க்கைத் துணைவனைப்போல் ஆகிவிட்ட அன்வர்-ஐ பற்றியும் அதிகமாகக் சுற்றிச் சுழன்றன.

அங்கேஅன்வர்-ஐகாவல்துறையினர்தனியாக ஓர் இடத்திற்கு அழைத்துச் சென்றார்கள். அந்த இடத்தில் வைத்து அடித்துத் துவைத்தார்கள். அவனால், அந்தச் சித்திரவதைகளைத் தாங்கிட இயலவில்லை. அவன் என்னை அடிக்காதீர்கள் என அந்தக் காவலர்களைக் கெஞ்சினான்.

அவன் கெஞ்சக், கெஞ்ச அவர்கள் மிஞ்சினார்கள். அடி, உதைகளை நிறுத்தவே இல்லை.

இரவில் அவனையும் அறியாமல் சற்றேக் கண் அயர்வான். உறக்கம் அவனை கண்மூடச் செய்தது என்பதைவிட பகலெல்லாம் வாங்கிய அடி, உதைகள் அதனால் வந்த உடல் தளர்வு இவை அவனை மயக்கிப் போட்டன என்பதே உண்மை.

சற்றே மயங்கிய நிலையில் இருக்கும்போது ஓர் முரட்டுப் போலீஸ் அதிகாரி வருவார். அவனை தன்னுடைய பூட்ஸ் காலால் உதைப்பார். உடலில் ஒருவாளி தண்ணீரை உற்றுவார். மீண்டும் அடிக்கத் தொடங்குவார். அவன் மீண்டும் மயங்குவான். அப்படியே விட்டுவிட்டுச் சென்று விடுவார்.

மயங்கிய நிலையில் அவனது இரவுப் பொழுதுபோனது.

அவனை அடைத்து வைத்துச் சித்திரவதைச் செய்த இடத்தில் இரவுக்கும் பகலுக்குமிடையே எந்த வேற்றுமையும் இல்லாதது. எங்கும் இருள் மயம். அவன் கண் மயங்கும் நேரத்தை, இரவு என்றும் எடுத்துக்கொண்டான். எப்போதாது சற்று தேனீர் தந்தாலும், அதை அதிகாலை என எடுத்துக் கொண்டான்.

அதிக வெப்பத்தை உமிழும் ஒளி விளக்குகள் தாம், அவனுக்குச் சூரியன்.

இப்படியே நாள்கள், இல்லை மணித்துளிகள் நகர்ந்தன. ஒருநாள் சில முரடர்கள் வந்து அவனை மீண்டும் அடித்துத் துவைத்தார்கள்.

தாங்க முடியாமல் அவன் அவர்களிடம் கைகூப்பி என்னை விட்டுவிடுங்கள், எனக்கு எதுவும் தெரியாது என மன்றாடினான். அடிகள் தொடர்ந்தன.

நாங்கள் சொல்வதையெல்லாம் ஒத்துக் கொண்டால் விட்டு விடுகின்றோம் என்றார்கள்.


இந்தச் சித்தரவதைகளிலிருந்து விடுபடு வதற்கு என்ன வழி எனத் தெரியாமல் திகைத்துக் கொண்டிருந்தவனுக்கு, ஒரு வழி பிறந்தது போலிருந்தது.

எதை வேண்டுமானாலம் ஒத்துக்கொள் கின்றேன் என்றான். அதிகாரிகள் ஒருவரைப் பார்த்து ஒருவர் சிரித்துக் கொண்டனர்.

சாதித்துவிட்டோம் என்ற பெருமிதம். அவர்களின் முகத்தில் பளிச்சிட்டது.

அன்வரை அலாக்காகத் தூக்கினார்கள். ஆனால், அவன் தலை தொங்கிற்று.

- தொடரும்.








# வடகாடு சாதிவெறியாட்டம்:

**- புலன் விசாரணைக்கு முன்னரே காவல்துறை ஒரு முன்முடிவை எடுத்து அறிவிப்பது சரியா?**

**- ஒரு சார்பான இப்போக்கை காவல்துறை கைவிட வேண்டும்!**

## விடுதலைச் சிறுத்தைகள் கட்சி அறிக்கை!

புதுக்கோட்டை மாவட்டம், திருவோணம் அருகேயுள்ள வடகாடு என்னுமிடத்தில் (மே-05) நள்ளிரவில் ஆதிதிராவிடர் குடியிருப்பில் ஆதிக்க சாதிவெறிக் கும்பல் கொடூர ஆயுதங்களுடன் நுழைந்து கொலைவெறித் தாக்குதலை நடத்தியுள்ளது. அதில் ஆறு பெண்கள் உட்பட 12 பேர் காயமடைந்து புதுக்கோட்டை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வடகாடு அருகேயுள்ள ஆலங்குடி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவர்களை மீண்டும் மருத்துவமனைக்குள்ளே நுழைந்து அச்சாதிவெறியர்கள் தாக்குதல் நடத்தியதால் பாதுகாப்புக் கருதி அவர்களைப் புதுக்கோட்டை மருத்துவமனைக்கு மாற்றியுள்ளனர். மேலும், அக்கும்பல் ஆதிதிராவிடரின் குடியிருப்பில் தீவைத்துள்ளது.

மக்கள் போராடி அணைத்ததால் ஒரு வீட்டுடன் அது பரவாமல் தடுக்கப்பட்டுவிட்டது. அத்துடன், அக்கும்பல் இருசக்கர வண்டிகளையும் நான்கு சக்கர வண்டிகளையும் அடித்து நொறுக்கி வெறியாட்டம் நடத்தியுள்ளது. வடகாட்டில் உள்ள இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும் முத்துமாரியம்மன் கோயிலின் தேரோட்டத் திருவிழாவில் பங்கேற்கச் சென்ற ஆதிதிராவிடர்களைச் சாதிப்பெயரைச் சொல்லி இழிவுப்படுத்தியதுடன், தேர்வடத்தைத் தொட விடாமல் தடுத்து தாக்கியுள்ளனர். அதே நேரத்தில் திட்டமிட்டு ஆதிதிராவிடர் குடியிருப்பிற்குள் ஒரு கும்பல் ஆயுதங்களுடன் நுழைந்து தாக்குதல் நடத்தியுள்ளது. கண்ணில் பட்டவர்களையெல்லாம் காட்டுமிராண்டித் தனமாகத் தாக்கியுள்ளது.

இதற்கு ஏற்கனவே அக்கிராமத்தில் இருதரப்புக்கும் இடையில் நடந்த அய்யனார் கோயில் தகராறு மற்றும் அது தொடர்பான வழக்கும்தாம் பின்னணி காரணமாக உள்ளன என்பது தெரியவருகிறது.

ஆதிதிராவிடர்களால் கட்டப்பட்டுள்ள "அடைக்கலம் தந்த அய்யனார்" கோயிலிலும்; அதனருகேயுள்ள மூன்று ஏக்கர் பரப்பளவுள்ள காலியிடத்திலும்; முத்தரையர் சமூகத்தினருக்கும் உரிமை உண்டு என கோரி அவர்கள் வன்முறைகளில் ஈடுபட்டுள்ளனர்.

அது தொடர்பாக ஆதிதிராவிடர்கள் நீதிமன்றத்தை நாடி வழக்காடி அக்கோயில் தங்களுக்கு மட்டுமே உரியது எனத் தீர்ப்பையும் பெற்றுள்ளனர். ஆனாலும், காவல்துறையினர் வழக்கம்போல சட்டம்- ஒழுங்கைக் காரணம்


vaigarai velicham official

காட்டி, அந்தக் கோயிலை இன்னும் பூட்டியே வைத்துள்ளனர். காலியிடத்தை ஆதிதிராவிடர்களும் பயன்படுத்தக் கூடாதென தடுத்து வைத்துள்ளனர். இந்த முரண்பாடும் பகையும் ஏற்கனவே அந்த ஊரில் நிலவும் சூழலில் தான், இந்த தேரோட்டத் திருவிழாவுக்குச் சென்ற ஆதிதிராவிடர்களை வடம் பிடிக்கக் கூடாதென வம்புக்கிழுத்து அவர்தம் குடியிருப்புக்குள் வெறித்தனமாகத் தாக்கியுள்ளனர். எனவே, இது சாதிவெறித் தாக்குதல் தான் என்பதில் எந்த அய்யமுமில்லை.

ஆனால், காவல்துறையினர் இதுதொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கை அதிர்ச்சியளிப்பதாகவுள்ளது. புலனாய்வுத் தொடங்குவதற்கு முன்னரே, ஒரு "முன்முடிவை" எடுத்து தனிநபர்களுக்கிடையிலான பிரச்சினைகள் தான் இந்த சாதிவெறியாட்டத்திற்குக் காரணம் என்று அறுதியிட்டுக் கூறுவது எவ்வகையில் சரியென அமையும்? இது வழக்கின் விசாரணையைப் பாதிக்காதா? இது வதந்தி பரப்புவதைத் தடுக்கும் முயற்சி என்பதைவிட, நேர்மையான விசாரணைக்கு முட்டுக்கட்டைப் போடும் சதி என்றே கருத வேண்டியுள்ளது. இத்தகைய போக்கை காவல்துறை கைவிட வேண்டுமெனவும் விசிக சார்பில் வலியுறுத்துகிறோம்.


நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் மட்டுமே கொண்ட சிறுபான்மையினராக அங்கே ஆதிதிராவிடர் சமூகத்தினர் வாழ்ந்து வருகின்றனர். ஆயிரக்கணக்கான குடும்பங்களைக் கொண்ட பெரும்பான்மை ஆதிக்க சாதியினராகவுள்ள முத்தரையர்கள் தொடர்ந்து வன்முறைகளில் ஈடுபட்டு ஆதிதிராவிடர்களை எப்போதும் அச்சத்திலேயே ஒடுக்கி வைத்துள்ளனர். இத்தகைய சூழலில்தான் இந்த சாதி வெறியாட்டம் அரங்கேறியுள்ளது.

இந்த வன்கொடுமைகளில் வெளியூர்களைச் சார்ந்த சாதிவெறியர்களும் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரிய வருகிறது.

இந்நிலையில், ஒரு சிலரை மட்டுமே காவல்துறை கைதுசெய்துள்ளது. என்றாலும், ஆதிதிராவிடர்கள் மீது கொலைவெறித் தாக்குதலை நடத்தியுள்ள வெளியூர் ஆட்கள் உட்பட அனைவரையும் கைது செய்து சிறைப் படுத்திட வேண்டுமென தமிழ்நாடு அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறோம்.

வடகாட்டிலுள்ள ஆதிதிராவிடர்களுக்குரிய அய்யனார் கோவிலைத் திறந்துவிட வேண்டுமெனவும், அதனருகேயுள்ள காலியிடத்தை ஆதிதிராவிடர் சமூகத்தினரே பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்க வேண்டுமெனவும் அரசுக்கு வேண்டுகோள் விடுக்கிறோம்.

இவண் :
**தொல்.திருமாவளவன்,**
நிறுவனர்- தலைவர், விசிக.


அமெரிக்காவின் நிறவெறி கொள்கையை இஸ்லாத்தை முன் வைத்து முறியடித்த மாவீரன் மால்கம் X என்ற மாலிக் அல்ஷாபாஸ் ஷஹீத். தான் இஸ்லாத்தை ஏற்றார், அமெரிக்காவில் ஆயிரக்கணக்கான கறுப்பு நிறத்தைக் கொண்டவர்களை இஸ்லாத்தில் இணைத்தார். நிறவெறிக் கொடுமைகளிலிருந்து நிரந்திரமாக மீட்டார்.

"ஹஜ்" பயணம் என்ற புனித மக்கா மாநகரம் சென்று இஸ்லாம் தொடங்கிய பூமியில் தன் கடமையை முடித்தார். சவூதி அரேபியா அரசின், அரசு விருந்தினர் என்ற கண்ணியத்தோடு.

*16* ஆப்ரிக்கா நாடுகளுக்குச் சென்று இஸ்லாத்தைப் பிரச்சாரம் செய்தார். லட்சக்கணக்கானவர்களை இஸ்லாத்தில் இணைத்தார். இஸ்லாத்தை பிரச்சாரம் செய்யும் தனது பெரும் பயணத்தின் ஒரு பகுதியாக, "கேசியஸ் கிளே" என்ற உலக மகா குத்துச் சண்டை வீரனை முஹம்மத் அலீ கிளேயையும் இஸ்லாத்தில் இணைத்தார்.

ஆனால், அமெரிக்காவின் வெள்ளை நிறவெறியர்களால், இதைப் பொறுத்துக்கொள்ள இயலவில்லை. அவர்கள் அதாவது, குழு கிளக்ஸ் கிளான் என்ற வெள்ளை நிற அமைப்பைச் சார்ந்தவர்கள் அமெரிக்காவின் உளவுத்துறையின் உதவியோடு மால்கம்-X அவர்களை பிப்ரவரி *21-1965* இல் கொலை செய்து விட்டார்கள்.

**தொடர்புக்கு: 7401213394/7358278146/8148129887**



# பரஸ்கானா (தக்டுசெத் கணபதி) குண்டுவெடிப்பு 2014

## நீதிமன்ற விசாரணையின்றி முடிக்கப்பட்ட வழக்கு

**ஏப்ரல் மாதம் தொடர்ச்சி....**

### ஆரம்பத்தில் கூறப்பட்ட ஆதாரங்கள்

புனே தக்டுசெத் கணபதி கோவிலின் அருகே பரஸ்கானா காவல் நிலையம் உள்ளது. அங்கே வண்டிகள் நிறுத்தும் இடத்தில் நின்று கொண்டிருந்த ஒரு மோட்டார் சைக்கிளின் பின்புறத்தில் வைக்கப்பட்டிருந்த குண்டு ஒன்று 10 ஜூலை 2014 அன்று மதியம் 2 மணிக்கு வெடித்தது. இதில் ஐந்து நபர்கள் காயமுற்றனர் 6 மோட்டார் சைக்கிள் வாகனங்கள் சேத மடைந்தன. இந்திய தண்டனை சட்டம், வெடி மருந்துகள் சட்டம் மற்றும் ஊபா–வின் (UAPA) கீழ் விஷ்ரம்பக் காவல் நிலையத்தில் 173/2014 குற்ற எண்ணில் குற்றம் பதிவு செய்யப்பட்டு விசாரணை ஆரம்பமானது.

இன்னொருபுறம் மகாராஷ்டிரா தீவிரவாத எதிர்ப்புப்படையும் விசாரணையை ஆரம்பித்தது.

சம்பவம் நடந்த இடத்திற்கு எதிர்ப்புறத்தில் அமைந்திருந்த மகாராஷ்டிரா தொழிலாளர் ஒன்றிய அலுவலகத்தின் சிசிடிவி பதிவுகளை தீவிரவாத எதிர்ப்புப்படை அதிகாரிகள் பார்வை யிட்டனர். அதில் 5:51:14 மணிக்கு பரஸ்கானா காவல் நிலையத்தில் வண்டிகள் நிறுத்துமிடத்தில் சந்தேகப்படும் படியாக ஒரு நபர், ஒரு மோட்டார் சைக்கிளை நிறுத்திக் கொண்டிருந்தார். இந்த நபர் நிறுத்திய மோட்டார் சைக்கிளின் பின் புறத்தில் இருந்தே குண்டு வெடித்தது என்பதை குண்டுவெடிப்பு நடந்த பதிவுகளைப் பார்த்த போது புலப்பட்டது. அதன்பின்பு சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள சிசிடிவி பதிவுகளும் பார்வை யிடப்பட்டது. 7 சிசிடிவி பதிவுகளில் அந்த நபரின் நடமாட்டம் பதிவாகியுள்ளது கண்டு பிடிக்கப்பட்டது.

இதனை வைத்து அந்த நபரே குண்டு வெடிப்பிற்கு காரணமானவர் என்ற தற்காலிக முடிவுக்கு காவல்துறை வந்தது. நிபுணர்கள் உதவியுடனும் நேரடி சாட்சிகளின் முன்னிலை யிலும் 8 சிசிடிவி கேமராக்களும் அதன் ஹார்டு டிஸ்குகளும் கைப்பற்றப்பட்டன.

MH11 AQ 7174 என்ற நம்பர் பொருந்திய ஹீரோ ஹோண்டா வாகனம் குண்டுவெடிப்பிற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. மகாராஷ்டிரா சத்தாரா மாவட்டத்தில் இந்த வாகனம் பதிவு செய்யப்பட்டுள்ளது. சத்தாரா காவல் நிலை யத்தில் பணிபுரியும் கான்ஸ்டபில் டடா ரஜ்கேவிற்கு சொந்தமானது இவ்வாகனம். 25 ஜூன் 2014 அன்று சத்தாரா நீதிமன்ற வளாகத்தி லிருந்து இந்த வாகனம் திருடப்பட்டுள்ளது. இதன்பேரில் 27 ஜூன் 2014 அன்று திருட்டு வழக்கு ஒன்றும் சத்தாரா காவல்நிலையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

11 ஜூலை 2014 அன்று பரஸ்கானா குண்டுவெடிப்பு வழக்கு மகாராஷ்டிரா

தீவிரவாத எதிர்ப்புப்படைக்கு சட்டப்படி மாற்றம் செய்யப்பட்டது. இதற்காக தனி குற்ற எண் ATS 9/2014 ஒதுக்கப்பட்டது.

## l) காவல்துறையின் பாரபட்சமான மனநிலை

இரண்டு மாதங்கள் இந்த வழக்கில் எந்த துப்பும் கிடைக்கவில்லை. எனினும் சிமி அல்லது இந்தியன் முஜாஹிதீன் இவர்களின் தீவிரவாத தாக்குதலாக இது இருக்கலாம் என்று ஐபி, தேசிய புலனாய்வு முகமை, தீவிரவாத எதிர்ப்புப் படை மற்றும் உள்ளூர் காவல்துறை பலமாக சந்தேகிக்கிறது என்று வட்டார செய்தித்தாள் களில் வந்த செய்திகள் தெரிவித்தன.

## சில செய்தித்தாள்களில் வந்த செய்திகள்

i) இந்தியன் முஜாஹிதீனை நோக்கி திரும்பும் சந்தேகம். (Marathi daily Pudhari, July 12, 2014)

ii) சின்ன குண்டுவெடிப்பு கூட பொதுவாகவே தீவிரவாத செயல் என்று ஏன் கருதப்பட வேண்டும் என்று வியந்தார் மத்திய உள்துறை செயலாளர் அனில் கோஸ்வாமி. அடுத்த நாளே இது ஒரு தீவிரவாத செயலாக இருக்க வாய்ப்பிருக்கிறது என்று மத்திய அரசிடம் கூறியது மகாராஷ்டிரா காவல்துறை. (The Times of India, Pune, July 12, 2014)

iii) மேலோட்டமாக பார்த்தால், இந்த குண்டுவெடிப்பிற்கும் 17 ஏப்ரல் 2013 மல்லேஸ் வரம் (பெங்களூர்) குண்டு வெடிப்பிற்கும் ஒற்றுமை இருக்கின்றது. (Marathi daily Sakal, July 13, 2014).

[அத்தியாயம் 3, பகுதி 7 இல் மல்லேஸ்வரம் குண்டுவெடிப்பு விவாதிக்கப்பட்டுள்ளது]

iv) காவல்துறையின் கண்காணிப்பில் சிமி ஸ்லீப்பர் செல் இந்தியன் முஜாஹிதீன் இயக்கத் திலிருந்து பிரிந்து வந்த ஒரு அமைப்பின் மீது சந்தேகம் எழுப்பப்பட்டுள்ளது. (Marathi daily Pudhari, July13, 2014)

காவல்துறையும் புலனாய்வு அமைப்புகளும் முஸ்லிம்களை இந்த வழக்கில் பலிகடா ஆக்க திட்டமிட்டு, சரியான தருணத்திற்காக காத்திருந்தது என்பதை இதிலிருந்து புரிந்து கொள்ளலாம்.

## 2) வழக்கினை பற்றிய ஒரு அதிசயமான துப்பு

இரண்டு மாதங்கள் கடந்தது. எதுவும் நடக்கவில்லை. செப்டம்பர் வந்தது.



எஸ்.எம். முஷ்ரிஃப், IPS
முன்னாள் இன்ஸ்பெக்டர் ஜெனரல், மகாராஷ்டிரா காவல்துறை

பிஜ்நோர் (உ.பி) இல் குண்டு தயாரித்துக் கொண்டிருந்தபோது ஒருவர் காயமுற்றார். அவரோடு அவருடைய இரண்டு கூட்டாளி களையும் காவல்துறை கைது செய்துள்ளது என்ற செய்தி 12 செப் டம்பர் 2014 அன்று கிடைக்கிறது. இவர்கள் மூவரும் ஏற்கனவே மத்திய பிரதேஷ் கந்துவா சிறைச்சாலையிலிருந்து 2013 அக்டோபரில் தப்பியோடி வந்தவர்கள். புனே குண்டு வெடிப்பிற்கும் இந்த நிகழ்விற்கும் என்ன சம்பந்தம் என்பதை தீவிரவாத எதிர்ப்புப் படை புனே அமர்வு நீதி மன்றத்தில் சமர்ப்பித்த அறிக்கையில் தெளிவாக குறிப்பிடவில்லை. எனினும், தீவிரவாத எதிர்ப்புப்படை ஆய்வாளர் ராஜேந்திர பஹிரத் தலைமையில் ஒரு அணி விசாரணைக்காக பிஜ்நோர் சென்றது.

7026282667, 974 295 3031, 7847981192 என்ற எண்களை உடைய 3 மொபைல் போன்களை குற்றவாளி வைத்திருந்தார் என்ற விஷயம் பிஜ்நோரில் குற்றவாளியை விசாரிக்கும்போது தெரியவந்தது என தீவிரவாத எதிர்ப்புப்படை கூறியது. இந்த தகவல் புனே தீவிரவாத எதிர்ப்புப் படை அலுவலகத்திற்கு தெரிவிக்கப்பட்டது. உடனேயே சம்பந்தப்பட்ட மொபைல் நிறுவனத் திடமிருந்து அழைப்பு விவரங்களும் மற்ற விவரங்களும் பெறப்பட்டன. சிவராஜ் குல்கர்னி, (விலாசம்: குமார் பட்டணம் கொடியல், ஹரிஹர், ஹவேரி மாவட்டம், கர்நாடகா) என்பவருக்கு 70262 82667, 974 295 3031 என்ற இரண்டு எண்களும் சொந்தமானது என்பது கண்டுபிடிக் கப்பட்டது.

இத்தகவலுடனும், முன்னர் கைப்பற்றப் பட்ட சிசிடிவி பதிவுகளை எடுத்துகொண்டும் இந்த இரண்டு எண்களின் உரிமையாளரை சந்திக்க கர்நாடகா சென்றார் தீவிரவாத எதிர்ப்புப்படை ஆய்வாளர் விஜய் பாட்டில். விசாரணையை கர்நாடகாவில் தொடர்ந்தார் அவர். மேற்கூறிய விலாசத்தில் மொபைல் எண்ணின் உரிமையாளர் வசிக்கவில்லை என்றும் தேஜஸ்விங்கம் பின் புறத்தில் இருக்கும்

தர்வத் ஆரோக்கிய நகரில் அவருக்கு ஒரு அடுக்குமாடி குடியிருப்பு உண்டு என்றும் அதை சில நபர்களுக்கு வாடகைக்கு கொடுத்து அங்கே வசித்து வருகிறார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

குல்கர்னியின் அடுக்குமாடி குடியிருப்பில் இரண்டு ரூம்கள் இருந்தன. ஒரு ரூமில் கௌஸ் அசாம் மன்சூர் ஷபல், நவின் ராமப்பா ஆகியோர் தங்கியிருந்தனர். மற்றொரு ரூமில் ஆனந்த், அரவிந்த், கிசான் ஆகியோர் சில மாதங்கள் தங்கியிருந்தனர். ஆனால் அவர்கள் ரூமை காலி செய்துவிட்டு கிளம்பிவிட்டனர். கௌஸ் அசாம், நவின் ராமப்பா இருவரும் ரூமில் இருந்த வேளையில் அவர்களை தீவிரவாத எதிர்ப்புப் படை சிசிடிவி பதிவுகளை காட்டி விசாரணை செய்தது. சிசிடிவி பதிவுகளில் காணப்படும் இரண்டு நபர்கள் அரவிந்த் மற்றும் கிசான் என அவர்கள் அடையாளம் காட்டினர். அவர்களிடம் பல புகைப்படங்கள் காட்டப்பட்டது. அதில் மூன்று பேரும் இருந்த புகைப்படங்களை அடையாளம் காட்டினர். மூன்று பேரின் வயது, உயரம், உடலமைப்பு, நிறம், தலை முடியின் ஸ்டைல், தனிப்பட்ட குணாதிசயங்கள், ஆடைகள், அவர்கள் பேசிய மொழி அதன் உச்சரிப்பு இவற்றின் விவரங்களை அவர்கள் விளக்கினர். இதன்படி, உயரமாக இருப்பது அரவிந்த், நடுத்தர உயரம் கிசான், உயரம் குன்றியவர் ஆனந்த்.

சிசிடிவி பதிவுகளையும், போட்டோக் களையும், அந்த இருவர் தந்த விவரங்களையும் வைத்து காவல்துறை கீழ்கண்ட முடிவுக்கு வந்தது. அரவிந்த் என்பவர் முஹம்மது அஜாதுதீன், கிசான் என்பவர் சாகிர் ஹுசைன் பதுருல் ஹுசைன், ஆனந்த் என்பவர் சேக் மெகபூப் ஷேக் இஸ்மாயில் என்கிற குட்டு. அனைவருமே கந்துவா (மத்திய பிரதேஷ்) வை இருப்பிடமாக கொண்டவர்கள். இவர்கள்தான் கந்துவா சிறைச்சாலையிலிருந்து 2013இல் மற்ற சில நபர்களோடு தப்பி ஓடியவர்கள்.

சிவ்ராஜ் குல்கர்னியிடம் அவரின் பெயரில் எடுக்கப்பட்டிருந்த 70262 82667, 974 295 3031 என்ற இரண்டு எண்களை குறித்து காவல்துறை விசாரித்தது. வாக்காளர் அடையாள சீட்டு, மின் கட்டண ரசீது, குடும்ப அட்டை ஆகியவற்றின் நகல்களை அரவிந்த், கிசான், ஆனந்த் ஆகியோர் களுக்கு வாடகைக்கு விட்டிருந்த அறையில் தான் வைத்திருந்ததாகவும் தனக்கு தெரியாமல் அதை எடுத்துக்கொண்டு போய் தன்னுடைய பெயரில் சிம் கார்டுகளை அவர்கள் வாங்கியுள்ளதாக சந்தேகிப்பதாக குல்கர்னி காவல்துறையிடம் கூறியுள்ளார். மேலும் மூவருடைய போட்டோக் களையும் அடையாளம் காட்டியுள்ளார்.

12 செப்டம்பர் 2014 அன்று நடந்த பிஜ்னோர் குண்டு வெடிப்பு சம்பந்தமான போட்டோக்கள் 15 செப்டம்பர் 2014 அன்று ஹிந்தி தினசரி பத்திரிகைகளான ஜக்ரன், சிங்காரி, ஹிந்துஸ்தான் (பிஜ்னோர் உ.பி பதிப்பு) ஆகியவற்றில் வந்தது. இந்த போட்டோக்களிலும் மூவரையும் அடையாளம் காட்டினர் சிவ்ராஜ் குல்கர்னி, கௌஸ் அசாம், நவின் ராமப்பா ஆகிய மூன்று சாட்சியங்கள்.

இதன்படி பின் வருபவர்களே பரஸ்கானா குண்டுவெடிப்பிற்கு காரணம் என காவல்துறை முடிவு செய்தது.

1) முஹம்மது அஜாதுதீன் என்கிற அரவிந்த்

2) சேக் மெகபூப் சேக் இஸ்மாயில் என்கிற குட்டு என்கிற ஆனந்த்

3) சாகிர் ஹுசைன் பதுருல் ஹுசைன் என்கிற கிசான் மற்றும் இவர்களின் கூட்டாளிகள்

4) அம்ஜத் கான் ரம்ஜான் கான் என்கிற பப்பு

5) அஸ்லம் முஹம்மது அஸ்லம் கான் என்கிற சுஹைப் என்கிற பிலால் என்கிற சந்தோஷ் இவர்கள் அனைவரும் (கந்துவா) மத்திய பிரதேசத்தைச் சார்ந்தவர்கள்.

## 3) குற்றவாளி என்று கருதப்பட்டவர்கள் காவல்துறையால் கொலை; வழக்கை முடித்த நீதிமன்றம்

தீவிரவாத எதிர்ப்புப்படை குற்றவாளிகளை தேடிக் கொண்டிருந்த நிலையில் முஹம்மது அஜாதுதீன் என்கிற அரவிந்த், அஸ்லம் முஹம்மது அஸ்லம் கான் என்கிற சந்தோஷ் ஆகிய இருவரும் தெலுங்கானா காவல் துறையோடு ஏற்பட்ட மோதலில் (என்கவுண்டர்) 4 ஏப்ரல் 2015 அன்று ஜன்கிபுரம் அருகே, நல்கொண்டா மாவட்டம், தெலுங்கானாவில் வைத்து கொலை செய்யப் பட்டனர் என்ற செய்தி வருகிறது.

ரூர்கேலா (ஒடிஷா)வில் வைத்து மற்ற மூன்று குற்றம் சாட்டப்பட்டவர்களும் கைது செய்யப் பட்டனர். விஜய் பாட்டீல் தீவிரவாத எதிர்ப்புப் படை ஆய்வாளரை தலைமையாகக் கொண்ட ஒரு அணி ரூர்கேலாவிற்கு விசாரணைக்காக சென்றது. விசாரணையின்போது, புனேவில்

நடந்த குண்டுவெடிப்பிற்கு காரணம் நாங்களும் தெலுங்கானாவில் கொல்லப்பட்ட இரண்டு நபர்களே என்று அவர்கள் ஒத்துக் கொண்டனர்.

குற்றம் சாட்டப்பட்டவர்களை பரஸ்கானா குண்டுவெடிப்பு வழக்கிற்கு மாற்றம் செய்ய மகாராஷ்டிரா தீவிரவாத எதிர்ப்புப் படை முயற்சி செய்து கொண்டிருந்த வேளையில், 31 அக்டோபர் 2016 அன்று தொலைக்காட்சிகளில் ஒரு செய்தி ஒளிபரப்பானது. போபால் மத்திய சிறைச்சாலையிலிருந்து இந்த மூன்று குற்ற வாளிகளும் அவர்களோடு இன்னும் ஐந்து பேரும் தப்பியோடி விட்டனர். போபால் சிறைச் சாலையிலிருந்து 13 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கும் இத்கடி கிராமத்தில் வைத்து தப்பி ஓடிய 8 பேரையும் என்கவுண்டரில் காவல்துறை சுட்டு வீழ்த்தியது.

இவ்வாறாக குற்றம் சாட்டப்பட்ட 5 பேரும் இருவேறு என்கவுண்டர்களில் கொல்லப் பட்டனர். 'நீதிமன்ற விசாரணை இன்றி வழக்கை முடித்து வைக்க' 26 ஜூன் 2017 அன்று புனே கூடுதல் அமர்வு நீதிமன்ற நீதிபதியிடம் ஓர் அறிக்கையை சமர்ப்பித்தது மகாராஷ்டிரா தீவிரவாத எதிர்ப்புப்படை.

ஒன்றரை பக்க ஆணையை அதேநாளில் நீதிமன்றம் வெளியிட்டது. நீதிமன்ற விசாரணை இன்றி வழக்கை முடிக்க அனுமதி அளித்தது. ஒரே நாளில் ஒன்றரை பக்கத்தில் நீதிமன்றம் அளித்த ஆணை நமக்கு எடுத்துச் சொல்வது நீதிமன்றம் என்ன மன நிலையில் இருந்தது என்பதே.

## 4) நீதிமன்றம் செய்தது சரியா?

நீதிமன்ற ஆணையை ஆய்வுக்கு உட்படுத்தும் முன் 'நீதிமன்ற விசாரணை இன்றி வழக்கை முடித்து வைத்தல்' என்றால் என்ன என்பதை பார்க்கலாம்.

எல்லா கோணங்களிலும் விசாரணை நடைபெற்று விட்டது. இனிமேல் விசாரணை செய்ய எந்தப் பகுதிகளும் இல்லை. குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக மறுக்கமுடியாத உறுதியான தெளிவான ஆதாரங்கள் இருந்திடும் நிலையில் மேலும் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வதற்கு முன் குற்றம்சாட்டப்பட்டவர் இறந்துவிட்டார் எனில் புலனாய்வு முகமைகள் நீதிமன்றத்திடம் 'நீதிமன்ற விசாரணை இன்றி வழக்கை முடித்து வைக்கும்' கோரிக்கையை வைக்கலாம். காவல்துறை அளித்த அறிக்கையில் கூறப்பட்டுள்ள சம்பவங்கள் உண்மையா என்றும் குற்றவாளிக்கு எதிராக நிறுத்தப்பட்ட சாட்சி யங்கள் நம்பகத்தன்மை உடையதா என்றும் குற்றவாளி இறந்துவிட்டார் என்றும் விசாரணை செய்யப்படாமல் எந்த பகுதிகளும் விடுபட வில்லை என்றும் குற்றம் சாட்டப்பட்டவரின் மரணத்தில் எந்தவித சந்தேகமும் இல்லை என்றும் நீதிமன்றம் உறுதிபட தெரிந்த பின்னரே இதற்கான அனுமதியை வழங்கலாம்.

மேற்கூறிய நிபந்தனைகளை நீதிமன்றம் இந்த வழக்கில் செவி சாய்த்ததா? குற்றவாளிக்கு எதிராக நிறுத்தப்பட்ட சாட்சியங்களின் தரம் என்ன? குற்றவாளியின் மரணத்தில் சந்தேகம் இல்லையா?

குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக தீவிரவாத எதிர்ப்புப் படை நீதிமன்றத்திடம் வழங்கிய சாட்சியங்கள் இவை தான்.

i) சிவ்ராஜ் குல்கர்னியின் வாக்குமூலம்

ii) கௌஸ் அசாம், நவின் ராமப்பாவின் வாக்குமூலங்கள்

iii) 8 சிசிடிவி கேமராக்களின் பதிவுகள்

iv) ரூர்கேலாவில் வைத்து கைது செய்யப் பட்ட மூன்றுபேரும் ஆய்வாளர் விஜய் பாட்டிலின் முன் குற்றத்தை ஒப்புக்கொண்டது.

## 5) சட்டத்தின் முன்னும் அறிவுப்பூர்வமான அடிப்படையிலும் இந்த சாட்சியங்களை ஆய்வுக்கு உட்படுத்துவோம்

i) குல்கர்னியை பொருத்தவரை அவர் மிகவும் சந்தேகத்திற்குரிய நபர். அதை பின்னர் விவாதிக்கலாம். முழுமையான விசாரணைக்கு அவரை உட்படுத்திய பின்பே அவருடைய வாக்குமூலத்தை குற்றவாளிக்கு எதிராக எடுத்துக் கொள்ளலாம்.

ii) கௌஸ் அசாம், நவின் ராமப்பாவின் வாக்குமூலங்களும் சந்தேகத்திற்குரியது. இரண்டு பேருமே உருவாக்கப்பட்ட சாட்சியங் களாக தெரிகிறது. அவர்களைப் பற்றிய விவரங்கள் இல்லை. குல்கர்னி அளித்த வாக்கு மூலத்தை தவிர அவர்கள் இருவரும் வாடகை தாரர்கள் என்பதற்கு எந்தவித ஆதாரமும் இல்லை. எனவே அவர்களை தீவிர விசாரணைக்கு உட்படுத்தாமல் வாக்குமூலங்களை ஏற்றுக் கொள்ள முடியாது.

iii) 8 சிசிடிவி பதிவுகளின் மீது எழும் சந்தேகம். குண்டு வெடிப்பு சம்பவம் நடந்த அன்றைக்கு சந்தேகத்திற்குரிய ஒரு நபர் விடியற்காலையில் பரஸ்கானா காவல் நிலையத்தின் வண்டிகள் நிறுத்துமிடத்தில் மோட்டார் சைக்கிளை நிறுத்திக் கொண்டிருந்தார். அதே நபர் மற்ற 7 சிசிடிவி பதிவுகளிலும் காணப்படுகிறார் என்றே ஆரம்பத்தில் தீவிரவாத எதிர்ப்புப் படையின் அறிக்கை கூறியது. ஆனால்,

இரண்டு நபர்களை (அதாவது முஹம்மது அஜாதுதீன் என்கிற அரவிந்த், சாகிர் ஹுசைன் பதுருல் ஹுசைன் என்கிற கிசான்) குல்கர்னியின் வாடகைதாரர்கள் எட்டு சிசிடிவியின் பதிவுகளில் அடையாளம் காட்டினர் என்று பின்னர் அளித்த அறிக்கையில் கூறியது தீவிரவாத எதிர்ப்புப்படை. அறிக்கையின் ஒரு இடத்தில் மூன்று பேருமே பதிவாகியுள்ளனர் என்று கூறியது. இங்கேதான் பலத்த சந்தேகம் எழுகிறது.

முதலில் கூறிய எட்டு சிசிடிவி பதிவுகளும் பின்னர் கூறிய 8 சிசிடிவி பதிவுகளும் ஒன்று தானா அல்லது வேறு வேறா? அல்லது பின்னர் அறிக்கையில் சேர்க்கப்பட்ட 8 சிசிடிவி பதிவு களும் உண்மைதானா அல்லது மாற்றியமைக்கப் பட்டதா? சிசிடிவியின் ஹார்ட் டிஸ்க்குகளை ஆய்வுசெய்த நிபுணர்கள் மற்றும் அவற்றை கைப்பற்றும்போது உடனிருந்த சாட்சியங்கள் இவர்களை குறுக்கு விசாரணை செய்வதின் மூலமே இதன் உண்மைத்தன்மை தெரியவரும்.


iv) ஆய்வாளர் விஜய் பாட்டிலின் முன் மூன்று குற்றவாளிகளும் குற்றத்தை ஒப்புக் கொண்டது. காவல் அதிகாரியின் முன் குற்றம் ஒப்புக்கொள்ளப்பட்டதே தவிர இது சட்டத்தின் அடிப்படையில் சாட்சியமாக ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல.

குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக வலுவற்ற சாட்சியங்கள் இருந்தபோதிலும் போதிய சாட்சியங்கள் உள்ளன என்றும்... சமர்பிக்கப்பட்ட ஆவணங்களில் அதாவது இறப்பு சான்றிதழ் மற்றும் இதர ஆவணங்கள் திருப்திகரமாக உள்ளன என்றும் கூறி 'நீதிமன்ற விசாரணை இன்றி வழக்கை முடிக்க' அனுமதி அளித்தது நீதிமன்றம்.

வலுவற்ற சாட்சியங்களை எப்படி போதிய சாட்சியங்கள் என நீதிமன்றம் கூறியது? காவல் துறை வழங்கிய ஆவணங்களை ஆய்வுக்கு உட்படுத்தாமல் எப்படி நீதிமன்றம் ஏற்றுக் கொண்டது? குற்றம் சாட்டப்பட்ட ஐந்து நபர்களின் இறப்பு சான்றிதழை மட்டுமே மெய்யான ஆவணங்களாக கருதிட முடியும். மற்ற ஆவணங்கள் போலியாக தயாரிக்கப் பட்டவை என தெரிகிறது. ஒருமுறைகூட குற்றம் சாட்டப்பட்டவர்கள் நீதிபதியின் முன்போ அல்லது நீதிமன்ற நடுவரின் முன்போ ஆஜராக வில்லை என்ற உண்மையை குறிப்பாக கருத்தில் எடுத்துக்கொண்டு முதற்கட்ட விசாரணைக்கு நீதிமன்றம் உத்தரவிட்டு இருக்க வேண்டும். ஆனால் அப்படி செய்யாமல் காவல்துறை வழங்கிய அறிக்கையை வேத வாக்காக எடுத்துக் கொண்டது நீதிமன்றம்.

மேலும், குற்றம்சாட்டப்பட்ட மூன்று பேர் மரணமடைந்த போபால் என்கவுண்டர் அவிழ்க்க முடியாத புதிர்களால் சூழ்ந்திருந்தது. அதை விசாரிக்க நீதிமன்ற ஆணையும் விடப் பட்டிருந்தது. இந்த விசாரணையானது வழக்கின் போக்கையே மாற்றி இருக்கக்கூடும். விசாரணை முடியும் வரை புனே நீதிமன்றம் காத்திருந்திருக்க வேண்டும். ஆனால் அவசரமாக வழக்கை முடித்துவிட்டது.

- தொடரும்...



# நான் மதீனாவில் கண்டதும் கேட்டதும்



ஏப்ரல் மாதம் தொடர்ச்சி...

**ரியாலுல் ஜன்னா :**

பழய மிம்பர் படிக்கும் பெருமானார் (ஸல்) அடக்க ஸ்தலத்திற்கும் இடையே அமைந்துள்ள பகுதி சுவர்க்க பூங்கா என பெருமானார் (ஸல்) சொன்னார்கள். இதற்கு அடையாளமாக வெள்ளைச் சலவைக்கல் தூண் நிறுத்தப்பட்டுள்ளது. இத்தூண் பகுதிதுஆ ஏற்றுக் கொள்ளக் கூடிய இடமாகும். ஒவ்வொரு தூண் பகுதிக்கும் ஒவ்வொரு சிறப்புண்டு. இதில் “இஸ்த்துவானா உபூத்” பகுதியில் தான் பெருமானார் (ஸல்) வெளிநாட்டு தூதர்களை வரவேற்று பேச்சு வார்த்தை நடத்துவதும் ஒப்பந்தங்கள் செய்வதும் மாற்று மதத்தவர்களோடு கருத்து பரிமாற்றமும் செய்துள்ளார்கள். இப்பகுதியில் மிகவும் பிரயாசைப்பட்டு ஒரு தடவை மஃரிபு வேளையும், ஒரு தடவை லுஹருக்கு முன்பும் சுன்னத் தொழுகை தொழும் பாக்கியம் கிடைத்தது. துஆவும் செய்தேன். இப்பகுதியிலிருந்து தான் நபிகள் நாயகம் (ஸல்) நீதி தவறாத முன் மாதிரியான ஆட்சியை நல்கினார்கள். வரலாற்று நிகழ்வை ஒரு கணம் மனதிற்கண் கொண்டு வந்தால் பூரிப்பு ஏற்படுகிறது.

**உகத் :**

மலையால் சூழப்பட்ட இடம் உலக யுத்தம் நடைபெற்ற இடம் சுவர் எழுப்பப்பட்டு உள்ளே யாரும் போக முடியாமல் பாதுகாக்கப்படுகிறது. ஹஸ்ரத் ஹம்சா (ரழி) கபுர் முகடின்றி, சுற்றும் சிறுகல்லால் குற்றி மதில் கட்டப்பட்டுள்ளது. கபுறுகள் யார் யாருடையதென தெரியாத படி உள்ளது. ஊரைச் சுற்றி மலைகள், கணவாய்களும், மலைகளும் சூழ்ந்துள்ளது. ஹாஜிகள் பேருந்தில் வந்து இறங்கி சிறிய மலைகள் மீது ஏறி பார்க்கின்றனர். முஸல்லா தொப்பி, தஸ்பீஹ் விலை பாரம் மைதானங்களில் நடைபெறுகிறது. மௌலவி அல்தாப் ஹுசைன் உகதில் ஸஹீதான ஹஸ்ரத் அமீசா (நலி) நபித்தோழர்கள் ஹக்கில் “துஆ”ச் செய்தார்கள்.



**பீ.எம். அப்துல் கரீம்**
(ஆலோசனைக்குழுத் தலைவர்
இ.இ.மு.சங்கம், குளச்சல்)

**அகழ் யுத்தம் நடந்த பகுதி :**

இப்பகுதியை சுற்றி கடைகள், மாளிகைகளும்

காட்சியளிக்கிறது. யுத்தம் நடத்தப் பகுதியைச் சுற்றி மதில் சுவர் எழுப்பப்பட்டுள்ளது. இவ்யுத்த முறை, ஹல்ரத் ஸல்மான் பார்ஸி (ஆலோசனைப் படி) பெருமானார் (ஸல்) கையாண்ட யுத்த முறையாகும். இப்பகுதியில் பழமையான பள்ளியின் ஒரு பகுதி காணப்படுகிறது. அப்பகுதியில் இப்போது தொழுகை நடைபெற வில்லை. பள்ளியின் பின் பகுதியில் நம்மூர் பள்ளியில் காணப்படும் மிஃறாப் அமைப்பு காணப்படுகிறது. இங்கு தொப்பி, முஸல்லா தஸ்பீஹ்மணி, மிஸ்வாக், கல்மோதிர வியாபாரம் சிறு சிறு வியாபாரிகள் மைதானங்களில் போட்டு செய்கின்றனர். இங்கு இமாம் அகழியுத்தத்தில் ஸஹீதானவர்களுக்காக "துஆச்" செய்தார்.

**மஸ்ஜிதேகுபா:**

இதுமதீனாவிற்கு தென் மேற்கே மூன்று கல்தொலைவில் உள்ளது. நபிகள் நாயகம் (ஸல்) மக்காவிலிருந்து மதீனாவிற்கு ஹிஜ்ரத் சென்ற போது இந்த ஊரில் ஐந்து நாட்கள் தங்கி னார்கள். தொழுகைக்கு ஈத்தமர ஓலையால் கூரை போடப்பட்ட ஒரு சிறு மஸ்ஜிதை நிறுவினர். இப்பள்ளி இருந்த இடத்தில் ஒரு பெரிய மஸ்ஜித் அழகிய வேலைப்பாடுடன் அமைக்கப்பட்டுள்ளது. பள்ளியை சுற்றி அழகிய செடி கொடிகள், ஈத்தமரச் செடி பெரிய மரங்கள் வரிசையாக வைக்கப்பட்டுள்ளதோடு மஸ்ஜிதை ஒட்டி அழகிய பாதை, பாதை ஓரங்களை ஒட்டி பேரீத்த மரம் வரிசையாக வைத்திருப்பது காண்போரை கவரும்படி உள்ளது.

மஸ்ஜிதேகுபா பள்ளி நபிகள் நாயகம் கட்டும் பொழுது இறையச்சத்தின் மீது இப்பள்ளி எழுப்பப்பட்டுள்ளதாக இறைவன் சொன்னான். இப்பள்ளியில் யார் இருறக்அத் சுன்னத் தொழுகிறார்களோ அவர்களுக்கு ஒரு உம்ரா செய்த நன்மை கிடைக்கும் என நபிகள் நாயகம் (ஸல்) சொன்னார்கள். நாங்கள் அனைவர்களும் பேருந்திலிருந்து கீழே இறங்கி மஸ்ஜிதை சுற்றிப் பார்த்து மஸ்ஜிதில் அனைவர்களும் இருறக்அத் தொழுதோம்.

**மஸ்ஜிதே கிப்லதைன் :**

பெருமானார் (ஸல்) மதீனா வந்தபோது பதினாறு மாதங்கள் பைத்துல் முகத்தஸை கிப்லாவாக நோக்கி தொழுதார்கள். ஒருநாள் பெருமானார் (ஸல்) தொழுது கொண்டிருக்கும் பொழுது இறையாணைப்படி கஃபாவை முன்னோக்கி தொழுதனர். பெருமானாரின் பின் நின்ற தோழர்கள் பெருமானாரை பின்பற்றி தொழுதார்கள். அதிலிருந்து கிப்லா திசை கஃபா நோக்கி மாற்றப்பட்டது. இப்பள்ளி கிப்லதைனி பள்ளி என அழைக்கப்படுகிறது. இப்பள்ளியில் பழயபைத்துல்முகத்தஸ் கிப்லா அடையாளமும், இப்போதைய கிப்லா அடையாளமும் இம்மஸ்ஜி தினுள் காணப்படுகிறது. அழகிய வேலைப் பாடோ, செடி, கொடிகள் ஈத்த மரங்களோடு இம்மஸ்ஜித் காட்சியளிக்கிறது. இங்கு அனைத்து ஹாஜிகளும் இறங்கி மஸ்ஜிதைக் சுற்றிப் பார்த்து இருறகு அத்சுன்னத் எல்லோரும் தொழுதோம்.

**மஸ்ஜிதே இஜாபா :**

"பஸ்தான்" சமான் என்ற இடத்திற்கு அருகே இம்மஸ்ஜித் உள்ளது. ஒரு காலத்தில் முஆவியா (ரழி) குடும்பத்தார் இப்பகுதியில் வசித்துள்ளனர். "மஸ்ஜிபனு மூஆவியா" என்ற பெயரும் இதற்கு உண்டு. இது ஜன்னது பகீஃ அடக்கஸ் தலத்திற்கு வடக்கு புறம் உள்ளது. இம்மஸ்ஜித் மக்கள் நடமாகும் இடத்தில் அமைந்துள்ளது. இப்பகுதி எங்கள் ஹஜ் குழுவினரின் வாழ்வில் மறக்க முடியாத பகுதியாகும். வல்ல அல்லாஹ் இப்பகுதியில் நாங்கள் வசிக்கவும் நாடோறும் இம்மஸ்ஜிதை சுற்றியே தஹஜ்ஜத் உட்பட ஆறுவேளை தொழுகைக்கு போகும் பாக்கியமும் தந்திருந்தான் ஹறம்போக.

பெருமானார் மன நிம்மதி குறைவு ஏற்படும் பொழுது இப்பகுதியில் வந்து தொழுது துஆச் செய்வது வழமையானது. இங்கு ஹாஜிகள், அந்நாட்டினர் வந்து தொழுகையிலும், துஆவிலும் மனமுருகி அழுகின்றனர். ஒன்றிரண்டு நாள் அப்பகுதியோ ரவ்ளா ஷரீபுக்கு போகும் போது மக்கள் கூட்டமாக வருவதும் அப்பள்ளியினுள் போவதுமாக இருப்பதைப் பார்த்து அருகிலுள் ளோரிடம் விபரம் கேட்ட போது இம்மஸ்ஜித் மஸ்ஜிதே இஜாபா என்றனர்.

நபிகள் நாயகம் (ஸல்) ஒரு சமயம் இப்பகுதிக்கு வந்து தொழுது நீண்ட நேரம் ஸஜ்தாவும், துஆவும் செய்தனர். இது பற்றி நபித் தோழர்கள் அன்னாரிடம் வினா எழுப்பிய போது நான் இறைவனிடம் மூன்று துஆகள் கேட்டேன். ஒன்றைத் தவிர இரண்டையும்


vaigarai velicham official



இறைவன் ஏற்றானென்றனர் கீழே குறிப்பிடும் படி பெருமானார் துஆ செய்தனர்.

*1. யா அல்லாஹ்! என் உம்மத்தவர் பசியாலும், பட்டிணியாலும், பஞ்சத்தாலும் அழியக் கூடாது.*

*2. யா, அல்லாஹ்! எனது உம்மத்தவர் பூண்டோடு அழித்துவிடாதே*

*3. யா, அல்லாஹ்! என் சமுதாயத்தவர் சண்டை, சச்சரவு செய்யாமல் ஒற்றுமையோடு வாழ வேண்டும்.*

இம்மூன்று துஆவில் மூன்றாவது துஆவை" இறைவன் ஏற்கவில்லையென தோழர் களுக்கு நபிகள் நாயகம் (ஸல்) சொன்னார்கள். பெருமானார் (ஸல்) தொழுத பகுதி இம்மஸ்ஜிதின் மெஹ்றாபுக்கு இரண்டு கஜம் தூரத்திலுள்ளது. நாங்களும் இப்பள்ளி சென்றும் இரு ரக்அத் தொழுது, துஆச் செய்தோம்.

**மஸ்ஜிதேஹமாமா, மஸ்ஜிதே அபூபக்கர்**

இவ்விருமஸ்ஜிதும் இப்போது மஸ்ஜிதுன் நபவிய்யை ஒட்டி வந்துவிட்டது. இரு பகுதிகளும் புனர் நிர்மாணம் செய்யப்படுகிறது. நானும் ஈரோடு ஜாபர் ஹாஜியாரும் உள்ளே சென்று பார்த்து இறைவனிடம் துஆச் செய்தோம்.

ஹமாமா மஸ்ஜிதில் பெருமானார் (ஸல்) இருபெருநாள் தொழுகையையும் மழைத் தொழுகையும் தொழுதுள்ளார்கள். இப்பள்ளியில் இருக்கும் பொழுது வெயில் கடுமையாக இருந்தது. அவர்கள் இறைவனை பிரார்த்திக்க ஒரு துண்டு மேகம் சூரிய ஒளிபடாமல் தடுத்ததால் இது ஹமாமா பள்ளி என அழைக்கப் படுகிறது. இதுவும் நாங்கள் போகும் போது புனர் நிர்மாணம் செய்யப்படுகிறது. இப்பள்ளியினுள் சென்று பார்த்தோம்.

**மஸ்ஜிதே ஜூம்ஆ பள்ளி :**

பெருமானாரையும், தோழர் அபூபக்கர் சித்தீக்கையும் மதீனாவாசிகள் வீடுகளிலும் வீட்டில் மேற்பகுதியிலும் நின்று வரவேற்றனர். வரவேற்க வந்தக் கூட்டம் கபீலா பனீசாலிம் முஹல்லா வரை வந்துவிட்டது. அப்பொழுது ஜூம்ஆநேரம் ஆனதால் இங்கு தாமதிக்க வேண்டியது ஏற்பட்டது. ஆகவே இங்கு பெருமானார் முதன் முதலாக குதுபாபேருரை நிகழ்த்தினார்கள். இதற்கு இதனால் மஸ்ஜிதே ஜூம்ஆ என்ற பெயர் ஏற்பட்டது. நாங்கள் பேருந்தில் இறங்கி இருறக் அத்சுன்னத் தொழுதோம். இப்போது இப்பகுதியில் பெரிய பள்ளி கட்டப்பட்டுள்ளது.

**பதுர் : புதர்**

மக்காவிலிருந்து 300 மைல் தூரம் மதீனாவி லிருந்து 150 மைல் தூரமுமாகும். இது மலையால் ஆனது. எங்களிடம் முன்ஹஜ் செய்த ஹாஜிகள் சில பேர் மதீனா செல்லும் அப்பொழுது பார்க்கலாமென்றனர். இப்பொழுது பேருந்து வேறு பாதை வழியாக போவதால் எங்களுக்கு "பதுறு" பார்க்க முடியவில்லை. சரி மதீனாவில் நாற்பது ஒத்து தொழுகை போக ஒரு நாள் அஸருக்குப் பின் ஜித்தா புறப்பட ஆயத்தம். எங்களில் பெரும்பாலோருக்கு "பதுர்" போகும் பாக்கியம் கிடைக்கவில்லை. இன்ஷாஅல்லாஷ் வாழ்வில் உம்றா சென்றால் பார்க்க விருப்பம்.

*7-1-2009* அன்று மஸ்ஜிது நபவிய்யில் லுஹர் தொழுது பெருமானாரிடமும் தோழர்களிடமும் சலாம் சொல்லி விடை பெற்று மதியம் *3.30* மணி அளவில் பேருந்து புறப்பட்டது. வழிபயண பொருட்கள் லிப்ட் மூலம் கீழே கொண்டு வந்து வைத்திருந்தோம். கூலியாட்கள் பயண பொருட்களை பேருந்தில் ஏற்றி ஒவ்வொரு தங்கு விடுதியாக போய் ஹாஜிகளை ஏற்றினார்கள். அஸர், மஃரிபு, இஷாத் தொழுகைகள் ஹாஜிமார்கள் தங்கிய பகுதிகளிலுள்ள மஸ்ஜி துகளில் தொழுகை ஜமாஅத்தாக முடித்தோம். மதீனாவிலிருந்து சுமார் *9* மணி அளவில் பேருந்தில் ஜித்தா புறப்பட்டோம்.

ஜித்தாவில் சுபுக்கு முன் போய் சேர்ந்தோம். ஹாஜிகளின் பொருள்கள் விமானத்தில் ஏற்றப் பட்டது. பெரும்பாலான ஹாஜிகள் குளித்து, சுபுகு தொழுகைக்கு தயாராகின்றனர். விமான தளத்தில் இமாம் ஜமா அத்தாக தொழுகை நடைபெற்றது விமானத்தில் ஹாஜி நாடு பெயர் மற்றும் விபரங்கள் ஒத்து பார்க்கப்பட்டு காலை சரியாக 3.25 மணிக்கு ஜித்தாவிலிருந்து விமானம் புறப்பட்டது. விமானத்தில் காலை தேயிலை, உணவுகள் தரப்பட்டது. எல்லோரும் ஊர் வரும் சந்தோசத்திலிருத்தனர். பகல் பொழுது விமானத்திலிருந்து கடல் பகுதி மலைப் பகுதி, பாலைவனப்பகுதி என கண்டு கழித்தோம்.

இறைவனருளால் சரியாக மாலை 4.00 மணிக்கு சென்னை விமான தளத்தை வந்தடைந் தோம். பெட்டி படுக்கை, ஸம்-ஸம் நீர் ஆகியவற் றோடு சோதனைக்கு பின் ஹாஜிகளை வர வேற்க வந்தவர்கள் வரவேற்கப்பட்டு ஒவ்வொருவரும் தந்தம் இடம் சென்றனர். நானும், மனைவி, மாமியும் சென்னை புதுப்பேட்டை அண்ணன் மகள் வீட்டில் சென்று தங்கினோம். ஒரு நாள் ஓய்வுக்குப் பின் ஊர் திரும்பினோம்.

நாகர்கோவிலும், ஊரிலும் குடும்பத்தார் நண்பர்கள் ஜமா அத்தார் வரவேற்றனர். வல்ல அல்லாஹ் ஹஜ் செய்ய வாய்ப்பும் வசதியும் செய்தமைக்கு நன்றி. அல்ஹம்துலில்லாஹ்.


**புனித பயணத்தில் குடும்பத்தாரோடு சந்திப்பு :**


மக்காவில், மதீனாவில் தங்கு விடுதிகளில் ஹறமில் ரவ்ளாஷரீபில் எங்கள் குடும்பத்தைச் சார்ந்த வாப்பாவின் தம்பி மர்ஹூம் S.M. சாலிஹ் ஹாஜி அவர்களின் ஆண்மகன் தம்பி S.M. அகமது கபீர், தங்கை புஸ்றாபீவி, மச்சான் Dr. முகம்மது றாபி மருமகன் மஃபூப், குளச்சல் நகர்மன்ற முன்னாள் கமிஷனர் காதர்மைதீன் அன்னார் மனைவி மற்றும் மருமகன்லியாகத், தங்கை றாபிய்யத் நம்மூர் சில ஹாஜிகளை பார்த்து பேசும் வாய்ப்பு ஏற்பட்டமைக்கு மிகவும் சந்தோசம். ■






ஆங்கிலம் : **JOHN FEFFER** தமிழ் வடிவம் : மு. குலாம் முஹம்மத்






அன்பார்ந்த வாசகர்களே!

இன்றைய உலக நிகழ்வுகள் - குறிப்பாக இஸ்லாமிய உலகில் நடக்கும் நிகழ்வுகள். இவற்றின் அடிப்படைகளைப் புரிந்துகொள்வது அவசியம்.

உண்மையில் இஸ்லாமிய உலகில் நடக்கும் நிகழ்வுகள் என்பதைவிட உலகில் நடக்கும் கபளீகரங்கள், விழும் அப்பாவி முஸ்லிம்களின் பிணங்கள் எல்லாம், ஒரு நீண்டகால சதியின் விளைவுகள்.

இதை மிகவும் சுருக்கமாக இஸ்லாமோ ஃபோபியா என்பார்கள்.

இந்த சொல்லாட்சியை தமிழகத்தில் பல ஆண்டுகளுக்கு முன்னரே நமது இதழியல் வழி ஜனரஞ்சகப்படுத்தி வருகின்றோம்.

இன்றைக்கு இது அனைத்து தரப்பாராலும் பயன்படுத்தப்படுகின்றது.

இதை - இஸ்லாத்தின் மீது வளர்க்கப்படும் வெறுப்பு - எனச் சுருக்கமாகச் சொல்லிவிடலாம்.

ஆனால், இந்த வெறுப்பு ஏறத்தாழ 1350 ஆண்டுகளாக வளர்க்கப்பட்டு வருகின்றது?. இந்த வெறுப்பு எப்படியெல்லாம், வளர்க்கப்படுகின்றது. இதற்காக எல்லா வழிகளும், எப்படி இந்த வெறுப்பை வளர்க்கப் பயன்படுத்தப்படுகின்றன என்பதைச் சொல்லும் தொடர் இது.

பல லட்சம் கோடி டாலர்கள் செலவு செய்யப்படுகின்றன.

நீண்ட திட்டங்கள், சதிகள் பல செயலில் இருக்கின்றன.

ஓர் ஆயிரம், வருடம் இதற்கான முயற்சிகள் இடைவிடாமல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பல ஆய்வு நிறுவனங்கள் இதற்கு ஒதுக்கப்பட்ட இந்தப் பணத்தில் இயங்குகின்றன.

இந்த ஆய்வு நிறுவனங்கள் மிக்குயர்ந்த ஊதியத்திற்கு ஆய்வாளர்களை நியமித்து மனித ஆற்றலைக் கொட்டுகின்றன. இந்த நிறுவனங்களில் பணி செய்பவர்கள் முழு நேரமாக இஸ்லாமிய அபாயம். அதிலிருந்து உலகை காப்பது எப்படி? மனித இனத்தை அழிக்கும் சக்தி தீர்வு என்ன? என ஆய்வுகள் செய்கின்றார்கள்.

பொய்களையும் புனைந்துரைகளையும், ஆய்வு முடிவிற்காக காத்திருக்கின்றார்கள். அவற்றை நூலாக வெளியிடுகின்றார்கள். அவற்றிற்கு விருதுகள் வழங்கப்படுகின்றன. விருதுகள் வழி இந்தப் பொய் மூட்டைகளுக்கு மக்கள் மன்றத்தில் அங்கீகாரம் கிடைக்கின்றன.

இந்த நூல்கள் மக்கள் மன்றத்தில் பரவலாக கொண்டு சேர்க்கப்படுகின்றன. பின்னர் அதையே புதினங்களாகப் புனைகின்றார்கள். அவற்றை அடியொற்றி திரைப்படங்கள், குறும்படங்கள் என விதத்திலேயேும் மக்களின் பொது புத்தியில் பதிவு செய்து வருகின்றார்கள்.

இவற்றின் தாக்கத்திற்கு உள்ளாகின்றவர்கள் இவற்றிலிருந்து விடுபடுவது மிகவும் கடினம். இப்படியெல்லாம் கட்டி எழுப்பப்படும் வெறுப்பை வேரறுக்க நாம் சதாசர்வகாலமும் உழைத்திட வேண்டியதிருக்கின்றது. அதற்குமுன் சில அடிப்படைகளைப் புரிந்துகொள்ள வேண்டும்.

அதற்கு ஜான் பெஃபர் அவர்களின் இதுபோன்ற நூல்கள், நமக்கு மிகவும் பயனுள்ளதாக படிப்பினைத் தருவதாக இருக்கின்றன.

இஸ்லாத்தின் மீதும் முஸ்லிம்களின் மீதும் வெறுப்பை வளர்க்க என்னென்ன கருத்துகள், திரிபுகள், பொய்களைக் கட்டமைக்கின்றார்கள் என்பதைப் பட்டியலிடுகின்றார்.

அரிதான பல வரலாற்றுத் தடங்கள் நமக்குக் கிடைக்கின்றன. இந்தப் பொய்களை அறிந் திடாமல் இருந்தால் அவற்றிற்கான பதில்களைத் தந்திட இயலாது. உண்மையை நிலைநாட்ட இயலாது.

இந்த நூல் ஆங்கிலத்திற்குப் பிறகு தமிழில்தான் வெளிவருகின்றது. அல்ஹம்துலில்லாஹ். எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே!

படியும், வெறுப்பை வேரோடும், வேரடி மண்ணோடும் கெல்லி எறிந்திட படியுங்கள், உண்மைகளைத் திரட்டுங்கள், வென்று காட்டுங்கள்.

**இப்போது ஜான் பெஃபர் கூறுவதற்கு வருவோம்..**

அவர் கூறுகின்றார்.

“1980களில் உலகில் ஒரு பெரும் மாற்றம். அது ரஷ்யாவின் அதிபர் கோர்பசெவ் என்ற அளவில் சிலபல மாற்றங்களைக் கொண்டு வந்தார். அந்த மாற்றங்களுக்கு “பிரஸ்தோரிக்கா மற்றும் கிளாஸ்டி நோஸ்ட் என பெயர் வைத்தார்.”

(இந்தச் சொற்களுக்கு, விரிவான விளக்கத்தை இதே தொடரில் பலமுறை தந்துவிட்டோம். அதனால் விரிவஞ்சி, இங்கே விளக்கவில்லை.)

இந்தக் கட்டுரை ஓட்டத்திற்காக நாம், இப்படிப் பொத்தாம் பொதுவாகப் புரிந்து கொள்ளலாம்.

சோவியத் அதிபர் கோர்பச்சவ் அன்றுவரை ஒரு 90 ஆண்டுகளாக சோவியத் ரஷ்யாவின், கொள்கை எனக் கொண்டாடப்பட்ட, கம்யூனிசத்திற்கு, அதாவது பொதுவுடைமைக்கு விடை கொடுக்க முனைந்தார். பொதுவுடைமைக்கு விடை கொடுத்துவிட்டு அவர் இஸ்லாத்தின் பக்கம் சாய்ந்துவிடுவாரோ என அஞ்சினர் ஆதிக்க சக்திகள். குறிப்பாக மேலை நாடுகள்.

சோவியத் அதிபர், இஸ்லாத்தின் பக்கம் சாய்ந்தால் பல இழப்புகள் அமெரிக்காவுக்கும், மேலை நாடுகளுக்கும், ஒன்று, இஸ்லாத்தின் மிகப்பெரும் எதிரி ஒருவரை அமெரிக்க ஏகாதிபத்தியமும், அதன் அடிவருடிகளான மேலை நாடுகளும் இழக்கும்.

இரண்டு, இஸ்லாத்திற்கு ஆதரவாக ஓர் பெரிய அலை உருவாகும். ஏனெனில் இரண்டு வல்லரசுகளில் ஒன்று இஸ்லாத்தை தழுவினால் என்ன ஆகும்? (அப்போது ரஷ்யாவும் ஓர் வல்லரசு)

மூன்றாவது, அடிக்கின்ற இஸ்லாமிய அலையில் அன்றளவும் வளர்த்து வைத்திருந்த இஸ்லாமிய வெறுப்பு வேரோடு சாய்ந்துவிடும்.

இவற்றால் சோவியத் ரஷ்யா இஸ்லாத்தின் பக்கம் சாய்ந்துவிடாமல் தடுத்தே ஆக வேண்டும் என்று எண்ணின மேலை நாடுகள்.

சோவியத் அதிபர் கோர்பசேவ்-வை அணுகி அதைத் தடுத்தோம்.

ஆனால், பிரஸ்தோரிக்கா, கிளாஸ்நோஸ்ட் என்ற பெயர்களில் கம்யூனிஸ்ட் ரஷ்யா பொது வுடைமையை விட்டு வெளியே வந்தது.

தனிமனித சுதந்திரத்தையும், பெரும் முதலீட்டாளர்களையும் தன் பக்கம் வசீகரித்தது.

அதேநேரத்தில் இஸ்லாத்திற்கெதிரான வெறுப்பை வளர்க்க அது தயாராக இல்லை.

சோவியத் ரஷ்யாவை இஸ்லாத்தின் பக்கம் சாய்ந்து விடாமல் தடுத்ததின் மூலம், ஒரு பெரும் ஆபத்திலிருந்து மேலை நாடுகள் தங்களைத் தற்காத்துக் கொண்ட நிம்மதியைப் பெற்றன.

அதனால் இஸ்லாமிய வெறுப்பை வளர்க்கத் தளம் தாராளமாகவே இருக்கின்றது என்பதை உணர்ந்தோம்.

ஆனால், இப்போது இஸ்லாமிய அபாயம், பெரிதாக விரிவடைந்துவிட்டதை உணர்ந் தோம். காரணம், இஸ்லாம் திடுதிப்பென ஒரு வல்லரசையே காவு கொள்ளப் பார்த்தது. இதனால் இஸ்லாத்தை மனித இனத்திற்கு எதிரான மிகப்பெரிய ஆபத்து, எனக் காட்டிட துடித்தோம். அதற்கான திட்டங்களைத் தீட்டினோம். 9/11 என்பதை வடிவமைத்தோம். (அதனை அடுத்த இதழில் பார்ப்போம்.)

- தொடரும் இன்ஷா அல்லாஹ்.

குறிப்பு -

**அன்பார்ந்த வாசகர்களே!**

1980கள் என வருகின்றபோது, ஒன்றை நாம் மனதில்கொள்ள வேண்டும். அது 1979இல் ஈரானில் மன்னர் ஆட்சி ஒழிக்கப்படட்து. ஈரானில் இமாம் கொமைய்னி அவர்களின் தலைமையில் இஸ்லாத்தை முன் வைத்து பிப்ரவரி-15, 1979இல் ஒரு பெரிய புரட்சி நடந்தது. ஈரான் ஏப்-1,1979இல் இஸ்லாமிய குடியரசு என அறிவிக்கப்பட்டது. ஈரானின் மன்னர் ஷா ஃபஹ்லவி நாடு துறந்து ஓடினார். ஈரானின் எண்ணெய் வளங்களின் மீது, அமெரிக்காவிற்கிருந்த பிடி முற்றாகத் தகர்ந்தது. ஈரான் எண்ணெய் வளம் ஈரானுக்கு என்றானது. 1979களில் இந்த இஸ்லாமிய அலை உலகை உலுக்கிற்று.

அதைவிட முக்கியமான நிகழ்வு, டிசம்பர் 24,1979இல் அன்றைய சோவியத் ரஷ்யா ஆப்கானிஸ்தானை ஆக்கிரமித்தது. அங்கே, ஆப்கானிஸ்தானில் ஒரு கம்யூனிச அரசை நிறுவிட வேண்டும். ஆப்கானிஸ்தானில் பரவிவரும் இஸ்லாமிய எழுச்சியைத் தடுக்கவும் வேண்டும் என இலக்கமைத்துக் கொண்டது.

அங்கு இஸ்லாத்தை முன் வைத்துப் போராடிய இஸ்லாமிய ஜிஹாதிகளுக்கு அல்லாஹ் அறுதி வெற்றியைக் கொடுத்தான். 15 பிப்ரவரி 1989இல் சோவியத் ரஷ்யா ஆப்கானிஸ்தானை விட்டு வெளியேறியது.

உலகையே ஆச்சரியத்தில் ஆழ்த்திய பெரும் தோல்வி ரஷ்யாவுக்கு. இஸ்லாத்திற்கு மிகப் பெரும் வெற்றி! ஐக்கிய சோசலிச குடியரசு (USSR) என்றிருந்த ரஷ்யா. வெறும் ரஷ்யாவாக மாறியது. ரஷ்யா 6 துண்டுகளாக உடைந்தது.

அன்று முதல் ஒரு புது "World Order" தொடங்கியது.

இதில் வரலாறு முழுவதும் ஓர் உண்மை மறைக்கப்படுகின்றது. அது ரஷ்யா வீழ்ந்தது. ஆப்கானிஸ்தானில் என்பதுதான். இந்த யதார்த் தத்தை ஜான் பெஃபர் அவர்களும் குறிப்பிட மறுக்கின்றார். அவர் மறைக்கின்றார் என்றோ அல்லது அறிந்திருக்கவில்லை என்றோ நிச்சயமாக எடுத்துக்கொள்ள முடியாது.

இதில் என்றும் மறவாமல் மனதில் நிறுத்திட வேண்டிய உண்மை என்னவெனில் ரஷ்யா என்ற வல்லரசு, அதாவது கம்யூனிசத்தைத் தூக்கிப்பிடித்த வல்லரசு வீழ்ந்தது. இஸ்லாத்தை இலட்சியமாகக் கொண்டு போராடிய முஜாஹித்களின் கைகளில்.

பின்னர் முதலாளித்துவத்தைத் தூக்கிப் பிடித்த அமெரிக்கா வீழ்ந்தது. அதே ஆப்கானிஸ் தான் முஜாஹித்களின் கைகளில்தான்.

ஜான் பெஃபர் சுட்டிக்காட்டும் பல உண்மைகள்...

1. ரஷ்யா கம்யூனிசத்திற்கு விடை தந்துவிட்டு, இஸ்லாத்தின் பக்கம் சாந்திட இருந்தது.

2. உடனேயே அதைத் தடுத்திட அமெரிக் காவும், ஐரோப்பாவும் இயன்றதையெல்லாம் செய்தது.

3. இஸ்லாம் என்ற பொது எதிரிக்கு முன்னால், எல்லா இயக்கங்களும் தங்கள் பகையை மறந்து ஒன்று சேர்ந்து விடுகின்றன.

வரையிட்டுக் காட்டிட வேண்டிய வரலாற்று நிகழ்வு...

ரஷ்யா கம்யூனிசத்திற்கு விடை தந்தபோது, தருணம் பார்த்து ஈரான் இஸ்லாமியப் புரட்சியின் தந்தை இமாம் கொமைய்னி அவர்கள் ஓர் கடிதத்தை எழுதினார்கள். அதில் நாத்திகத்தை விடுங்கள். அல்லாஹ்வை ஏற்றுக்கொள்ளுங்கள் என அறிவுறுத்தி இருந்தார்கள்.

- அந்தக் கடிதத்தை இன்ஷா அல்லாஹ் இனிவரும் இதழ்களில் இடம்பெறச் செய்வோம்.

இன்ஷாஅல்லாஹ் தொடரும்.




# சமூக வலைதளங்களின் பொய்யும் நமது தகவலறியும் உரிமைச் சட்டத்தின் போரும்...

சமூக வலைத்தளங்களின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து கொண்டிருக்கும் இன்றைய நாட்களில், அதில் பதிவிடப்படும் பெரும்பாலான தகவல்கள் தவறாகவும், பொய்யாகவும், கூடுதல், குறைவாகவும் இருப்பதை காணமுடியும். குறிப்பாக நாள்தோறும் செய்தித்தாள்கள், செய்தி தொடர்பான இணையதள பக்கங்களை பார்வையிடுபவர்களுக்கு சமூக வலைத்தளங்களின் தகவல்கள் சற்று எரிச்சலை தரும். இருப்பினும், காலத்திற்கேற்ப நவீன தொழில் நுட்ப வளர்ச்சியுடன் பயணிப்பதே அறிவை தேடுவதற்கான வழிமுறையாகும்.

அந்த வகையில், வரலாற்று ஆய்வு தொடர்பாக லண்டன் பல்கலைக்கழக இணையவழி நூலகத்தில் ஒரு புத்தகத்தை தேடிக்கொண்டிருந்த போது, இடைவேளையில் சமூக வலைத்தளங்களை பார்க்க நேர்ந்தது. கூகுள் நம்மை உளவு பார்க்கிறது எனும் தொழில்நுட்ப வல்லுனர்களின் கருத்துக்கு ஆய்வுக்கூற்றுக்கு ஏற்ப, யூடியூபின் ஷாட்ஸ் பகுதியில் ஒருவர் வரலாற்றை மிகவும் பரபரப்புடன் பேசிக் கொண்டிருந்தார். அந்த பெண் பேசுவதை உன்னிப்பாக கவனித்த போது, அவர் தவறான ஒரு தகவலை தந்து கொண்டுள்ளார் என்பது தெரியவந்தது. கீர்த்தி ஹிஸ்டரி என்பது தான் அவரது பக்கம். தமிழகத்தின் கிருஷ்ணகிரி பகுதியை சேர்ந்த ஒருவர் இவ்வளவு அழகாக பொய்யான ஒரு தகவலை சமூகவலைத்தள வதந்தி விரும்பிகளுக்கு விருந்தாக கொடுத்து கொண்டுள்ளார். அந்த பதிவை 2 தடவைக்கு மேல் பார்த்த பின்னர் சட்டென நாஜி தலைவர் ஹிட்லரின் கொள்கை பரப்பு அமைச்சராக இருந்த கோயபல்சின் ஞாபகம் வந்தது. அவரது பேச்சில் அவர் வரலாற்று ஆய்வாளர் இல்லை என்பதை யூகிக்க முடிந்தது. (அவரது பின்புலம் குறித்து பின்னர் தெரிந்து கொண்டோம் என்பது தனிக்கதை) சரி, அவர் அந்த பதிவில் என்ன சொல்கிறார். என்.சி.இ.ஆர்.டி. என்று சொல்லப்படும் தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கவுன்சில் பாடப்புத்தகங்களில் பொய்யான வரலாறை சொல்கிறது ஏன் என்பது தான் தலைப்பு.

அவர் இந்த தலைப்பில் பதிவிட்ட விபரங்களை பார்ப்பதற்கு முன், ஒரு சில தகவல்களை தெரிந்து கொள்ள வேண்டியுள்ளது.

இந்தியாவில் எப்போதெல்லாம் இந்துத்துவ பாசிஸ்டுகள் ஆட்சிக்கு வருகின்றனரோ அப்போதெல்லாம் அவர்கள் முன்வைக்கும் முதல் கோரிக்கை வரலாற்றை திருத்த வேண்டும் என்பது தான். எந்த வரலாறை. ஆரியர்கள் இந்தியாவுக்கு கைபர், கோலன் கணவாய் வழியாக ஆடு, மாடு மேய்த்துக்கொண்டு வந்தேறிகளாக வாழ்ந்தவர்கள் என்பது. 2-வது முஸ்லிம்கள் இந்துக்களை ஆட்சி செய்கிறோம் என்ற பெயரில் கொலை செய்தனர், மதம் மாற்றினர், இந்து பெண்களை பாலியல் வன்புணர்வு செய்தனர், இந்துக்களுக்கான உரிமைகளை பறித்தனர். ஆனால் அவர்களை பற்றி வரலாற்று பாடப்புத்தகங்களில் உள்ள தகவல்களை நீக்க வேண்டும். அதாவது,




வரலாற்றை திருத்துவதன் மூலம் ஒரு சமூகத்தை குற்றவாளிகளாகவும், அவர்களது இருப்பை கேள்விக்குள்ளாக்குவது ஆகிய பணிகளை ஆர்.எஸ்.எஸ். கொள்கைக்கு ஏற்ப செய்ய வேண்டும் என்பதை கொள்கையாக கொண்டு செயல்படுகின்றனர்.

அந்த வகையில் தற்போது முழு பெரும் பான்மையுடன் ஆட்சிக்கு வந்தவுடன் அவர்கள் விருப்பம்போல வரலாற்றை திருத்த முற்பட்டனர். வரலாற்று நினைவு சின்னங்களை சிதைப்பது, வரலாற்று பெயர்களை அழிப்பது, பள்ளி, கல்லூரிப் பாடப் புத்தகங்களில் முஸ்லிம்களின் வரலாற்றை நீக்குவது என்ற செயல்களில் ஈடுபட தொடங்கினர். இதில் பாடப்புத்தகங்களை திருத்தும் முயற்சி கல்வியாளர்கள் மத்தியில் கடும் எதிர்ப்பை ஏற்படுத்தியதால் தங்களது சட்டவிரோத செயல்களை சட்டப்பூர்வமாக செய்ய திட்டமிடப்பட்டது.

இதற்காக, பாராளுமன்றத்தின் கல்விக்கான நிலைக்குழு வரலாற்று பாடப்புத்தகங்கள் பற்றிய ஆய்வில் ஈடுபடுத்தப்பட்டது. தங்களது ஆதரவு மீடியாக்கள் மூலம் என்.சி.இ.ஆர்.டி. பாடப் புத்தகங்கள் பல வருடங்களாக புதுப் பிக்கப்படாமல் உள்ளது என்ற கருத்து பரவலாக் கப்பட்டது. பின்னர் ஆர்.எஸ்.எஸ். ஆதரவு பெற்ற நபர்கள் மூலம் கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டது. அத்துடன் சமூக வலைத்தள பிரசாரங்கள் பரவலாக்கப்பட்டன. இந்த பின்னணியில் தான், கீர்த்தி இந்த பதிவை வெளியிட்டார்.

அவர் தனது பிரசாரத்துக்கு ஆதரவாக வட இந்தியாவை சேர்ந்த ஒருவர் என்.சி.இ.ஆர்.டி. வெளியிட்ட 12-ம் வகுப்பு வரலாற்று பாடப் புத்தகத்தில் முஸ்லிம் மன்னர்களான அவுரங்கசீப் மற்றும் ஷாஜகான் ஆகியோர் இந்து கோவில் களுக்கு மானியங்கள் வழங்கியுள்ளனர் என்ற தகவலுக்கு ஆதாரம் என்ன என்று தகவல் அறியும் உரிமைச்சட்டத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.

அதற்கு, தங்களிடம் எந்த ஆதாரமும் இல்லை என்று என்.சி.ஈ.ஆர்.டி. பதிலளித்துள்ளதாகவும், ஆதாரமில்லாத தகவல்களை வரலாற்று பாடப்புத்தகத்தில் இருந்து நீக்க வேண்டும் என்று கீர்த்தி கோரிக்கை விடுக்கிறார்.

ஆனால், உண்மையில் வரலாற்று ஆதாரங் களின் அடிப்படையில்தான் இந்த தகவல் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது என்பதை வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் அனைவரும் அறிவர். சரி, என்.சி.இ.ஆர்.டி. இப்படி ஒரு பதிலை தந்துள்ளதா என்பதில் நமக்கு பலத்த சந்தேகம் ஏற்பட்டது. இந்த தகவல் உண்மையா, பொய்யா என்பதை அறிவதற்கு முன்னர் நாமும் அதே கேள்விகளை என்.சி.இ.ஆர்.டி.யிடம் கேட்போம் என்ற அடிப்படையில், எந்த தகவலை தனது கருத்துக்கு வலுசேர்ப்பதாக நினைத்து கீர்த்தி பதிவிட்டாரோ அந்த நபர் கேட்ட கேள்விகளை அச்சு பிறழாமல் தகவல் அறியும் உரிமை சட்டத்தில் கேட்டோம். அதற்கு என்.சி.இ.ஆர்.டி.யின் சமூக அறிவியல் பிரிவு பதிலளித்தது. அதன் தலைவரே நம்முடைய கேள்விகளுக்கு இ.மெயில் மூலம் ஆதாரங்களையும் அனுப்பி தந்தார். அடுக்கடுக் கான ஆதாரங்கள்...அத்தனையும்...

மூல மொழியில் இருந்து மொழி பெயர்க் கப்பட்ட ஆவணங்களும், அசல் மூல மொழி ஆவணங்களும், ஆய்வுக்கட்டுரைகளும் என முஸ்லிம் மன்னர்கள் குறிப்பாக அவுரங்கசீப் கோவில்களுக்கும், கோவில் பூசாரிகளுக்கும் வழங்கிய மானியங்கள் குறித்த தகவல்கள்.

பிறகு எதை வைத்து, தகவல் அறியும் உரிமை சட்டத்தில் என்.சி.இ.ஆர்.டி. ஆதாரங்கள் இல்லை என்று கொடுத்ததாக ஒரு கடிதத்தை வீடியோவில் காட்டியுள்ளார் என புரியவில்லை. அப்போது, அந்த நபரின் பெயரால் கேட்கப் பட்ட தகவல்கள் உண்மை தானா என்பது குறித்து மீண்டும் என்.சி.இ.ஆர்.டி.க்கு தகவல் அறியும் உரிமை சட்டத்தில் கேள்விகளை அனுப்பினோம். பதில் இல்லை. ஒரு மாதம், 2 மாதம் கிட்டத்தட்ட 6 மாதங்களுக்கும் மேலாக பதில் இல்லை. முதல் மேல்முறையீடு,


2-ம் மேல்முறையீடு என செய்தும் பதிலளிக்க மறுத்து விட்டனர். சரி என்று மத்திய தகவல் ஆணையத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது.

அந்த மேல்முறையீட்டு வழக்கு விசாரணைக்கு வர எடுத்துக்கொண்ட காலம் கிட்டத்தட்ட 18 மாதங்கள். ஆன்லைன் மூலம் நேரில் விசாரணைக்கு ஆஜராகி வாதிட்ட போது, 3-ம் நபர் தகவல்களை தர முடியாது என விளக்கமளிக்கப்பட்டது. ஒரு அரசு நிறுவனம் சட்டப்படி பதிலளிக்க கடமைப்பட்டுள்ள நிலையில், மேல்முறையீட்டு விசாரணையில் எதிரான தீர்ப்பு வழங்கப்பட்டது.

இதற்கிடையே, 2024-25 கல்வியாண்டில் என்.சி.இ.ஆர்.டி.யின் 12-ம் வகுப்பு வரலாற்று பாடப்புத்தகத்தில் கீர்த்தி சர்ச்சை செய்த பாடம் முற்றிலும் நீக்கப்பட்டு விட்டது. சட்டத்துக்கு புறம்பான ஒரு விவகாரம் சட்டப் பூர்வமாக மேற்கொள்ளப்பட்டது. பாசிஸ்டு களின் நடைமுறை இதுதான் என்பது வரலாற்று பூர்வமாக நமக்கு தெரியும்.

இருப்பினும், இறைவனின் மீது நம்பிக்கை கொண்டவர்களாக, உண்மை வரலாறை இளம் தலைமுறையினர் தெரிந்துகொள்ள முடியா விட்டாலும், பொய் தகவல்களை முறியடிக்க வேண்டும் என்பதற்காக, கீர்த்தி தனது வீடியோவில் காட்டி பேசும் அந்த தகவல் அறியும் உரிமை சட்ட மனு குறித்த கோப்புகளின் விபரங்களை கேட்டு மீண்டும் என்.சி.இ.ஆர்.டி.க்கு மனு செய்யப்பட்டது. எதிர்பார்த்த படி, இது போன்ற ஒரு கோப்பு தங்களிடம் இல்லை என்று பதில் வந்தது. முதல் மேல்முறையீட்டிலும் இதே பதில் தான் கிடைத்தது. தற்போது மத்திய தகவல் ஆணையத்தில் வழக்கு தொடருவதற்கான நடவடிக்கைகள் தொடங்கியுள்ளது.

அரசு அலுவலகத்தில் கோப்பு இல்லை என்று சொல்வது நீதிமன்றங்களில் வழக்கு தொடரவும், அந்த துறையின் மீதான நம்பகத்தன்மையை கேள்விக்குறியாக்கவும் சாதகமாக அமையும் என்பதை அதிகாரிகள் என்றைக்கு உணர போகின்றனர்.





### அப்பாவி மக்கள் கொலை...

# அமெரிக்காவின் தாக்குதல் பற்றி ஏமன் நாட்டு பெண்கள்..!

எதிரி அமெரிக்கா ஹுத்தீஸ் மீது அப்பாவி களைக் கொலை செய்வதற்கே அதிக வேகம் காட்டுகின்றார்கள். அண்மையில் 28-4-2025 அன்று ஆப்பிரிக்கா நாட்டு வந்தேறிகளை வைத்திருந்த ஏமன் நாட்டின் தடுப்புக்காவல் மையத்தை தாக்கி இருக்கின்றார்கள். 68 ஆப்பிரிக்க நாட்டவர்கள் மரணம், 17 பேர் காயம்.

இது, அமெரிக்க இராணுவத்தின் திக்கற்ற நிலையை காட்டுகின்றது. இந்த போர்க்குற்றம் காட்டுகின்றது. இது அவர்களின் காட்டு மிராண்டித் தனத்தையே காட்டுகின்றது.

இது அமெரிக்கா ஒரு Cross Border Terrorist எல்லை தாண்டிய தீவிரவாத நாடு என்பதையே எடுத்துக்காட்டுகின்றது.

“நாங்கள் எந்த நிலையிலும் காஸா மக்களுக் காகப் போராடுவதைவிட்டுத் தந்திட மாட்டோம். எங்கள் உறுதியை எந்தக் கொம்பனாலும் அசைத்துவிட முடியாது.” என அறிவித்திருக்கின்றார்கள். ஹுத்தீஸ் என்ற இஸ்லாமியப் போராளிகள்.

**ஏமன் நாட்டு மக்கள் - பெண்கள்**

காஸாவாழ் மக்களுக்கு எதிராக எத்தனையோ சதிகள் நடந்து கொண்டிருக்கின்றன. அவற்றுள் ஒன்று ஏமன் நாட்டின் “ஹூத்தீஸ்” என்ற இஸ்லாமியப் போராளிகளின் உறுதியைக் குலைப்பதாகும்.

இதற்காகப் பல்வேறு உத்திகளையும் கையாண்டு வருகின்றார்கள். அதில் தலையாயது ஏமன் நாட்டு மக்களை இஸ்லாமியப் போராளி களுக்கு எதிராகத் திருப்புவது. இது இஸ்லாத்தை எதிர்ப்பவர்களின் நிரந்தர உத்தி!

ஏமன் நாட்டு மக்களை ஹூத்தீஸ் என்ற இஸ்லாமியப் போராளிகளுக்கு எதிராக திருப்பிட அங்குள்ள பெண்களிடம் பல கேள்விகளைக் கேட்டார்கள். அந்தக் கேள்விகள்,

**நீங்கள் ஏன் எங்கோ இருக்கும் பாலஸ்தீன மக்களுக்காக சாக வேண்டும்? நீங்கள் சும்மா இருந்திருந்தால் ஏமன் நாட்டின் பல பெண்களும் குழந்தைகளும் காப்பாற்றப்பட்டிருப்பார்களே? அன்றுவரை 1300 பேர் கொலை செய்யப்பட் டிருக்கின்றார்கள்.**

**இதற்கு அந்தப் பெண்கள் சொன்ன ஒட்டுமொத்தமான பதில்...**

இத்தனை நாளாக, அமெரிக்கா, சவூதி அரேபியா - ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகள் எங்கள் மீது குண்டுகளைப் போட்டன. குழந்தைகள், பெண்கள், வயோதிகர்கள் ஆகியவர் களை 7 ஆண்டுகளாகக் கொலை செய்தன. இப்போது அந்த இடத்தில், அமெரிக்காவும் இஸ்ரேலும் வந்திருக்கின்றன. எங்கள் நிலை காஸாவின் அளவுக்கு மோசமில்லை. எங்களுக்கு உணவும் தண்ணீரும் கிடைத்துக் கொண்டேதான் இருக்கின்றன. மரணம் எப்போதும், எங்களைத் துரத்திக் கொண்டேதானிருக்கின்றது. எங்கள் பெண்களும், குழந்தைகளும் காஸாவில் படுகொலைச் செய்யப்படும்போது நாங்கள் எப்படி வாளாவிருக்கவியலும். நாங்கள்

வாழ்விலும் சாவிலும் காஸா மக்களோடு இருப்போம்.

இந்த பதிலுக்குப்பின் பத்திரிகையாளர்களைப் போல் வேஷம் போட்ட சதிகாரர்கள் அங்கே நிற்க வில்லை. அந்தப் பெண்களின் பதில்கள் அவர்களின் மனதையும்தொட்டது. அதனால் அந்த மக்களின் உறுதியை உலகுக்கு உறுதியாகச் சொல்லிவிட்டு பிரகடனப்படுத்திவிட்டார்கள்.

இதே பெண்கள்தாம், முன்னர் நாங்கள் எங்கள் வீட்டுச் செலவுகளைக் குறைத்துக் கொண்டு இஸ்ரேலோடு நடக்கும் போருக்குப் பணம் தருகின்றோம் என்றார்கள்.

பின்னர் வீட்டு வாடகையாகத் தரும் பணத்தை அப்படியே போராளிகளுக்குத் தருகின்றோம். பணம் கை கூடும்போது வாடகையைத் தருகின்றோம். இதனை வீட்டின் சொந்தக்காரர் களிடமும் பேசிவிட்டோம் என்றார்கள்.

காஸாவில் பாலஸ்தீன முஸ்லிம்களை இஸ்ரேலும், அமெரிக்காவும், அதன் அடிவருடி களான ஐரோப்பியர்களும் பட்டினிப் போடு கின்றார்கள். ஆனால், ஏமனின் நாட்டுப் பெண்கள் தாங்களாகவே செலவைக் குறைத்துக் கொண்டு தங்களைத் தாங்களே பட்டினிப் போட்டுக்கொள்கிறார்கள் காஸா மக்களுக்காகப் போராடும் தங்கள் போராளிகளுக்கு உணவு தருகின்றார்கள்.

**ஈமானின் பலம்**

**இந்த ஏமன் நாட்டு மக்களின் ஈமானைப் பற்றித்தான் பெருமானார் (ஸல்) அவர்கள் இப்படிக் கூறினார்கள் :**

*இப்னு அப்பாஸ்(ரழி) அறிவித்தார்.*

*நபி (ஸல்) அவர்கள் முஆத் இப்னு ஜபல் (ரழி) அவர்களை ஏமன் நாட்டுக்கு அனுப்பி வைத்த போது அவரிடம் 'நீர் வேதம் கொடுக்கப்பட்ட மக்களிடம் செல்கிறீர். எனவே அவர்களை முதன் முதலில் இறை பால் அழைப்பீராக! அவர்கள் அல்லாஹ்வை ஏற்றுக்கொண்டால் றிந்தால் ஒவ்வொரு நாளும் இரவிலும் பகலிலுமாக ஐந்து வேளைத் தொழுகைகளை அல்லாஹ் அவர்களின் மீது கடமையாக்கியிருக்கிறான் என்பதை அவர்களுக்கு தெரிவிப்பீராக! தொழுகையை அவர்கள் நிறைவேற்றினால் அவர்களின் செல்வங்களிலிருந்து வசூலித்து அவர்களிடையேயுள்ள ஏழைகளுக்குக் கொடுக்க வேண்டிய ஸகாத்தை அல்லாஹ் அவர்களின் மீது கடமையாக்கியுள்ளான் என்று அவர்களுக்குத் தெரிவிப்பீராக!*

*அவர்கள் கட்டுப்பட்டால் அவர்களிடமிருந்து ஸகாத் பெறுவீராக! மக்களின் பொருட்களில் உயர்தரமானவற்றை வசூலிக்காதீர்! என்று கூறி அனுப்பினார்கள்.*

*ஸஹீஹ் புகாரி : 1458.*

*அத்தியாயம் : 24. ஸகாத்தின் சட்டங்கள்*

*இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:*

பெருமையும் கர்வமும் கிராமவாசிகளான நாடோடிகளிடையே காணப்படும். ஆடு மேய்ப் பவர்களிடையே அமைதியும் பணிவும் காணப் படும். இறைநம்பிக்கை ஏமன் நாட்டைச் சேர்ந்ததாகும். மதி நுட்பமும் ஏமன் நாட்டைச் சேர்ந்ததாகும்.

*அபூ அப்தில்லாஹ் புகாரியாகிய நான் கூறுகிறேன்:*

'ஏமன்' நாடு கஅபாவுக்கு வலப் பக்கம் அமைந்திருப்பதால் தான் அதற்கு 'ஏமன்' என்று பெயரிடப்பட்டது. 'ஷாம்' நாடு கஅபாவின் இடப்பக்கம் அமைந்துள்ளது. 'மஷ்அமா' என்ப தற்கு 'மய்ஸ்ரா' இடது என்று பொருள். இடக் கரத்திற்கு 'ஷுஃமா' என்பர். இடப் பக்கத்திற்கு 'அல் அஷ்அம்' என்பர்.

*ஸஹீஹ் புகாரி : 3499. அத்தியாயம் : 61.*

*அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:*

(மறுமை நாள் நெருங்கும்போது) ஏமன் நாட்டி(ன் திசையி)லிருந்து பட்டைவிட மென்மையான ஒரு காற்றை அல்லாஹ் அனுப்பு வான். எவரது உள்ளத்தில் "கடுகளவு" அல்லது "அணுவளவு" இறைநம்பிக்கை உள்ளதோ அவ(ரது உயி)ரை அது கைப்பற்றிக் கொள்ளும்.

இதை அபூஹுரைரா (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

*இந்த ஹதீஸ் இரு அறிவிப்பாளர்தொடர் களில் வந்துள்ளது. அவற்றில், அபூஅல்கமா அல்ஃபர்வீ (ரஹ்) அவர்களது அறிவிப்பில் "கடுகளவு" என்றும் அப்துல் அஸீஸ் பின் முஹம்மத் (ரஹ்) அவர்களது அறிவிப்பில் "அணுவளவு" என்றும் இடம்பெற்றுள்ளது.*

*ஸஹீஹ் முஸ்லிம் : 185. அத்தியாயம் : 1. இறைநம்பிக்கை*


vaigarai velicham official

உசைர் பின் ஜாபிர் (ரழி) அவர்கள் கூறியதாவது:

(கலீஃபா) உமர் பின் அல்கத்தாப் (ரழி) அவர்களிடம் ஏமன்வாசிகளின் உதவிப் படைகள் வந்தால், அவர்களிடம் "உங்களிடையே உவைஸ் பின் ஆமிர் (எனப்படும் மனிதர் ஒருவர்) இருக்கிறாரா?" என்று கேட்பார்கள்.

இந்நிலையில் (ஒரு முறை) உவைஸ் (ரஹ்) அவர்களிடம் உமர் (ரழி) அவர்கள் வந்து, "நீர்தான் உவைஸ் பின் ஆமிரா?" என்று கேட்டார்கள். அதற்கு உவைஸ் அவர்கள் "ஆம்" என்றார்கள்.

உமர் (ரழி) அவர்கள், "முராத் (மூலக்) கோத்தி ரத்தையும் பிறகு "கரன்" (கிளைக்) குலத்தையும் சேர்ந்தவரா (நீங்கள்)?" என்று கேட்டார்கள். அதற்கு உவைஸ் அவர்கள் "ஆம்" என்றார்கள். உமர் (ரழி) அவர்கள், "உங்களுக்கு வெண்குஷ்டம் ஏற்பட்டு, அதில் ஒரு திர்ஹம் அளவைத் தவிர மற்றது (உமது பிரார்த்தனை மூலம்) குணமாகிவிட்டதா?" என்று கேட்டார்கள்.

அதற்கும் உவைஸ் அவர்கள் "ஆம்" என்றார்கள். உமர் (ரழி) அவர்கள், "உமக்குத் தாயார் ஒருவர் இருக்கிறாரா?" என்று கேட்டார்கள். அதற்கு உவைஸ் அவர்கள் "ஆம்" என்று பதிலளித்தார்கள்.

உமர் (ரழி) அவர்கள் கூறினார்கள்:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "ஏமன்வாசிகளின் உதவிப் படையினருடன் "முராத்" (மூலக்) கோத்திரத்தையும் பின்னர் "கரன்" (கிளைக்) குலத்தையும் சேர்ந்த உவைஸ் பின் ஆமிர் என்பவர் உங்களிடம் வருவார். அவருக்கு வெண்குஷ்டம் ஏற்பட்டு, பின்னர் ஒரு திர்ஹம் அளவைத் தவிர மற்றவை குணமாயிருக்கும். அவருக்குத் தாயார் ஒருவர் இருப்பார். அவருக்கு உவைஸ் ஊழியம் புரிபவராக இருப்பார். அவர் அல்லாஹ்வின் மீது சத்தியமிட்டால், அல்லாஹ் அதை நிறைவேற்றி வைப்பான். (உமரே!) அவர் உமக்காகப் பாவமன்னிப்புக் கோரிப் பிரார்த்திக்க வாய்ப்புக் கிட்டினால் அவரைப் பிரார்த்திக்கச் சொல்லுங்கள்" என்று கூறினார்கள். ஆகவே, எனக்காகப் பாவமன்னிப்பு வேண்டி பிரார்த்தி யுங்கள்.

அவ்வாறே உவைஸ் (ரஹ்) அவர்களும் ....

ஸவ்பான் (ரழி) அவர்கள் கூறியதாவது:

நபி (ஸல்) அவர்கள், "நான் எனது ("அல் கவ்ஸர்") தடாகத்தில் நீர் அருந்தும் பகுதியில் நின்றுகொண்டு ஏமன்வாசிகளுக்(கு முன்னுரிமை அளிப்பதற்)காக மற்றவர்களை விரட்டுவேன். ஏமன்வாசிகளுக்குத் தண்ணீர் கிடைப்பதற்காக எனது (கையிலுள்ள) தடியின் மூலம் மற்றவர்களை அடிப்பேன்" என்று சொன்னார்கள்.

அப்போது நபியவர்களிடம் அத்தடாகத்தின் அகலம் குறித்து வினவப்பட்டது. அதற்கு அவர்கள், "அது, எனது வசிப்பிட(மான மதீனா நகர)த்திலிருந்து "அம்மான்"வரை உள்ள தொலைவிற்கு அகலமானதாகும்" என்றார்கள்.

அத்தடாகத்தின் பானம் குறித்து வினவப் பட்டபோது, "அது, பாலைவிட வெண்மை யானது; தேனைவிட இனிமையானது. சொர்க்கத் திலிருந்து நீளுகின்ற இரு வடிகுழாய்கள் அத்தடா கத்திற்குள் தொடர்ச்சியாகத் தண்ணீரைப் பாய்ச்சிக்கொண்டிருக்கும். அக்குழாய்களில் ஒன்று தங்கத்தாலானது; மற்றொன்று வெள்ளி யாலானது" என்று பதிலளித்தார்கள்.

இந்த ஹதீஸ் மூன்று அறிவிப்பாளர் தொடர்களில் வந்துள்ளது.

- மேற்கண்ட ஹதீஸ் ஸவ்பான் (ரழி) அவர்களிடமிருந்தே மற்றோர் அறிவிப்பாளர் தொடர் வழியாகவும் வந்துள்ளது.

அதில் "நான் மறுமை நாளில் (அல்கவ்ஸர்) தடாகத்தில் நீர் அருந்தும் பகுதியில் இருப்பேன்." என்று ஹதீஸ் ஆரம்பமாகிறது. மற்ற தகவல்கள் மேற்கண்ட ஹதீஸில் உள்ளதைப் போன்றே இடம் பெற்றுள்ளன.

- (அல்கவ்ஸர்) தடாகம் தொடர்பான மேற்கண்ட ஹதீஸ், ஸவ்பான் (ரழி) அவர்களிட மிருந்தே மற்றோர் அறிவிப்பாளர் தொடர் வழியாகவும் வந்துள்ளது. அதில் முஹம்மத் பின் பஷ்ஷார் (ரஹ்) அவர்கள் பின்வருமாறு கூறியதாக இடம்பெற்றுள்ளது:

நான் எனக்கு இந்த ஹதீஸை அறிவித்த யஹ்யா பின் ஹம்மாத் (ரஹ்) அவர்களிடம், "நீங்கள் இந்த ஹதீஸை அபூஅவானா (ரஹ்) அவர்களிடமிருந்தே செவியுற்றீர்களா?" என்று கேட்டேன். அதற்கு யஹ்யா (ரஹ்) அவர்கள், "இதை நான் ஷுஅபா (ரஹ்)



# கேள்வி பதில்

# டாக்டரைக் கேளுங்கள்..!


மருத்துவம் தொடர்பான உங்கள் கேள்விகளுக்கு முதியோர் நல மருத்துவர் டாக்டர்

**வி.எஸ்.நடராஜன்**

பதில் அளிக்கிறார்.


பத்திரிகையிலும் தொலைக்காட்சிகளிலும் இணையதளத்திலும் குறைவான சர்க்கரைச் சத்து, உப்புச்சத்து மற்றும் பி.பி. போன்ற செய்திகள் நிறைய வருகின்றன. ஆனால், இதுவரை எனக்குத் தெரிந்த அளவுக்கு கால்சியத்தைப் பற்றிப் பெரிதாக வெளிவந்ததாகத் தெரியவில்லை. கால்சியத்தின் பலன் என்ன, அது எதனால் குறைகிறது? அதற்கு என்ன சிகிச்சைகளைச் செய்ய வேண்டும் என்று கேட்க ஆவலாக உள்ளது.

**- திரு. பாண்டியன், அரியலூர். வயது 77.**

உங்களின் ஆவலைப் பூர்த்தி செய்வது எனது கடமை. நோய் வருவதற்கு முன்னரே அதைப் பற்றித் தெரிந்துகொள்ளும் உங்களின் ஆவலைப் பாராட்டுகிறேன்.

ரத்தத்தில் உள்ள சுண்ணாம்புச் சத்து 8.8 mg/dl அளவுக்கு குறைவாக இருந்தால், குறைவான சுண்ணாம்புச் சத்து (கால்சியம்) என்று தெரிந்து கொள்ளலாம்.

**பயன்கள்**

- இது பற்களையும் எலும்புகளையும் உறுதியாக வைக்க உதவுகிறது.
- நரம்பு மற்றும் சதைகள் உறுதியாக இருக்க உதவுகிறது.
- இதயம் சரியாக இயங்க உதவுகிறது.
- ரத்தக்கசிவு ஏற்பட்டால் அதை உறைய வைக்க உதவுகிறது.

**கால்சியம் குறைய என்ன காரணம்?**

- பரம்பரையாக வரலாம்.
- வைட்டமின் டி குறைபாடு.
- தைராய்டு சுரப்பி அகற்றிய பின்னர்
- பாரா தைராய்டு ஹார்மோன் குறைவாகச் சுரத்தல் (Hypoparathyroldism)
- போதிய சூரிய ஒளி இல்லாமை
- சிறுநீரகச் செயலிழப்பு
- மருந்துகள் - ஸ்டீராய்டு, குளோரோதின்

**அறிகுறிகள்...**

- வறட்சியான சருமம்
- கால்களிலும், முதுகிலும் சதைப் பிடித்தல்
- வறட்சியான நகங்கள்
- தலைமுடி கடினமாக இருத்தல்
- மனக்குழப்பம், மனச்சோர்வு
- வலிப்பு நோய்

**சிகிச்சை**

- சுண்ணாம்புச் சத்து மாத்திரையை 1 கிராம் அளவுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்.
- வைட்டமின் டி குறைவாக இருந்தால் மருத்துவரின் ஆலோசனையின்படி மாத்திரை எடுத்துக்கொள்ள வேண்டும்.
- சூரிய ஒளியில் தினமும் காலையில் 30 நிமிடமும், மாலையில் 30 நிமிடமும் இருத்தல் அவசியம்.
- பால் அல்லது தயிரைத் தினமும்

சற்று அதிகமாக சேர்த்துக்கொள்ள வேண்டும்.

பின்வரும் உணவு வகைகளை முடிந்தளவுக்கு உணவில் சற்று அதிகமாகச் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

- சிறு தானியங்கள்
- கீரை வகைகள் (உதாரணம் - முருங்கைக் கீரை, வெந்தயக் கீரை)
- கறிவேப்பிலை
- கொட்டை வகைகள் (உதாரணம் - பாதாம், முந்திரி)
- மீன், நண்டு, இறால்

பாண்டியன் அவர்களே, உங்களின் கேள்விக்குப் போதுமான பதிலை எழுதி உங்களின் ஆவலைப் பூர்த்தி செய்துள்ளேன் என்று எண்ணுகிறேன்.

❁ ❁ ❁

**வ**யதான காலத்தில் விக்கல் ஏற்படட்டால் அது உயிருக்கே ஆபத்தான அறிகுறி என்கிறார்கள். இது எந்த அளவுக்கு உண்மை? விக்கல் ஏற்பட்டவர்களிடம் திடீரென்று மிக்க அதிர்ச்சியைக் கொடுக்கும் செய்தியைச் சொன்னால் விக்கல் நின்றுவிடும் என்கிறார்களே, உங்களின் கருத்து என்ன?

**- திரு. பரமசிவம்,**
**ஆதம்பாக்கம், சென்னை. வயது 75.**

விக்கல் என்பது ஒருவருடைய உதரவிதானம். அவரை அறியாமலேயே துடிப்பதால் ஏற்படும் ஒரு சத்தமே ஆகும்.

உதரவிதானம் என்பது வயிற்றுக்கும் நெஞ்சுப் பகுதிக்கும் இடையில் இருக்கும் ஒரு மெல்லிய சதையாகும். இதை நம் விருப்பம் போல இயக்க முடியாது.

**விக்கலுக்குப் பல காரணங்கள் உள்ளன.**

- குளிர்பானங்கள் அருந்துவது.
- அதிக விரைவாக உணவு உண்பது.
- அதிக அளவுக்கு மது அருந்துவது.
- மன உளைச்சல்
- வயிற்றுப் புண்
- நீரிழிவு, சிறுநீரகம் மற்றும் கல்லீரல் செயலிழத்தல்



- சோடியம் மற்றும் பொட்டாசியம் குறைந்தாலோ, அதிகரித்தாலோ விக்கல் வரலாம்.
- மாத்திரை - தூக்க மாத்திரை, ஸ்டீராய்டு மாத்திரை
- நரம்பு சார்ந்த தொல்லைகள், உதாரணம் - பக்கவாதம், மூளையில் ஏற்படும் கட்டி.

எந்தக் காரணமுமின்றி விக்கல் ஒருசில மணித்துளிகள் மட்டுமே வந்து போவதைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை. விக்கல் தொடர்ந்து இருப்பின் உடனே மருத்துவரை நாட வேண்டும். முதலில் விக்கலுக்கான காரணத்தைக் கண்டறிந்து அதற்குத் தக்க சிகிச்சை அளிக்க வேண்டும். ஆனால், விக்கல் என்றாலே உயிருக்கு ஆபத்து என்று எண்ண வேண்டாம்.

விக்கல் தொடர்ந்து 24-48 மணிநேரத்துக்கு மேல் இருந்தால், காலம் தாழ்த்தாமல் மருத்துவரின் ஆலோசனையைப் பெற வேண்டும். சாதாரணமாக வரும் விக்கலுக்கு Baclofen மற்றும் Chlorpromazine மாத்திரையை மருத்துவர் பரிந்தரைப்பார். ஆனால், மருத்துவரின் ஆலோசனையின்றி மருந்துகளை எடுத்துக் கொள்ள வேண்டாம்.

ஒருசில மணித்துளிகள் ஏற்பட்டால் அது தானாகவே சிகிச்சையின்றிச் சரியாகிவிடும். ஆனால், விக்கல் தொடர்ந்து இருப்பின் அது நல்லதல்ல. கெட்டதுதான். உங்களுடைய யோசனைப்படி, சற்று அதிர்ச்சி தரும் செய்தியைக் கூறி, விக்கலோடு முதியவரின் உயிரையும் நிறுத்த நான் ஒரு காரணமாக இருக்க விரும்பவில்லை.

**நன்றி - முதுமை எனும் பூங்காற்று**

தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட், நீதி மற்றும் அமைதிக்கான மக்கள் இயக்கம், வைகறை வெளிச்சம் வாசகர் வட்டம் சார்பாக 27.04.2025 அன்று புதுக்கோட்டையில்

# பெருநாள் சந்திப்பு நிகழ்ச்சி...!















vaigarai velicham official









தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட், நீதி மற்றும் அமைதிக்கான மக்கள் இயக்கம், வைகறை வெளிச்சம் வாசகர் வட்டம் சார்பாக 27.04.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 10 : 30 மணியளவில் புதுக்கோட்டை தாஜ் மினி மஹாலில் வைத்து பெருநாள் சந்திப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் அரசியல் கட்சி பிரமுகர்கள், சமூக ஆர்வலர்கள், சகோதர சமுதாயத்தை சேர்ந்தவர்கள் சுமார் 130க்கும் மேற்பட்டோர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர். நிகழ்வு விருந்து ஏற்பாட்டோடு நிறைவடைந்தது.

# பொய்...

ஒரு மனிதனின் அனைத்து உறுப்புகளையும் பாவத்தின் பக்கம் இட்டுச் செல்லக்கூடிய ஒரு செயல்தான் அவன் பேசுகின்ற பொய்.

பொய் ஒரு கொடிய நோய். அது சத்தியத்தை அசத்தியமாக காட்டும். அசத்தியத்தை சத்திய மாகக் காட்டும். பொய் நிச்சயமாக தீமைக்கு வழிகாட்டும். தீமை நரகத்திற்கு அழைத்துச் செல்லும்.

ஒருவர் பொய் பேசிக்கொண்டே இருப்பார். இறுதியில் அல்லாஹ்விடத்தில் பெரும் பொய்யர் எனப் பதிவு செய்யப்படுவார் என முஹம்மது (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

நாவும் மர்மஸ்தானமுமே அதிகமான மனிதர்கள் நரகத்தில் நுழைவதற்குக் காரணங் களாக இருக்கின்றன என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

“அதிகம் பொய் கூறுகின்ற, அதிகம் பாவம் செய்கின்ற ஒவ்வொருவருக்கும் கேடுதான்” *(அல்ஜாஸியா-7)*

“நிச்சயமாக பொய்யை இட்டுக் கட்டுவ தெல்லாம் அல்லாஹ்வின் வசனங்களை நம்பா தவர்கள்தாம் இன்னும் அவர்கள்தாம் பொய்யர்கள்” *(அந்நஷ்ல்-105)*

பொய் பேசுவது நயவஞ்சகர்களின் பண்பாகும். முஹம்மது நபி (ஸல்) கூறினார்கள் :

“நயவஞ்சகனின் அறிகுறிகள் மூன்று பேசினால் பொய் பேசுவான். வாக்களித்தால் மீறுவான், நம்பினால் துரோகம் செய்வான்.

எவர்கள் மீது ஷைத்தான்கள் இறங்குகிறார்கள் என்பதை நான் உமக்கு அறிவிக்கட்டுமா?

பெரும் பொய்யனான ஒவ்வொரு பாவியின் மீதும் அவர்கள் இறங்குகிறார்கள்.

*- (அஷ்ஷுரா-221,222)*

முஹம்மது நபி (ஸல்) கூறினார்கள் :

“ஒரு குழந்தையை அழைத்து அந்த குழந்தை யிடம் நான் இன்னதை உனக்குத் தருவேன் எனக் கூறுபவர்கள் அதனைத் தரவில்லையென்றால் அவர் அங்கே ஒரு பொய்யைச் சொல்லி விட்டார்கள்.

“அடுத்தவர்களைச் சிரிக்க வைக்க வேண்டும் என்பதற்காக பொய்யான கதைகளைக் கதைப் பவனுக்கு சாவு உண்டாகட்டும், அவனுக்கு அழிவு காத்துக் கொண்டிருக்கின்றது.

“வேடிக்கையில் ஈடுபட வேண்டிய அவசிய மிருந்தும் பொய்யை விட்டுவிலகி இருப்பவனுக்கு சுவர்கத்தின் நடுவில் ஒரு வீடு கிடைக்கும் என நான் உறுதி அளிக்கிறேன் என முஹம்மது நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

“வேடிக்கை விவாதம் இவற்றில் பொய் சொல்வதை விட்டுவிடாதவரை ஒரு முஃமீன் முழுமையான ஈமான் பெற்றிட முடியாது. அவன் ஏனைய விவகாரங்கள் அனைத்திலும் உண்மையைப் பேசினாலும் சரியே”

“இரண்டு மனிதர்களுடைய வளமும் நின்று விடும் பொய்யும் நேர்மையற்ற வாக்குறுதியும் பொருளை விற்பனை உதவலாம். ஆனால், அது வருமானத்தைக் குறைத்துவிடும்.

ஒரு மனிதன் ஒரு பொய்யைச் சொன்னால் அந்தப் பொய் பின் வாசனை மலக்குகளை ஒரு மைலுக்கு அப்பால் நிறுத்தி விடுகிறது.

மூன்று பேரிடம் மறுமை நாளில் அல்லாஹ் பேசமாட்டான்.

1. செய்த தர்மத்தைச் சொல்லிக் காட்டுபவன்.

2. பொய் சத்தியம் செய்து தமது பொருளை விற்பனை செய்பவன்.

3. தமது கீழங்கியை (கணுக்காலுக்கு) கீழே இறக்கிக் கட்டுபவன்

என முஹம்மது நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

“விசுவாசிகளே, நீங்களும் அல்லாஹ்வுக்குப் பயந்து உண்மையான நேர்மையான வார்த்தை களையே கூறுங்கள்.

அவன் உங்களுடைய காரியங்களை உங்களுக்கு சீர்படுத்தி வைத்து உங்களுடைய குற்றங்களையும் மன்னிப்பான். அல்லாஹ்விற்கும் அவனுடைய தூதருக்கும் எவன் வழிபடு கின்றானோ அவன் நிச்சயமாக மகத்தான பெரும் பாக்கியத்தை அடைந்துகொள்வான்”

*(அல்அஹ்ஜாப் - 70,71)*

Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1 Mannady street, Mannady, Chennai - 600001. Editor M. Gulam Mohamed. Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFFSET PRINTERS,** 19/1, 21,2, Kitabath Khan Bhadur Street, chennai - 600 002